# அணிந்துரை

திருக்குறளுக்கு உரை கதைமூலம் திரு.கே.வி. குணசேகரம் எழுதியுள்ளார். முன்பு திருக்குறள்ப்பாக்கள் 1330 இற்கும் தனித்தனிக் கதைகள் எழுதி 24 புத்தகங்களாக வெளியிட்டவர். அதன் பின் 100 இற்கு மேற்பட்ட திருக்குறள்ப் பாக்களுக்கு இலக்கியநயமும் அதற்குப் பொருத்தமான கதைகளும் எழுதியவர். அதை விட 50 குறள்களுக்குப் புதிய உரை எழுதியவர். அவர் திருக்குறளுக்கு உரையைக் கதையாக எழுதியது எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. ஏனென்றால் அவர் ஆத்திசூடி, பகவத்கீதை, திருக்குறள், திருவருட்பயன், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, இன்னிலை, திரிகடிகம், ஆசாரக்கோவை, பழமொழி 400, சிறுபஞ்சமூலம், ஏலாதி, முதுமொழிக்காஞ்சி போன்ற நூல்களில் உள்ள அனைத்துப் பாக்களுக்கும் கதை எழுதியவர். அத்துடன் திருமந்திரம் என்ற சைவசித்தாந்த நூலின் 200 பாக்களுக்குக் கதை எழுதியவர். மிகுதியான பாக்களுக்குக் கதை எழுதிக்கொண்டிருக்கிறார். இதைவிட வேதங்கள், உபநிடதங்களைக் கற்று எழுதவாசிக்கத் தெரிந்த அனைவருக்கும் விளங்கக் கூடிய முறையில் இலகுவாக சமூகத்தில் நடைபெறும் சம்பவங்க;டாகக் கதை

எழுதியவர். அவர் எழுதிய நூல்கள் பலவற்றை வாசித்து அவருடன் விமர்சிப்பேன். அந்த நட்பு இப்போ திருக்குறளினை கதை மூலமான உரைக்கு அணிந்துரை எழுத வைத்துள்ளது.

கதைகள் மிக மிகப் பொருத்தமானதாகவே இருக்கின்றன. அவர் ஒரு குறளுக்குக் கதை எழுதினால் தான் சொல்லும் கருத்தைக் கதையால் உறுதி செய்து விடுவார். அது அவரது எல்லாக் கதைகளிலும் காணப்படும் அரிய பண்பாகும். உதாரணமாக மிகவும் சிக்கலான ஒரு குறளுக்கு அவர் எழுதிய உரையும், கதையும் என்னை வியக்க வைத்தது.

**"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய் வருத்தக் கூலி தரும்"**

இப்பாடலுக்கு அவரின் உரை பின்வருமாறு அமைகிறது. தெய்வத்தால் எதுவும் ஆகாது எனினும் முயற்சி செய்து உடலை வருத்தினானால் அவனது முயற்சிக்கேற்பக் கூலி கிடைக்கும். இதற்கு அவர் எழுதிய கதை. ஒருவன் சிவபெருமானை நினைத்துக் கடுந் தவம் செய்கிறான். அதனால் சிவபெருமான் அவரின் முன்தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்கிறார். அவன் தான் பெரும் கோடீஸ்வரனாக வேண்டும் என்று கேட்கிறான். சிவபெருமான் மகிழ்ந்து வரமளிக்கிறார். அவன் மகிழ்வோடு

வீட்டுக்கு வந்து செயற்படாமல் காத்திருக்கிறான். காலம் கடந்ததே தவிரப் பணம் கிடைக்கவில்லை. அதனால் அவன் மனம் வருந்தி மீண்டும் தவம் செய்கிறான். மீண்டும் சிவபெருமான் அவனுக்குக் காட்சி தருகிறார். அவன், “கடவுளே, நீங்கள் என்னைக் கோடீஸ்வரனாக்குவதாகக் கூறினீர்கள். இதுவரை நான் கோடீஸ்வரனாகவில்லை” என்று அழுதான். அப்போது சிவபெருமான் சொன்னார்’ “மகனே, முயற்சி செய்தல் வேண்டும். நீ செயலற்றிருக்கிறாய். ஏதாவது முயற்சியிலீடுபடு. அதிஷ்ட இலாபச் சீட்டை எடு பரிசை உனக்குத் தருகிறேன். இல்லாவிட்டால் மரம் நடுவதற்கு ஒரு குழியை வெட்டு அதனுள்ப் புதையலை வைக்கிறேன்” என்று கூறிவிட்டு மறைந்தார். இது ஐந்து பக்கக் கதை இதைச் சுருக்கமாகச் சொல்லியுள்ளேன். இக்குறள் மூலம் சைவசித்தாந்தத்தின் கடவுள்க் கொள்கையை விரிவாகக் கூறுகிறார்.

திருமந்திரக் கதைகள் அருமையிலும் அருமை. சிவனது செயல்களையும் சைவசித்தாந்த தத்துவங்களையும் சிறுவர்கள் கூடப் புரிந்து கொள்ள வைக்கும் தன்மை பாராட்டுக்குரியது. திருக்குறளின் உரையை அவர் கதை மூலம் எழுதும் போது உரையின்

சிறுபகுதி கூட விலகவில்லை. பாத்திரங்கள் உரையை வசனமாகப் பேசும் பாங்கு புதுமையானது: சுவையானது' உண்மையானது. தமிழுக்குப் பெருமை சேர்ப்பது. இது அவரது 100ஆவது நூல். ஏற்கனவே 67 நூல்களை வெளியிட்டுள்ளார். 30 இற்கும் மேற்பட்ட நூல்கள் அச்சேறக் காத்திருக்கின்றன. அதில் பழமொழி 400 என்ற நூலுக்கு எழுதிய பத்து நூல்கள் லங்கா பதிப்பகத்தினரால் தற்போது அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவர் திருவருட்பயனுக்கும், திருமந்திரத்திற்கும், பகவத்கீதைக்கும் கதை எழுத ஆரம்பித்த போது இந்நூல்களுக்கு எப்படிக் கதை எழுதுவது என்று பலரும் அதிசயப்பட்டனர். ஆனால் திருவருட்பயன் கதைகளை மிகவும் தரமான கதைகள் என்றும், சைவ சித்தாந்தக் கருத்துக்களுக்கு முழுமையான வடிவம் கொடுத்துள்ளதென்றும், கதைகளும் தத்துவங்களும் பொருந்தியுள்ளன என்றும், திருவாவடுதுறை ஆதீனம் சான்றிதழ் கொடுத்துள்ளது. அத்துடன் பகவத்கீதைக்கான கதைகள் அதிசயிக்கத்தக்க படி விற்பனை ஆகின. இவரது இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம் என்ற நூல் ஆறாவது பதிப்பாக வெளி வந்துள்ளது. இதை விட யாரும் எழுதாதவற்றையே ஆசிரியர் எழுதிவருகிறார். மாயை பற்றி எழுதிய கதைகள்

மாயை பற்றிய தத்துவங்களை அருமையாக விளக்குகின்றது.

கே.வி. குணசேகரம் அவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்து, அதிபராகப் பதவி வகித்து, கல்விப்பணிப்பாளரானவர். அதனால் சிறுவர்களின் மனநிலையை அறிந்து அவர்களின் வாசிப்பை மேம்படுத்தவே அவர் நூல்களை எழுதுகிறார். இவரது கல்விப் பணியும் அளப்பரியது. இவர் அதிபராகக் கடமை புரிந்த கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் கல்வியில் பல சாதனைகளை நிலை நாட்டியது. இவர் கல்விப் பணிப்பாளராக நல்லூர்க் கல்விக் கோட்டத்தில் 2005 முதல் 2009 வரை கடமையாற்றும் போது யாழ்ப்பாணத்தில் பெரும் யுத்தம் நடைபெற்றது. நவீன யுத்தக் கப்பல்கள், ஆகாய விமானங்கள், பீரங்கிகள் என்பன பாவிக்கப்பட்டன. அவ்வேளையில் மின்சாரம் இல்லை, நூல்கள் இல்லை, வசதிகள் இல்லை. ஆனால் நல்லூர்க் கோட்டம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் முதற் கோட்டமாகத் தெரிவாகியது. இவர் கல்வியாளர் மட்டுமல்ல கல்வியூட்டும் தாயான சரஸ்டவதிக்கொப்பானவர். இவரது கல்விச்சேவை தனித்துவமானது. அதுபோல எழுத்தும் தனித்துவமானது. யாராலும் இதுவரை எழுதப்படாதது. பகவத்கீதை, மகாபாரத யுத்தத்தில் உபதேசிக்கப்பட்டுப் பல ஆயிரம்

வருடங்கள் கழிந்து விட்டன. அத்தத்துவங்களுக்குப் பொருத்தமான கதைகளை யாரும் எழுதியதாக நான் அறியவில்லை. திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் உரை, விளக்கம், கதை என்று 700 சுலோகங்களுக்கும் எழுதியுள்ளார். உரை மிக மிக இலகுவானது. விளக்கம் அருமையானது. கதை பொருத்தமானது. இத்தகைய ஒரு மகான் எழுதிய நூலுக்கு அணிந்துரை வழங்க நான் முற்பிறப்பில் தவம் செய்திருத்தல் வேண்டும். திருக்குறள் என்ற நூல் உள்ளவரை கே.வி. குணசேகரம் அவர்களின் கதை மூலமான உரையும் நிலைத்து நிற்கும். திருக்குறளைப் போல இதுவும் பல்வேறு வகையான மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். திரு.கே.வி. குணசேகரம் அவர்கள் இன்னும் இன்னும் தமிழுக்கும் சமயத்திற்கும் கல்விக்கும் தொண்டாற்ற இறைவன் வழிவகை செய்தல் வேண்டும்.

மா.
ஆறுமுகதாசன்,

(வாசகர்)

## என்னுரை

திருக்குறள்ப்பாக்கள் 1330 இற்கும் தனித்தனிக் கதை எழுதி வெளியிட்டேன். பின்பு திருக்குறள் பாக்களுக்கு இலக்கிய நயம் எழுதினேன். அதன் பின்பு திருக்குறள் பாக்கள் சிலவற்றிற்குப் பொருத்தமான உரை எழுதினேன். இப்போது திருக்குறள் பாக்கள் 1330 இற்கும் உரையைக் கதை மூலம் எழுதியுள்ளேன். இலக்கியம் தோன்றிய காலம் முதல் மாறுபாடு அடையாது இருக்கிறது. மனிதன் மாறவில்லை ’ அவனது குணங்களும் மாறவில்லை. ஆனால் இலக்கியம் மாறுபாடு அடையாதிருந்து மனிதனின் வாழ்வை வளப்படுத்திக் கொண்டிருக்கிறது. சங்ககாலத்தில் எவ்வாறு மனிதர்கள் வாழ்ந்தார்களோ அப்படியே இன்றும் மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களது குணங்கள், செயல்கள், இயல்புகள் அன்றுள்ளன போலவே இருக்கின்றன. அன்று வாழ்ந்த மக்களுக்காக எழுதப் பெற்ற இலக்கியங்கள் இன்று வாழும் மக்களுக்கும் பொருந்துவனவாக இருக்கின்றன. அதற்குக் காரணம் இலக்கியங்கள் மனிதனின் மாற்றத்திற்கேற்பத் தாம் மாறாதிருந்து மனிதனைச் செம்மைப்படுத்துவது தான்.

வேதங்கள், உபநிடதங்கள், இதிகாச புராணங்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் யாவும் மனித மேம்பாட்டிற்காக அன்று எழுதப்பட்டன. அவை

தத்துவங்களாகவும் செய்யுள்களாகவும் இருப்பதால் அவற்றால் பெரும் பயனை மக்கள் எல்லோரும் பெறவில்லை. கற்றவர்கள் மட்டும் தெரிந்து கொண்ட தத்துவங்களைப் பாமரரும் அறிய வேண்டும் என்பதற்காகத் திருக்குறளுக்கும் ஏனைய பல நூல்களுக்கும் கதைகள் எழுதினேன். ஆத்திசூடி, திருக்குறள், பகவத்கீதை, திருமந்திரம், திருவருட்பயன், சிவஞானபோதம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பதினொன்று, வேத உபநிடத தத்துவங்களுக்குக் கதை எழுதினேன். இன்று எழுத வாசிக்கத் தெரிந்த அனைவரும் மேற்கூறப்பட்ட நூல்களின் தத்துவங்களை உணர்ந்துள்ளனர். இது நான் நினைத்ததற்கு ஏற்பட்ட வெற்றி என்றே கூறுவேன்.

இதுவரை தத்துவமாக இருந்த செய்யுள்கள் அனைத்தும் கதைகளாக்கப்பட்டுள்ளன. பல அறிஞர்கள் இவற்றிற்குக் கதை எழுத முடியாதென்று அடித்துக் கூறினர். அது பொய்த்து விட்டது. கதைகள் பொருத்தமானவை என்று திருவாவடுதுறை ஆதீனம் ஏற்றுள்ளது. அதனால் தான் திருக்குறளுக்கான உரையைக் கதை மூலம் எழுதினேன். இலங்கையில் உள்ள அறிஞர்கள் எனது எழுத்தைப் பற்றி இதுவரை எதுவும் கூறவில்லை. அதற்குக் காரணம் என்னவென்று தெரிந்தாலும் அதைப் பகிரங்கமாகக் கூற எனக்கு

விரும்பமில்லை. இது ஒரு புதிய முயற்சி : இது வரை யாரும் செய்யாத செயல். தவறுகள் பல இருக்கலாம். அறிஞர்கள் சுட்டிக்காட்டினால் அடுத்த பதிப்பில் திருத்தலாம்.

ஆறுமுகநாவலர் நிறுவிய பாடசாலையில் கற்ற நான் அங்கு அதிபராகப் பதினாறு ஆண்டுகள் பணிபுரிந்தேன். நாவலரின் மண்ணில் மிதித்ததால் நாவலரின் எழுத்து வன்மையைப் பெற்றேன். சமய உண்மைகளை உணர்ந்தேன். நான் அதிபராகக் கடமை புரியும் போது 1872ஆம் ஆண்டு நாவலரால் கட்டப்பட்ட இரு கட்டிடங்களுக்குள்ளே 600 மாணவர்கள் கற்றனர். நாவலர் மீது பற்றுள்ள சைவர்கள் எவரும் அப்பாடசாலையைப் பற்றி எண்ணாது இருந்தனர். 2010ம் ஆண்டு ஊவா மாகாண மக்கள் நாவலரின் பாடசாலையின் நிலையை உணர்ந்து இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டித் தந்தனர். நாவலர் பாடசாலைய நிறுவிய நாளில் இருந்து சைவ அபிமானிகள் எவரும் பாடசாலைக்கு உதவவில்லை. வெளியே இருந்து கதைபேசி மகிழ்ந்தனர். நாவலரின் கிருபையால் இன்று சகல வசதிகளையும் அரசிடம் முழுமையாகப் பெற்ற பாடசாலையாகத் திகழ்கிறது. விளையாட்டு மைதானத்தை நான் வாங்கினேன். அதை வாங்கும் போது பலமான எதிர்ப்பு

இருந்தது. நீதிமன்றம் சென்று தண்டப்பணமும் செலுத்தினேன். விளையாட்டு மைதானம் சபா நடேசன் என்பவரிடம் வாங்கப் பெற்றது. இதில் ஒரு தொகைப் பணம் என்னுடையது. பாடசாலையுள் ஒரு விநாயகர் கோயிலைக் கட்டிப் பிரதிஷ்டை செய்தேன். நாவலர் தனது சொந்தக் காணியில் பாடசாலையை நிறுவினார். அதற்கு உதவியாக அவரது மாணவர்கள் இருந்தனர். பாடசாலையில் நீர் இல்லாத நிலை இருந்தது. அதனால் நாவலரது பூமியில் நீர்த்தாங்கி ஒன்றையும் அமைத்தேன்.

இந்நூலை எழுத உற்சாகப்படுத்தியும் எழுத்துப் பிழைகளைத் திருத்தியும் தந்த ஆசிரியை கலா வித்தகர் செல்வி. ப. இறைமகளுக்கும் இதைக் கணனி மயப்படுத்தித் தந்த திருமதி. கௌசலா நாகராஜனுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன். இது மணிமேகலைப் பிரசுரத்தினரால் வெளியிடப்பட்டும் எட்டாவது நூல். அழகுடன் வெளியிட்ட மணிமேகலைப் பிரசுரத்தினர்க்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

நன்றி.

கே.வி.

குணசேகரம்

கோப்பாய்

மத்தி, கோப்பாய்

ஸ்ரீலங்கா.

**அறத்துப்பால்**
**பாயிரவியல்**

**அதிகாரம் 1. கடவுள் வாழ்த்து**

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 2

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 4

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 6

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்

மனக்கவலை மாற்றல் அரிது. 7

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீதந்தல் அரிது. 8

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. 9

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். 10

அன்று சூரியோதயம் காலை 6.24 இற்கு. கதிரேசன் அதற்கு முன் காலைக்கடன்களை முடித்து விட்டுக் கோயிலுக்கு வந்தார். பூசை ஆரம்பமானது.

“ஆதிபகவனே, எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலாக இருப்பது போல உலகிற்கு முதலானவனே, உனது திருவடிகளை வணங்காதவர்கள் பெரும் கல்வி கற்றாலும் அதனால் எதுவிதமான நன்மைகளையும் பெறமாட்டார்கள். மலர் மீது வீற்றிருக்கின்ற இறவைா, உன்னை இடைவிடாது நினைப்பவர்கள் நெடுங்காலம் இன்பமாக வாழ்வார்கள். விருப்பு, வெறுப்புக்கள் இல்லாத உன்னை நினைப்பவர்க -ளுக்கு வாழ்வில் எந்தத் துன்பமும் ஏற்படாது. கடவுளின் உண்மைத் தன்மையை முழுமையாக அறிந்து போற்றி வணங்குபவர்களுக்கு நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளும் சேர்வதில்லை. ஐம்பொறிகளின் வாயிலாக வந்து சேரும் ஆசைகளை நீக்கி உள்ளன்போடு தொழுபவர்களுக்கு நிலையான வாழ்வு வந்து சேரும். தனக்கு ஒப்புவமை இல்லாதவனான கடவுளின் திருவடிகளைத்

தொழுபவர்களுக்கு மனக்கவலைகள் எதுவும் இருக்க மாட்டாது. அறக்கடலான கடவுளது திருவடிகளை நினைக்காதவர்களால் உலக ஆசைகள் என்ற கடலைக் கடக்க முடியாது. கேட்க முடியாத காதுகள், பார்க்க முடியாத கண்கள் முதலியன போல எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவனுடைய தலையும் பயனற்றதாகும். இறைவா உனது திருவடியைச் சேர்ந்தவர்களால் தான் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியும். மற்றவர்களால் கடக்க முடியாது" என்று மனதுள் கூறி வழிபட்டார் கதிரேசன்.

**அதிகாரம் -02** **வான்சிறப்பு**

வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்று உணரற் பாற்று 11

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. 12

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி 13

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால். 14

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 15

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. 16

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். 17

சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்கு
மேல் வானோர்க்கும் ஈண்டு 18

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்காது எனின். 19

நீரின்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு. 20

கதிரேசன் பெரும் விவசாயி. அவரும், அவரது நண்பரான திருநாவுக்கரசுவும் வயலுக்குச் சென்றனர்.

"இம்முறை மழை பொய்த்து விட்டது. மழை பெய்வதனால் தான் உலகம் வளத்தோடு வாழ்கிறது. மக்கள் மகிழ்வுடன் வாழ்கின்றனர். அதனால் மழை உயிர்களுக்கு அமிழ்தம் போன்றது. உண்பவர்களுக்கு நல்ல உணவு வகைகளை உண்டாக்கிக் கொடுப்பதோடு, தானும் ஓர் உணவாகின்ற பெருமை மழைக்கு மட்டுமே உண்டு. மழை பெய்யாது விடுமானால் கடலால் சூழப்பட்ட இந்த உலகத்து உயிர்களைப் பசி வருத்தும். மழை வளம் குறைந்தால் உணவுப்பொருளை உண்டாக்கும் உழவர்கள் ஏர் கொண்டு உழ மாட்டார்கள். உரிய காலத்தில் பெய்யாமல் உயிர்களை வருத்துவதும் மழை, வருந்தும் உயிர்களைப் பெய்து வாழ்விப்பதும் மழைதான். வானம் இரங்கி மழை பெய்யாவிட்டால் பூமியில் தழைத்திருக்கும் பசும் புல்லும் கருகி அழிந்து விடும். தெய்வங்களுக்குச் செய்யும் பூசைகளும் நடைபெறாது. திருவிழாக்களும் நடைபெறாது. மழை பெய்யாவிட்டால் பிறர்பொருட்டுச் செய்யும் தானமும்,

தன்பொருட்டுச் செய்யும் தவமும் நடைபெறாது. எந்த நிலையில் உள்ளவர்களுக்கும், நீரில்லா விட்டால் உலக வாழ்வில் மகிழ்ச்சி இராது. ஒழுக்கமும் இல்லாமல் போய்விடும். இப்போ ஊரில் அதைத்தான் காண முடிகிறது" என்றார் கதிரேசன்.

## அதிகாரம் - 03 நீத்தார் பெருமை

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு 21

துறந்தார் பெருமை துணைகூறின் வையலத்து
இறந்தாரை எண்ணிக்கொண்டு அற்று 22

இருமை வகைதெரிந்து ஈண்டும் அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு 23

உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து 24

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி 25

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார் 26

சுவையொளி ஊறோசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு 27

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 28

குணம்என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது 29

அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுக லான். 30

நமசிவாயம் சுவாமிகள் அவ்வூரில் ஆச்சிரமம் அமைத்து அவ்வூர் மக்களுக்குத் தொண்டுகள் பலவும் செய்து கொண்டிருந்தார். அவர் மீது திருநாவுக்கரசுக்கு நம்பிக்கை இல்லை. மழைபெய்யாததால் மக்கள் அவரது ஆச்சிரமத்தைச் சூழ்ந்திருந்தனர்.

“சிறந்த ஒழுக்கமுடையவர்களாக வாழ்ந்து பற்றுக்களை விட்டவர்களின் பெருமையைச் சிறந்த நூல்கள் உயர்த்திச் சொல்லும்” என்பார்கள். பண்டிதர், நமசிவாயம் சுவாமிகளைப் பற்றி ஒரு நூல் வெளியிட்டுள்ளார். இவ்வுலகில் இறந்தவர்களைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. அதுபோலப் பற்றுக்களைத் துறந்தவர்களின் பெருமைகளையும் அளவிட்டுக் கூறமுடியாது. பிறப்பு, பிறவாமை என்ற இரு நிலைகளையும் உணர்ந்து துறவு கொண்டவர்களின் பெருமையே உலகில் உயர்வானது. வலிமை என்ற அங்குசத்தால் ஐம்பொறிகளான மத யானையை அடக்கி ஆள்பவனே வீடுபேற்றிற்கு விதையாகும் பெருமை உள்ளவன். ஐந்துபுலன்களாலும் வரும் ஆசைகளை ஒழித்தவனின் வல்லமைக்கு, வானுலகத்தலை - வனான இந்திரனே தகுந்த சாட்சியாவான். செயற்கரிய செயல்களைச் செய்து முடிப்பவர்களே பெரியோர். அவற்றைச்

செய்ய முடியாதோர் சிறியோராவர். சுவை, ஒளி, உறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்தின் வகைகளையும் ஆராய்ந்து உணர்ந்து கொண்டவனின் அறிவில் தான் உலகம் தங்கியுள்ளது. நிறைவான அறிவுள்ள பெரியவர்களின் பெருமையை, அவர்களுடைய வாய்ச் சொற்கள் அழியாமல் இருந்து உலகிற்குக் காட்டும். மலை போல உயர்ந்த பண்புகளை உடைய பெரியோர், ஒரு கணப்பொழுதே சினம் கொள்வர். ஆயினும் அதிலிருந்து ஒருவரைக் காத்தல் அரிது. எல்லா உயிர்களிடத்திலும் தூய்மையான மேலான அன்பு கொண்டுள்ளமையால், அந்தணர்களை அறவோர் என்று சொல்வர்" என்று பண்டிதர் எழுதியுள்ளார். மிகவும் அருமையான நூல் அது" அதை வாங்கிப்படி திருநாவுக்கரசு" என்றார் கதிரேசன்.

**அதிகாரம் - 04** **அறன் வலியுறுத்தல்**

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. 31

அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. 32

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல் 33

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. 34

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றதும் அறம் 35

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. 36

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை. 37

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அ∴தொருவன்
வாழ்நாள் வழி அடைக்குங் கல். 38

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல 39

செயற்பால தோரும் அறனே ஒருவர்க்கு
உயற்பால தோரும் பழி 40

அன்று ஆச்சிரமத்திற்கு வந்த மக்களுக்கு அருளுரை வழங்கினார் நமசிவாயம் சுவாமிகள்; "அன்பானவர்களே, கடவுளை நம்புங்கள். அதன்பின் உங்களை நம்புங்கள்.அதன் பின் தான தர்மங்கள் செய்யுங்கள். அறம் சிறப்பை அளிக்கும். செல்வத்தையும் அளிக்கும்; ஆதலால் உயிர்களுக்கு அறத்தை விட நன்மை பயப்பது வேறு எதுவும் இல்லை. அறத்தைப் போற்றினால் அளவற்ற நன்மைகள் கிடைக்கும். அது போல அறத்தைமீறினால் பெரும் தீமைகள் தான் வந்து சேரும். செய்யக் கூடியளவு செய்யக்கூடிய முறையில் செல்லுமிடமெல்லாம் அறத்தைச் செய்தல் வேண்டும். ஒருவன் முதலில் தன் மனதில் குற்றமில்லாது இருத்தல் வேண்டும். அதுதான் அறத்தின் ஆரம்பம். மனச்சுத்தமில்லாத செயல்கள்

யாவும் வெறும் ஆரவாரங்கள் தான். பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகியவற்றை விலக்கி வாழ்வதே அறவாழ்க்கை. எமக்கு இன்னும் வயதிருக்கிறது. முதியவர்களானதும் அறஞ்செய்வோம் என்று எண்ணாது தினமும் அறச் செயல்களைச் செய்யுங்கள். அது உயிர் பிரியும் போது கூடத்துணையாக வரும்.பல்லக்கைச் சுமந்து செல்பவனையும் பல்லக்கில் இருப்பவனையும் பார்த்து இது தான் அறத்தின் பயன் என யாரும் எண்ணக்கூடாது. ஒருவன் நாள்தோறும் தவறாது அறச்செயல்களைச் செய்வானாயின், அச்செயல்கள் அவன் மறுபடியும் பிறவி எடுக்கும் வழியை அடைக்கும் கல்லாகச் செயற்படும். அறத்தால் வருவது தான் உண்மையான இன்பம். மற்றச் செயல்களால் வருபவை இன்பம் போலத் தோன்றித் துன்பங்களையே தரும். அதனால் உள்ள புகழ் அழிந்து விடும். ஒருவர் தன் வாழ்நாளில் செய்ய வேண்டியது அறச் செயல்களே. செய்யாமல் விட வேண்டியவை தீவினையே. அதனால் இயன்றளவு அறச்செயல்களைச் செய்யுங்கள்" என்றார் சுவாமிகள்.

**அதிகாரம் - 05**

**இல்லறவியல்** **இல்வாழ்க்கை**

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. 41

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. 42

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை 43

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல். 44

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 45

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவ தெவன் 46

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை 47

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. 48

அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அ.்.தும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. 49

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். 50

அதிகாலையில் எழுந்த கதிரேசன் தனது தந்தையின் கடமைகளைச் செய்து கொண்டிருந்தார். அவ்விடத்திற்கு அவரது மனைவி அன்னபூரணி வந்து சொன்னாள்; "தன் பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூன்று தரப்பினர்களுக்கும் அறவழி நின்று உதவி செய்பவன் தான் இல்வாழ்வான். அவன் துறவிகள், ஏழைகள், யாரும் ஆதரவு இல்லாமல் தம்மோடு

தங்கியிருந்து இறந்தவர்கள் ஆகியோருக்கும் துணையாக இருத்தல் வேண்டும்” என்பீரகள். இன்று பௌர்ணமி அதிதிகளை மதிய உணவிற்கு அழைத்து வாருங்கள். தன் குடிப் பிறந்த முன்னோர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐவகையினரையும் காக்க வேண்டியது எமது கடன். அதனால் அவர்களையும் அழைத்து வாருங்கள். அறவழியில் பொருள்தேடி அதை பகுத்துக் கொடுத்து வாழும் வாழ்க்கை சிறப்புடையது என்றும், இல்வாழ்க்கை அன்பும், அறமும் உடையதாக இருந்தால் அதுவே பண்பும் பயனுமாகும் என்றும், ஒருவன் அறநெறி வழுவாது வாழ்ந்தால், அவன் துறவறம் மேற்கொள்ள வேண்டியதில்லை என்றும், அறவழியில் வாழ்பவன் பிறவழிகளில் வாழ்கின்றவர்களை விட மேம்பட்டவன் என்றும், தவம் செய்பவர்களைத் தமது வழியில் வாழச் செய்து தானும் தனக்குரிய அறநெறிப்படி வாழ்கின்ற வாழ்க்கை தவம் செய்பவர்களை விடச் சிறப்புடைய வாழ்க்கை என்றும், அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறம் என்றும், துறவறம் பிறரின் பழிக்கும், குற்றத்திற்கும் ஆளாகாது செய்யப்படல் வேண்டும் என்றும், உலகில் வாழ வேண்டிய அறநெறிப்படி இல்லறம் நடத்துபவன் விண்ணுலகத்துத் தெய்வத்தைப் போன்றவன் என்றும்” நீங்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். அது உண்மை என்று நாம் வாழ்ந்த வாழ்வின் மூலம் உணர்ந்து கொண்டேன்” என்றாள் அன்னபூரணி.

**அதிகாரம் - 06 வாழ்க்கைத் துணைநலம்**

மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை 51

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல் 52

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை 53

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப்பெறின். 54

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. 55

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் 56

சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை 57

பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. 58

புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. 59

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. 60

அன்னபூரணி திருநாவுக்கரசின் இனத்தவள். அவளைப் பற்றிக் கதிரேசனுக்கு விரிவாகக் கூறிய பின்பு தான் திருநாவுக்கரசு அவளை மணந்து கொள்ளும்படி கதிரேசனைக் கேட்டார். அவர் அன்று சொன்ன வார்த்தைகள் கதிரேசனின் காதுகளில் ஒலித்தன.

“கதிரேசு, குடும்பத்திற்கேற்ற பண்புகளுடன், தனது கணவனின் வருவாயை அறிந்து செலவுசெய்து, அதன் மூலம் மகிழ்ச்சியடைபவள் தான் குடும்பத்திற்குரிய பெண். குடும்பத்திற்குகிய நல்ல பண்புகள் மனைவியிடம் இருக்கா விட்டால், கணவன் எவ்வளவு பெருமைகள் உடையவனானாலும் பயனடைய மாட்டான். மாண்புடைய பெண்ணின் குடும்பத்திற்கு எந்தக் குறையும் இராது. மாண்பில்லாத பெண் உள்ள வீட்டில் எல்லாம் இருந்தாலும் அதை நல்ல முறையில் அனுபவிக்க முடியாது. அத்துடன் ஒரு பெண்ணிடம் கற்பு என்னும் உறுதியான நிலை இருக்குமானால், அந்தப் பெண்ணை விட மேம்பட்டவள் எவரும் இவ்வுலகில் இல்லை. தெய்வத்தை வணங்கா விட்டாலும் ஒரு பெண் தனது கணவனைத் தெய்வமாக மதித்தாளானால் அவள் தேவையேற்படும் போது பெய்யும் மழைக்குச் சமனானவளாவாள்”.

“கற்பு நெறியில் வாழ்ந்து, தன்னையும் காத்துத் தனது கணவனையும் மதித்து, தனது குடும்பத்தின் நற்செயல்களையும் காப்பாற்றுபவள் தான் உண்மையான மனைவி. பெண்கள்

தம்மைத் தாமே காத்துக் கொள்ள வேண்டுமே தவிர அவர்களைக் காவல் காக்க கூடாது. இவ்வகையான பெண்களைத் தேவர்கள் கூட மதித்துப் போற்றுவர். தனது புகழை விரும்பிக் காப்பாற்றும் மனைவியைப் பெறாத கணவனால் தன்னை இகழ்ந்து பேசும் பகைவர்கள் முன் சிங்கம் போலப் பெருமிதமாய் நடந்து கொள்ள முடியாது. குடும்பத்திற்கு மங்கலம் என்பது நல்ல குடும்பத்தில் பிறந்த பெண்ணை மனைவியாக அடைவது. அதற்கு நல்ல அணிகலன் என்பது நல்ல மக்களைப் பெறுதல். அன்னபூரணி மிகவும் நல்ல பெண். ஆனால் ஏழை. நீ திருமணம் செய்தால் அவளின் நிலை உயரும் உனது குலப் பண்புகள் வளரும்" என்றார். உயிர் நண்பனான திருநாவுக்கரசுவின் சொற்படி அவளை மணந்தார். இதுவரை அவருக்கு எந்தக் குறையும் ஏற்படவில்லை.

**அதிகாரம் - 07 புதல்வரைப் பெறதல்**

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற 61

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின் 62

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும். 63

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ் 64

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு 65

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் 66

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் 67

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 68

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 69

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல் 70

என்ன பெருத்த யோசனை?" என்றவாறு கதிரேசனின் தோளைப் பிடித்து உலுப்பினாள் அன்னபூரணி.

"ஒன்றுமில்லை. திருநா சொன்னதில் எந்தத் தவறும் இல்லை. நான் கொடுத்து வைத்தவன். நல்ல அருமையான மனைவி. அவள் மூலம் அருமையான புத்திரச் செல்வங்கள் ஐந்தைப் பெற்றிருக்கிறேன். அறிய வேண்டியவற்றை அறியக் கூடிய மக்களைப் பெறுவது தான் மிக உயர்ந்த செல்வம். எனது ஐந்து பிள்ளைகளும் பெரும் அறிவாளிகள். குணவான்களான பண்புள்ள பிள்ளைகளைப் பெற்றுத் தந்திருக்கிறாய். எனக்கு ஏழேழு பிறவியிலும் துன்பமே வராது.

பெற்றோர் தம்பிள்ளைகளைத் தம்பொருள் என்று பேருவகையுடன் கூறுவார்கள். பிள்ளைகள் நல்லவர்களாவதும், தீயவர்களாவதும் தாய் தந்தையரின் வளர்ப்பினாலேயாகும். பாகு பாடற்ற அன்பைச் செலுத்த வேண்டும். அதை அப்பிள்ளைகள் உணர்வார்கள். அன்பான பிள்ளைகள் சோற்றைப் பிசைந்து பெற்றோர்களுக்குக் கொடுத்தால், அச்சோறு அமிழ்தை விடச் சுவையானதாக இருக்கும். பிள்ளைகள் பெற்றோரைத் தீண்டுவதும், பெற்றோர் பிள்ளைகளைத் தீண்டுவதும் உடலுக்குச் சொல்ல முடியாத இன்பத்தைத் தரும். அவர்களது இனிய சொற்களைக் கேட்பது செவிக்குப் பேரின்பத்தைத் தரும். அத்துடன் தனது பிள்ளைகளின் மழலைச் சொற்களைக் கேட்காதவர்கள் தான் குழலும், யாழும் இனிதென்று கூறுவார்கள். இதற்காகத்தான் நான் எனது பெற்றோருக்குச் சேவை செய்கிறேன்" என்று பூரித்தார் கதிரேசன்.

"உங்களை நினைக்க எனக்குப் பூரிப்பாக இருக்கு. கற்றவர் அவையிலே எல்லோருக்கும் முன்னாக இருக்கத் தக்க வகையில் தன் மக்களைக் கல்வியில் மேம்பட்டவர் - களாக்குவதே ஒரு சிறந்த தந்தை தம் மக்களுக்குச் செய்யும் உதவியாகும். எங்கள் மூத்த மகன் ஆரூரன் பெரும் வைத்தியன். நாட்டு மக்கள் அனைவரும் அவனைப் பெரும் நிபுணன் என்கின்றனர். இரண்டாவது மகன் சுந்தரன் திறமை மிக்க ஆசிரியன் என்ற பெயரைப் பெற்றுள்ளான். மூன்றாவது மகன் பொறியியலாளன். அபிராமியும், கஜேந்திரனும் நல்ல

நிலைக்கு வருவார்களென ஊரவர்கள் சொல்கிறார்கள். இதெல்லாம் உங்கள் திறமைதானே…” உணர்ச்சிவசப்பட்டாள் அன்னபூரணி.

“இதில் பெரும் பங்கு உன்னுடையது. மனைவி மாண்புடையவளாக இருந்தால் தான் இவை யாவும் நடைபெற்றன. பெற்றோரை விடப் பிள்ளைகள் சிறந்த அறிவுடையவர்களாக விளங்குவது இவ்வுலக உயிர்களுக்கு இன்பத்தைத்தரும். நீ இருக்கும் நிலையைப் பார்த்தால் அவர்களைப் பெற்றபொழுது கூட இவ்வளவு மகிழ்ச்சிய - டையவில்லை. பிள்ளைகள் மதிக்கபட்டால் முதலில் மகிழ்வது தாய் தான். பெற்றோர் தம் பிள்ளைகளுக்குக் கடமை செய்தல் வேண்டும். பிள்ளைகள் அதற்குக் கைம்மாறு செய்தல் வேண்டும். நாம் எமது கடமையைச் சரிவரச் செய்தோம். பிள்ளைகள் அதற்குக் கைம்மாறு செய்து விட்டார்கள். இப்போது ஊரில் அவர்களைப் பற்றித்தானே பேசுகிறார்கள். இத்தகைய பிள்ளைகளைப் பெற நாம் தவம் செய்திருக்க வேண்டும் என்கிறார்கள். கடமை தவறாது வாழ்தல்தான் தவம். நான் அதைத் தான் செய்தேன்” என்று உணர்ச்சி வசப்பட்டார் கதிரேசன். அவரது கண்கள் நிரம்பியமையால் அவருக்கு மனைவியைத் தெரியவில்லை.

**அதிகாரம் - 08** **அன்புடைமை**

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 71

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு 72

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு 73

அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 74

அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு 75

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அ஀தே துணை. 76

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். 77

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. 78

புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு 79

அன்பின் வழியது உயிர்நிலை அ஀திலார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு 80

“பூரணி குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தாம்மா…” என்றவாறு வந்தார் திருநாவுக்கரசு.

“நான் வர நினைத்தனான். நீ வந்துவிட்டாய். ஆரூரன் இன்று மிகவும் சிக்கலான ஓர் இருதய சத்திரசிகிக்சை செய்து பெரிய சாதனை செய்துள்ளான்” என்றார் கதிரேசன்.

திருநாவுக்கரசால் எதுவும் பேசமுடியவில்லை. கண்கள் கசிந்து நீரைப் பெருக்கின.

திருநாவுக்கரசுடன் பேச முடியாது தத்தளித்தாள் அன்னபூரணி. அவளது கண்களாலும் நீர் வழிந்தது; “இது நீங்கள் தந்த வாழ்க்கை” மேலே பேச முடியாது அவதிப்பட்டாள் அன்னபூரணி.

இருவரது கண்களாலும் சொரியும் கண்ணீரைக் கண்டு மெய்மறந்து போனார் கதிரேசன்.

“நான் மிகவும் மகிழ்ச்சியடைந்த நாள் இன்று தான்’ பேசச் சிரமம்பட்டார் திருநாவுக்கரசு.

“அன்பில்லாதவர்கள் தமக்கு மட்டும் தான் உரியவர்கள். அன்புள்ளவர்கள் உலகிற்கு உரியவர்கள். உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பை வலுப்படுத்துவது அன்பு. அதுதான் வாழ்க்கையின் பயன். அன்பு எல்லோரிடமும் விருப்பமுடையவர்களாக வாழும் தன்மையை உருவாக்கும். அதனால் உயரிய நட்பு ஏற்படும். அன்பு தான் வாழ்க்கையை

உயர்த்தி மேன்மையடையச் செய்யும்” என்று பெரியவர்கள் கூறுவது உண்மையென்று நினைத்தார் கதிரேசன்.

“ஆரூரன்பெரும் நிபுணனாவான் என எனக்கு முன்பே தெரியும். இன்னும் சாதிப்பான்” என்றார் திருநாவுக்கரசு.

“சரி, கையைக் கழுவிவிட்டுவா. இன்று விசேட உணவு” என்றார் கதிரேசன்.

“கதிரேசன் அன்பானவர்; மென்மையானவர்; பிரச்சினைக்குப் போகாதவர். என்று தான் நினைத்திருந்தார் திருநாவுக்கரசு. ஆனால் அன்புக்காக அவர் எதையும் தயங்காது செய்வார் என்ற உண்மை அவருக்குச் சிலநாட்களுக்கு முன்பு தான் தெரிந்தது. கதிரேசனின் இரத்த உறவினரில் ஒருவன் திருநாவுக்கரசுடன் எந்நாளும் பிரச்சினைப்படுவான். அவனுக்குக் கதிரேசு புத்திமதிகள் சொல்வார். அன்று அவன் திருநாவுக்கரசுக்கு அடித்து விட்டான். அதைக் கேள்விப்பட்ட கதிரேசன் அவனை மூர்க்கத் தனமாகத் தாக்கிவிட்டார். ஊரவர்கள் இல்லாவிட்டால் கொலையும் செய்திருப்பார். அதை நினைக்கத் திருநாவுக்கரசிற்கு மெய் சிலிர்க்கும். அன்பு வீரத்தையும் உண்டாக்குமென்று அவருக்கு அப்போது தான் புரிந்தது. அன்பு தான் வாழ்க்கை. அன்பில்லாதவர்கள் வெயிலில் துடிதுடிக்கும் புழுப்போலத் துடிதுடிப்பார்கள். அன்பில்லாதவர்களை அறக்கடவுள் தண்டிப்பார். அவர்கள் பாலை வனத்தில் உள்ள பட்ட மரத்திற்கு ஒப்பானவர்கள். அன்பில்லதவர்களிடம் உள்ள செல்வம் அவர்களுக்கு

உதவாதது போல அவர்களது உறுப்புக்களும் அவர்களுக்குதவாது. அன்புள்ளவர்கள் தான் உயிருள்ளவர்கள் மற்றயோர் தோலால் மூடப்பட்ட எலும்புகள்" என்று நினைத்தார் திருநாவுக்கரசு. "கதிரேசனின் பூரண அன்பைப் பெற்ற நான் பெரும் பாக்கியசாலி. என்னை யாராலும் கெடுக்க முடியாது" என்றும் நினைத்தார் திருநாவுக்கரசு.

**அதிகாரம் - 09 விருந்தோம்பல்**

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு 81

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று 82

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. 83

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். 84

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம். 85

செல்விருந்து ஓம்பி வருவிருந்த பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு 86

இனைத்துணைத்து என்பதொன்று இல்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 87

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். 88

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. 89

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து 90

"அரோகரா" எனக் கூறியபடி பத்துப் பதினைந்த பேர் கதிரேசனின் வீட்டுக்கு வந்தனர்.

"கதிர்காமம் யாத்திரை செல்லப் போகிறோம். உங்களது வீட்டுக்குத்தான் முதலில் வந்தோம்.." என்றார் வந்தவரொருவர்.

"கால், கை ,முகம், கழுவுங்கோ சாப்பிட்டு விட்டுப் போகலாம்" என்றார் கதிரேசன்.

"இவ்வளவு பேருக்கும் சாப்பாடு இருக்கா" முன்பு கேட்டவர் கேட்டார்.

"இல்லறத்தில் மனைவியோடு இன்புற்று வாழ்வது விருந்தினரை உபசரிக்கவே. பசித்தோரை உணவு கொடாமல் அனுப்பக்கூடாது. இருங்கள் உணவு தயாரித்து விடுவோம்" என்றார் கதிரேசன்.

"அமுதமாக இருந்தாலும் கதிரேசன் தனித்துச் சாப்பிடமாட்டார். தன்னை நாடி வருபவர்களுக்குகுச் சுவையான

உணவும் அவர்களின் தேவையை அறிந்து உதவிகளும் செய்வதால்தான் கதிரேசன் பேரோடும் புகழோடும் குறைவில்லாத செல்வத்துடனும் வாழ்கிறார். முகம் மலர்ந்து, வருபவரை வரவேற்பதால் அவரது வீட்டில் திருமகள் குடியிருந்து செல்வத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கிறாள். அவர் விருந்தினரைப் பேணி உபசரிப்பதால் வயல்கள் நல்ல விளைச்சலைக் கொடுக்கின்றன. வித்திடாத நிலமும் விளைகிறது" என்றார் இன்னொருவர்.

"வந்தவர்கள் வயிறாற உண்டபின் சென்று விட்டனர். கதிரேசன் தான் உண்ணாது இருந்தார்,

"வாருங்கோ சாப்பிட" என்று அன்னபூரணி அன்புடன் அழைத்தாள்.

"சிவகுருவையும் நடராசாவையும் வரச் சொன்னான். அவை வரட்டும்" என்றார் கதிரேசன். அவர்கள் வராமல் அவர் உண்ணமாட்டார் என்பது அன்னபூரணிக்குத் தெரியும்.

"கதிரேசன் விருந்தோம்பலின் பயன் தெரிந்தவர். எவ்வளவுக்கெவ்வளவு விருந்தினரைப் பேணுகின்றோமோ அவ்வளவிற்கவ்வளவு பயன் கிடைக்கும். அதனால் தான் அவர் வர மறுக்கிறார்" என்றார் திருநாவுக்கரசு.

"விருந்தளித்தல் என்பது வேள்வி. செல்வம் இருக்கும் போது விருந்தோம்பல் என்ற வேள்வியை மேற்

கொள்ளாதவர்கள், வறுமையடையும் போது அதற்காக வருந்துவர். விருந்தோம்புவோர் வறுமையடைய மாட்டார்கள். செல்வந்தர்களுக்கு வறுமை என்பது விருந்தோம்பாதி -ருத்தலே. வரும் விருந்தினரை மகிழ்வில்லாமல் வரவேற்று வேண்டா வெறுப்பாக உபசரிப்பதால், அவர்களது முகம் முகர்ந்தால் வாடி விடும் அனிச்சம் பூவைப்போல வரவேற்பவரின் செயல்களால் வாடி விடும். அதற்காகத் தான் நான் உண்ணாமல் காத்திருக்கிறேன்" என்றார் கதிரேசன்.

**அதிகாரம் - 10 இனியவை கூறல்**

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல் 91

அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின். 92

முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம். 93

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 94

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி அல்ல மற்றுப் பிற 95

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 96

நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல் 97

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும். 98

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 99

இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. 100

சிவன்கோயிலில் நிர்வாகம் கலைக்கப்பட்டுப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. சிவன் கோயிலுக்கு வாரி வழங்குபவர் பரம சிவம். அவர்பெரும் வர்த்தகர். தான தர்மங்களை விருப்போடு செய்பவர். ஆனால் முன்கோபி. நியாமானவற்றைத் திமிருடன் பேசுவார். திருநாவுக்கரசு பெரும் தனவந்தரல்ல. பெரிதாக எதுவும் கொடுக்க வசதியில்லாதவர். ஆனால் சினக்காது அன்பாக ஆறுதலாக அமைதியாகப் பேசுவார். அதனால் அவ்வூரவர் அவரை மதித்து நடந்தனர். கோயில் தலைவராக மக்கள் திருநாவுக்கரசரைத் தேர்ந்தெடுத்தனர். அது பிடிக்காததால் தனது நண்பர்களுடன் சேர்ந்து குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தார் பரமசிவம்.

அவ்வூரின் பிரபலமான பாடசாலையின் அதிபர் தணிகாசலம், அவர் சொன்னார்; “பரமசிவம், அள்ளி அள்ளிக் கொடுப்பவர்களை விட அன்பாகப் பேசிப்பார் உன்னை மக்கள் தமது தலையில் தூக்கி வைப்பார்கள். அறநெறிப்படி வாழ்வோரின் சொற்கள் எப்பொழுதும் இனிமையாகவே

இருக்கும். விருப்புடன்தான தருமம் செய்வதை விட இனிய சொற்களைப் பேசுவதே சிறப்பானது. முகமலர்வுடன் பேசுவது தான் அறம். அது கொடையை விட உயர்வானது. இவர்களுக்கு வறுமையோ ஏனைய துன்பங்களோ வர அறக்கடவுள் விடமாட்டார். பணிவுடன் இனிய சொற்களைப் பேசுவதே மனிதனின் அணிகலன். இனிய சொற்கள் பேசுபவனின் பாவத்தைக் குறைக்கும். அதனால் அவன் பெரும் நன்மைகளைப் பெறுவான். அது தான் இன்று நடந்துள்ளது. இனிமையான சொற்களைப் பேசினால் வாழ்நாள் முழுவதும் இன்பம் உண்டாவதோடு , மறுமை வாழ்வும் இன்பத்தைத் தரும். எனவே இனிமையான இன்சொற்களைப் பேசிப் பழகு. மக்கள் உன்மீது அளவில்லாத அன்பை வைத்து உன்னைக் கடவுளாக வணங்குவார்கள். கனிகளான இன்சொற்களை விட்டுக் காய்களான வன்சொற்களைப் பேசாதே. பதவி, அந்தஸ்து, பணம், சுற்றம், கௌரவம், மதிப்பு என்பவை வரவேண்டும் என்று நினைப்பவர்கள் மறந்துங்கூட வன்சொற்களைப் பேசக்கூடாது" என்றார் தணிகாசலம்.

**அதிகாரம் - 11 செய்ந்நன்றி அறிதல்**

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. 101

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது 102

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது. 103

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். 104

உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து 105

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு 106

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு 107

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று 108

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும். 109

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகர்க்கு. 110

பரமசிவம் தலைவராக வருவதை நான் விரும்ப மாட்டேன்" என்று ஆவேசத்துடன் கத்தினான் வடிவேலன்.

"அதைக்கேட்ட பரமசிவம் சொன்னான்; "அடுப்புக்கை பூனை படுத்திருக்கு. நானில்லாட்டி நீயும் உன்ரை குடும்பமும் மண்ணோடு மண்ணாகியிருக்கும். ஒவ்வொரு நாளும் இரக்கிறது. ஆனால் கதையென்றால்...." என்று வடிவேலனுக்கு அடிக்கப்போனார் பரமசிவம்.

"வடிவேலு, உனக்கு அறிவிருக்கா? காலையும், மாலையும் பரமசிவத்தின்ரை சாப்பாட்டைச் சாப்பிடுகிறாய்.

அதற்கு அவர் ஏதாவது எதிர்பார்க்கிறாரா...? வடிவேலு நாம் எந்த உதவியும் செய்யாதிருக்கும் போது ஒருவர் கைம்மாறு கருதாது உதவி செய்தால் அவ்வுதவி விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் விடப் பெரியது. செய்யப்படும் உதவி சிறிதானாலும் அது தேவையேற்படும் போது செய்யப்பட்டால் அது உலகத்தை விடப் பெரியதாகும். பயன்கருதாது செய்யப்படும் உதவி கடலைவிடவும் பெரியது. தினையளவு உதவியை ஒருவர் செய்தாலும், அதைப் பெரியவர்கள் பனையளவாகக் கொள்வர். அத்துடன் உதவியானது உதவி பெறுபவரின் தகுதியைப் பொறுத்ததே தவிர பொருளைப் பொறுத்ததல்ல. வடிவேலா, துன்பம் ஏற்பட்ட போது உதவி செய்தவரின் நட்பை எவ்வேளையிலும் போற்றுதல் வேண்டும். அவர் தீமை செய்தாலும் அதைப் பெரிதுபடுத்தக் கூடாது. பெரியவர்கள் தமக்கு உதவி செய்தவரைத் தாம் எடுக்கும் பிறவிகளில் கூட மறக்கமாட்டார்கள். நன்மையை மறப்பது அறமாகாது. அது போல அவர் செய்த தீமையை நினைப்பதும் அறமாகாது. உதவி செய்தவர் தீமை செய்தால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் முன்பு அவர் செய்த நன்மைகளை நினைத்தால் அத்துயரம் போய்விடும். எந்த அறத்தை மறந்தவரும் தப்பிப் பிழைக்கலாம். ஆனால் செய்ந்நன்றி மறந்தவனுக்கு மன்னிப்பே இல்லை. அதனால் நீ பரமசிவத்திடம் மன்னிப்புக் கேள்” என்றார் தணிகாசலம்.

“தணிகாசலம் சொன்னதும் வடிவேலன் மறுபேச்சுப் பேசாது பரமசிவத்தின் கால்களில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கோரினான்.

“பரமசிவம், அன்புக்கு மிருகங்கள் கூடக்கட்டுப்படும். அதனால் நீ அன்புடன் இனிமையாகப் பேசு” என்றார் தணிகாசலம்.

**அதிகாரம் - 12 நடுவுநிலைமை**

தகுதி யெனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட் டொழுகப் பெறின். 111

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து. 112

நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 113

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும். 114

கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சகத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி. 115

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுவுஒரீஇ அல்ல செயின் 116

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு 117

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்

கோடாமை சான்றோர்க்கு அணி. 118

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின். 119

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின் 120

கதிரேசனிடம் நிமலன் வந்து சொன்னான்; "ஐயா, நீங்கள் நடுவுநிலை தவறாத பெரியவர். நான் பரமசிவத்தின் கணக்கு எழுதும் ஊழியன். பரமசிவத்தின் மைத்துனன் செய்யும் மோசடிகளை நான் தடுப்பதால் அவன் என்னைப் பற்றித் தவறாகப் பரமசிவத்திற்குக் கூற, அவர் அதை நம்பி என்னை வேலையில் இருந்து நீக்கி விட்டார். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. செய்யாததைச் செய்ததாக் சொல்வது எனக்கு வேதனையைத் தருகிறது. நீங்கள் எனது நிலையைப் பரமசிவத்திற்கு விளக்கமாகக் கூறுங்கள்" என்று அழுதான். நிமலனைப் பற்றியும் அவனது குடும்பத்தினரைப் பற்றியும் நன்கு அறிந்தவர் கதிரேசன். அதனால் திருநாவுக்கரசுவையும் அழைத்துக் கொண்டு பரமசிவத்தின் வீட்டுக்குச் சென்றார். பரமசிவம் இருவரையும் அன்புடன் வரவேற்று ஆசனத்தில் அமர்த்தினார்; "நிமலன் மிகவும் நல்லவன். நல்ல குடும்பத்தில் பிறந்தவன்" என்று கூறும்போது பரமசிவம் குறுக்கிட்டுச் சொன்னார்; "ஐயா, நீங்கள் நல்லவர். அதனால் எல்லோரையும் எளிதில் நம்பிவிடுவீர்கள். அவன் நல்லவனல்ல. பல விடயங்களில் அவன் என்னுடன் முரண்பட்டிருக்கிறான்"

“முரண்படுவதற்கும் நல்ல குணத்திற்கும் வேறுபாடு உண்டு. மேலாளர் என்பவர் வேலை செய்பவர், நண்பர், பகைவர், சுற்றத்தினர் என எத்தரப்பினராக இருந்தாலும் நடுவுநிலையோடு நடத்தல் வேண்டும். அதுதான் அறம். அதனால் தான் நடுநிலையாளனின் செல்வம் பரம்பரை பரம்பரையாக நிலைத்து நின்று பயன்தரும் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நன்மை தந்தாலும் நடுநிலை தவறுவதால் வருகின்ற செல்வத்தைக்கூட நிமலனின் பரம்பரையினர் ஏற்பதில்லை.நடுவு நிலையில் நிற்பவரின் புகழ் வளரும். அந்தப் புகழ் எந்தப்பழியாலும் அழியாது. இன்பமும் துன்பமும் வாழ்வில் மாறி மாறி வரும். அந்த இரு நிலையிலும் நடுவு நிலை தவறாது பெரியோர்கள் வாழ்வர். நடுவுநிலை தவறினால் நான் கெட்டு விடுவேன் என்று நினைப்பவன்தான் தர்மவான். நடுவுநிலையோடு வாழ்பவன் வறுமைப்பட்டாலும் அவனது புகழ் மங்காது. பெரியவர்கள் அவனை மதித்துப் போற்றுவர். நிமலனது தகப்பனார் தராசைப்போன்று சமநிலை தவறாதவர். அவரைப்போன்றவன் தான் நிமலன் அவன் நேர்மையானவன், சொல்லிலும் வழுவாதவன். நீங்கள் வாணிபம் செய்பவர். வாணிபம் செய்வோர் பிறரின் பொருளையும் தம் பொருளாய் எண்ணி நடுவுநிலை நின்று செயற்பட்டால் பெரும் இலாபம் அடைவர் என்பது உங்களுக்குத் தெரியும். ஆரூரன் தன்னை வேலையில் இருந்து நீக்கியமை பற்றிக் கவலைப்படவில்லை. அதனால் ஏற்பட்ட பழியைப் பற்றியே கவலைப்படுகிறான். அவனுடைய கவலை கூரிய வாளாகச் செயற்பட்டு உங்கள்

தொழிலை அழித்து விடும். எனவே மனிதாபிமானத்துடன் சிந்தித்துச் செயற்படுங்கள்” என்று கூறிவிட்டுக் கதிரேசன் எழுந்தார்.

“இருங்கோ. நான் பிழை விட்டு விட்டேன். நீங்கள் சொன்னதை நினைக்கப் பயமாக இருக்கிறது. நாளைக்கு நிமலனை வந்து வேலையைச் செய்யச் சொல்லுங்கோ” என்றார் பரமசிவம். மகிழ்வுடன் சிரித்தார் கதிரேசன்.

**அதிகாரம் -13 அடக்கம் உடைமை**

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும் 121

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு 122

செறிவுஅறிந்து சீர்மை பயக்கும் அறிவுஅறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின். 123

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையிலும் மாணப் பெரிது. 124

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்

செல்வர்க்கே செல்வம் தகைத்து. 125

ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து. 126

யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு. 127

ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றுஆகாது ஆகி விடும். 128

தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு 129

கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து 130

மாதவனும் கல்யாணியும் பட்டதாரி ஆசிரியர்கள். இருவரும் காதலித்துத் திருமணம் செய்தவர்கள். இருவரும் கதிரேசனது இரத்த உறவினர். கல்யாணி பணக்காரி. மாதவன் ஏழை. அத்துடன் கல்யாணி பட்டப் பரீட்சையில் முதல் வகுப்பில் சித்தியடைந்தவள். அத்துடன் திமிரும் ஆணவமும் உள்ளவள். அவள் மாதவனின் குடும்பத்தவர்களை மதிப்பதில்லை. அதனால் இருவருக்குமிடையில் எந்நாளும் பிரச்சினைகள் வந்தபடி இருக்கும். அதனால் அவளை விட்டுப் பிரிந்து தனது பெற்றோருடன் பல மாதங்களாக வாழ்ந்து வருகிறான். இது மாதவனின் பெற்றோருக்குப் பெருந் துன்பத்தையும் அவமானத்தையும் கொடுத்தது. அதனால்

மாதவனின் தந்தை அடிக்கடி சென்று கதிரேசனைச் சந்தித்து இருவரையும் ஒற்றுமையாக்கி விடும்படி கேட்பார்.

அன்று காலை கதிரேசனும் திருநாவுக்கரசும் கல்யாணியின் வீட்டுக்குச் சென்றனர். அவரைக் கண்டதும் கல்யாணியின் முகம் மாறுபாடடைந்ததைக் கதிரேசன் கண்டு கொண்டார்.

அவள் திமிரானவள் என்று அவருக்குத் தெரியும்; “கல்யாணி, நான் படிக்காதவன். நீ பட்டதாரி. அதுவும் ஆசிரியை. ஆசிரியர்கள் சமூகத்திற்கு முன்மாதிரியாக இருத்தல் வேண்டும். பணம், பொருள், பதவி, அந்தஸ்து என்பன வாழ்க்கையைச் சிறப்பிப்பதில்லை. அவை இல்லாத பலர் வாழ்க்கையின் தத்துவங்களை உணர்ந்து வாழ்ந்து இன்பத்தை அனுபவிக்கிறார்கள். வாழ்க்கைக்குத் தேவையானது அடக்கம். அடக்கம் மனிதனைத் தேவனாக்கும். அடக்கமின்மை அசுரராக்கும். அடக்கம் தான் மனிதனுக்குப் பெருமையையும், புகழையும் தருவது. அடக்கம் எல்லாப் பிரச்சினைகளையம் தீர்த்து வாழ்க்கையை உயர்த்தும் என்பதை அறிவுடைய நீங்கள் இருவரும் உணரவில்லை” நிறுத்தினார் கதிரேசன்.

கல்யாணி எதுவும் பேசவில்லை. உதடுகள் பேசத்துடித்தன.சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்;
“வாழ்க்கை இன்பமாக வாழ்வதற்கு என்று நினைப்பவர்கள் வாழ்க்கைத் தத்துவத்தை உணர்ந்து வாழ்வதால் அவர்களது வாழ்வு மலையை விட உயர்ந்ததாக இருக்கும். பணிவோடு வாழ்வது பெருமயைக் கொடுக்கும். கற்றவர்கள்,

பணமுள்ளவர்கள் பணிவுடன் வாழ்ந்தால் அது அவர்களுக்குப் புகழையும் செல்வத்தையும் கொடுக்கும். ஐம்பொறிகளையும் அடக்கி வாழ்வதே அடக்கம். அது எடுக்கும் ஏழு பிறவிகளுக்கும் சிறந்த பாதுகாப்பாக இருக்கும். நாவைக் காப்பவர்கள் தான் வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றனர். சொற்கள் சாகாவரம் பெற்றவை. தீய சொற்களால் கற்றவனது புகழ், மானம், உயர்வு யாவும் அற்றுப் போய்விடும். அவை கேட்பவனின் உள்ளத்தில் ஆறாத வடுவை ஏற்படுத்தி விடும். சினத்தை அடக்கி கற்க வேண்டியவற்றைக் கற்று அடக்கமுடன் வாழ்பவர்களைக் கடவுள் தேடி வருவார். பெண்கள் பொறுமையுள்ளவர்களாக, அன்புள்ளவர்களாக, அடக்கமுள்ளவர்களாக வாழ்ந்தால் தான் குடும்பத்திற்குப் பெருமை. அதனால் நடந்தவற்றை மறந்து மாதவனுடன் கூடிவாழ். பிரிந்திருந்து என்ன இன்பத்தைக் கண்டாய்? இனி உனது விருப்பம்" என்று கூறிவிட்டு எழுந்தார் கதிரேசன்.

"கல்யாணியால் எதுவும் பேசமுடியவில்ல. கதிரேசனது வார்த்தைகள் முள்ளாய் இதயத்தைக் குத்தின. ஊரவர் கதிரேசன் படிக்காத மேதை என்பார்கள். அது உண்மை என்று அவள் புரிந்து கொண்டாள். அவர் கூறுவது நியாயம் என அவளது மனம் முதல் தடவையாக ஏற்றுக் கொண்டது. தான் கணவனுடன் கூடிவாழ வேண்டும் என்று நினைத்துப் பார்த்தாள். கதிரேசன் சென்று விட்டார்.

**அதிகாரம் -14 ஒழுக்கம் உடைமை**

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழூக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 131

பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்துஓம்பித்
தேரினும் அ.்.தே துணை. 132

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 133

மறுப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும். 134

அழுக்காறு உடையார்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு. 135

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து. 136

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 137

நன்றிக்கு வித்தாகும் நல்ஒழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 138

ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல். 139

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 140

பாடசாலை ஓய்வு நேரத்தில் காயத்திரி என்ற ஆசிரியை கல்யாணிக்கு அருகில் வந்தமர்ந்தாள். அவள் மாதவனின் நெருங்கிய இனத்தவள்;

"நான் சொல்வது உனக்குப் பிடிக்குமோ தெரியாது. ஆனால் சொல்ல வேண்டியவற்றைச் சொல்ல வேண்டும். நீ உனது கணவனுடன் நடந்து கொள்ளும் முறை பிழை. அடக்கம், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, தீயவற்றைச் செய்யாதிருத்தல், மற்றவர்களை மதித்தல் என்பன தான் ஒழுக்கம். ஒழுக்கம் எல்லா வகையாலும் உயர்வைத் தரும். அதனால் ஒழுக்கத்தை உயிராக நினைக்க வேண்டும் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நீ உனது கணவனை மதிக்க வேண்டும். அவனது உறவினர்களை மதிக்க வேண்டும். இரண்டுமில்லா விட்டால் உன்னை யாரும் மதிக்க மாட்டார்கள். ஒழுக்கமென்ற அடக்கம் இல்லாவிட்டால் எந்தப் பெரிய பதவி வகிப்பவனையும் யாரும் மதிக்க மாட்டார்கள். ஒழுக்கமில்லாத கல்வி தரையில் சிந்திய உணவுக்குச் சமம். அத்துடன் குடிப்பிறப்பைத் தீர்மானிப்பது ஒழுக்கம். பிராமணன் தான்கற்ற வேதத்தை மறந்தால் அவன் திரும்பவும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒழுக்கத்தை இழந்தால் பெற்றுக்கொள்ள முடியாது. ஒழுக்கமில்லாத -வர்களின் செல்வம், அறிவு, வாழ்க்கை யாவும் பாழாகி விடும். ஒழுக்கம் தவறுவதால் பல குற்றங்கள் செய்ய வேண்டி வரும். அத்துடன் நீங்காத பழியும் பாவமும் வந்து சேரும். அன்பு, தயவு, தாட்சண்யம், தான் ஒழுக்கத்தை உருவாக்குவது. நீ ஒரு மரத்தில் அன்பு வைத்துப் பார். அது

மன மகிழ்ச்சியுடன் உன்னில் அன்பு வைத்துக் காயாகவும், கனியாகவும். இலையாகவும் உனக்கு அன்பளிப்புச் செய்யும். இன்பமான வாழ்க்கையின் வித்து ஒழுக்கம் தான். தீயசொற்களைப் பேசாமல் விடுவதும், மற்றவர்கைளை மதிப்பதும் ஒழுக்கத்தின் வெளிப்பாடு. நீ எத்தனையோ நூல்களைக் கற்றுப் பட்டம் பெற்றாய். அவை கூறுபவற்றைப் பின்பற்றாவிட்டால் கற்ற நூல்களால் என்ன பயன்" மூச்சு விட்டாள் காயத்திரி.

கல்யாணி எதுவும் பேசாததால் காயத்திரி சொன்னாள்; "திமிர், செருக்கு, ஆணவம் என்பன வாழ்க்கையைச் சீரழித்து விடும். ஆசை, பொறாமை, வஞ்சகம், சூது என்பன இன்பத்தின் எதிரிகள். மனிதனைத் தவிர்ந்த ஏனைய உயிரினங்கள் இவை எதுவும் செய்யாததால் மகிழ்வுடன் வாழ்கின்றன. எமது கிராமத்தில் படித்தவர்களிடம் ஆலோசனை கேட்பவர்கள் யாரும் இல்லை. படிக்காத கதிரேசனிடமும், திருநாவுக்கரசிடமும் தான் ஆலோசனை கேட்கிறார்கள். அதை விடப் படியாத அவர்களின் பிள்ளைகள் ஒழுக்க சீலர்களாகவும், கல்வியில் மேம்பட்டவர்களாகவும், உயர்ந்த பண்புகள் உள்ளவர் - களாகவும் வாழ்கிறார்கள். உனது பெற்றோரின் பணமோ அல்லது உனது உயர்ந்த படிப்போ உனக்கு உதவவில்லை. அது எப்படி மற்றவர்களுக்கு உதவும்...? சற்றுச் சிந்தித்தப் பார்" என்று கூறிவிட்டுச் சென்றாள் காயத்திரி.

காயத்திரியின் வார்த்தைகள் நெஞ்சில் இடியாக இடித்துக் கொண்டிருந்தன. அவள் சொல்வது நியாயம் என்று

மனம் கூறிய போதும், அவளது அறிவு அதைச் சரியென ஏற்க மறுத்தது.

**அதிகாரம் -15 பிறன்இல் விழையாமை**

பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல். 141

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல். 142

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்துஒழுகு வார். 143

எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல். 144

எளிதுஎன இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. 145

பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண். 146

அறன்இயலான் இல்வாழ்வான் என்பான் பிறன்இயலாள்

பெண்மை நயவா தவன். 147

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு 148

நலக்குஉரியார் யார்எனின் நாமநீர் வைப்பின்
பிறற்குஉரியாள் தோள்தோயா தார். 149

அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. 150

கதிரேசனும் திருநாவுக்கரசுவும் கல்யாணி சொன்னதைக் கேட்டுத் திகிலடைந்து போயிருந்தனர். இப்படியான ஒரு பெண்ணுடன் மாதவன் குடும்பம் நடத்த முடியாதென்று நினைத்தார் கதிரேசன்.

"நான் சொல்வது உண்மை. அவருக்குச் சிவராசாவின் மனைவியோடு தொடர்பு இருக்கு" அடித்துச் சொன்னாள் கல்யாணி.

"நான் நம்பமாட்டன். மாதவன் ஒழுக்கசீலன். அத்துடன் அவனது பெற்றோர் ஒழுக்கமாக வாழ்பவர்கள். எது நடந்தாலும் ஊரில் கதை வரும். ஊர்கதைக்காத ஒன்றை வாய் கூசாது சொல்ல உனக்கு எப்படி மனம் வந்தது?" கோபப்பட்டார் திருநாவுக்கரசு.

“உனக்கு அவனோடு வாழ விருப்பமில்லையென்றால் விவாகரத்துக்கேள். வீண்பழியை இரு குடும்பங்களின் மீது சுமத்தாதை. மாதவன் ஒழுக்கமான ஆசிரியன். அதை நான் நம்புறன்..” என்று கதிரேசன் கூறிக்கொண்டிருக்கையில் மாதவன் அங்கு வந்தான். கதிரேசன் தன்னில் வைத்திருக்கும் நம்பிக்கையை நினைக்க அவனுக்கு மெய் சிலிர்த்தது.

“அண்ணை, உங்களின் கண்காணிப்பில் வளர்ந்த நான் எக்குற்றங்களையும் செய்ய மாட்டேன். உயர்கல்வி கற்று அதன்படி அறநெறி தவறாது வாழும் நான் இன்னொருவரின் மனைவியை விரும்புவேனா…? அப்படி விரும்புவன் பஞ்சமா பாதகங்களை விரும்புபவனை விடக் கொடியவன். அப்படியானவன் உயிரோடு வாழும் நடைப்பிணம். சிறிதும் சிந்திக்காமல் பிறர் மனைவியை விரும்புகின்றவன் எதைப் படித்தாலென்ன, எவ்வளவு செல்வம் வைத்திருந்தாலென்ன. அதனால் என்ன பயன் உண்டாகும். அப்படியானவனை எந்நாளும் தீராத பழி சூழ்ந்திருக்கும். நான் ஒழுக்கமாக வாழ்வதால் தான் என்னை ஊரவர்கள் அனைவரும் விரும்புகின்றனர். நான் தவறாக நடந்தால் அதனால் பகையும், பழியும் , பாவமும் அச்சமும் தானே வரும். அப்படி வரவில்லையே. ஆண்மையென்பது தனது மனைவியைத் தவிர வேறு பெண்களைக் காமுறாமை என்று எனக்குத் தெரியும். அப்படியல்லாதவனிடம் அறநெறியை எதிர்பார்க்க முடியாது. ஒருவன் அறமில்லாத தீயசெயல்களைச் செய்யலாம். அதற்கு மன்னிப்புண்டு. ஆனால் பிறரின் மனைவியை விரும்பி அவளது

தோளைத் தழுவுவது மன்னிக்கப்படமுடியாதது. அதை நான் செய்வேனா…? கல்கினான் மாதவன்.

கல்யாணி அவன் கலங்குவதைக் கண்டு எழுந்து சென்று விட்டாள்.

“மகனே, உன்னை நான் நம்புகிறேன்” கலங்கினர் கதிரேசன்.

**அதிகாரம் -16 பொறை உடைமை**

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 151

பொறுத்தல் இறப்பினை என்னும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. 152

இன்மையுள் இன்மை விருந்தஒரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 153

நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறைஉடைமை
போற்றி ஒழுகப் படும். 154

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து 155

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 156

திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறன்அல்ல செய்யாமை நன்று 157

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். 158

துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர். 159

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின். 160

"அண்ணை, நான் கல்யாணியை விரும்பியது அப்பாவுக்கு விருப்பமில்லை. அது ஒழுக்கமில்லாத குடும்பம். எமக்குச் சரிவராது என்றவர். நான் கேட்கவில்லை. அதனால் அனுபவிக்கத்தான் வேண்டும். தன்னைத் தோண்டுபவரைப் பொறுத்துக் கொள்ளும் பூமியைப் போல, எனக்குத் துன்பஞ் செய்யும் எனது மனைவியைப் பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும். எல்லையை மீறி அவள் எனக்குத் துன்பம் செய்கிறாள். நான் தேடிக்கொண்டமையால் அதைப் பொறுத்துக் கொள்கிறேன். அத்துடன் அவற்றை மறந்தும் விடுகிறேன்." என்றான் மாதவன்.

"அது உனது உயர்ந்த பண்பு; குலப்பெருமை. தனவந்தனுக்கு வறுமை என்பது விருந்தினரை உபசரியாமை. வல்லமைகளுள் எல்லாம் வல்லமை அறிவில்லாதவர்கள் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளல். உனது அறிவுக்கும் குலப்பெருமைக்கும் இணங்க நீ பொறுமையைக்

கடைப்பிடிக்கிறாய். தனக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பது மிகமிகச் சுலபம். மன்னிப்பது இயலாத காரியம். மன்னிப்பவர்களை உலகம் எந்நாளும் போற்றும். அவர்களின் புகழ் உலகம் உள்ளவரை நிலைக்கும். நீ அறப்படி வாழ்வதால் தீயவற்றை ஏற்று மன்னிக்கிறாய். செருக்குள்ளவர்கள் தீங்கு செய்வார்கள். அதை உணர்ந்த பெரியவர்கள் மன்னிப்பார்கள். மன்னிப்பதன் மூலம் செருக்கினால் தீய செயல்களைச் செய்வோர் வெட்கப்படல் வேண்டும். இப்படியானவர்கள் ஐம்புலன் -களையும் அடக்கித் தவம் செய்பவர்களிலும் மேலானவர்கள். இவர்கள் உணவு உண்ணாமல் நோன்பு இருப்பவர்களை விட உயர்ந்தவர்கள். இவ்வாறு வாழும் உனக்கு ஊழ்வினை காரணமாக துன்பங்கள் வருகின்றனவே" எனக் கலங்கினார் கதிரேசன்.

**அதிகாரம் -17 அழுக்காறாமை**

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு 161

விழுப்பேற்றின் அ.்.துஒப்பது இல்லை யார்மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின். 162

அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன் ஆக்கம்
பேணாது அழுக்கறுப் பான். 163

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து. 164

அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்

வழுக்கியும் கேடுஈன் பது. 165

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 166

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். 167

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 168

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். 169

அழுக்கற்று அகன்றாரும் இல்லை அ∴து இல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல். 170

“அண்ணை, எனது தாயாரின் சகோதரன் காணி விஷயத்தில் எம்மோடு நெடுநாட்களாக பகைகொண்டுள்ளார். அவரின் மகள் அகல்யா கல்யாணியுடன் ஒரே பாடசாலையில் கற்பிக்கிறாள். அவள் தான் இல்லாத பொல்லாதவற்றையெல்லாம் கல்யாணிக்குக் கூறுகிறர்ள்”. என்றான் மாதவன்.

“அந்தக் குடும்பம் கேடு கெட்ட குடும்பம். உங்களுடன் மட்டுமல்ல ஊர் முழுவதுடனும் அக்குடும்பம் பகை. பொறாமை, வஞ்சம், சூது இல்லாது ஒருவன் வாழவேண்டும். பொறாமை இல்லாது வாழ்வது ஒப்புயர்வற்ற பெருஞ்சிறப்புக்களைத் தரும். யாராவது நன்றாக வாழ்ந்தால் அகல்யாவின் தந்தையான நாகநாதனுக்குப் பிடிக்காது. இந்தக் குணத்தால்

அவனுக்குத்தான் கேடு. எத்தனை துன்பங்கள் வந்தபோதும், அவன் திருந்துகிறான் இல்லை. நல்லவர்கள் பொறாமைப்பட மாட்டார்கள். தீயவற்றையும் செய்யமாட்டார்கள். இதைக் கண்ணாரக் கண்டும், தீயவர்கள் திருந்துவதாக இல்லை. பகைவர் தீங்கு செய்யாவிட்டாலும், ஒருவன் மற்றவர் மீது கொள்ளும் பொறாமை தீங்குசெய்யும். அகல்யாவுக்கு நாற்பது வயதாகியும் திருமணமாகவில்லை. பொருள் இருக்கு, அழகிருக்கு, அறிவு இருக்கு, தொழில் இருக்கு இப்படியிருக்க ஏன் அவளுக்குத் திருமணமாகவல்லை ஊரார் எல்லோரையும் பொறாமை கொண்டு விரோதித்ததால் வந்த பயன் அது"

"ஒருவன் மற்றவருக்குக் கொடுப்பதைப் பொறாமை கொண்டு தடுப்பவர்களின் சுற்றமும் அழியும். அவர்களுக்கு நேரத்திற்கு உண்ண உணவும், நல்ல உடையும் கிடைக்காதென்று பெரியவர்கள் கூறுவார்கள். அது உண்மை. நாகநாதன் நல்ல உடை உடுப்பதேயில்லை. கோயில்களில் சாப்பிட்டுக் கொண்டு திரிகிறான். அவனின் மனைவி நேரத்திற்கு உலை வைக்க மாட்டாள். பொறாமை உள்ளவனின் வீட்டில் மூதேவி வாழ்வதால் தான் இந்த நிலை. பொறாமைப்படுபவனின் செல்வம் அவனுக்கு உதவாது. அது தீய வழியில் நடக்கச் செய்து தன்னை அழிக்கும். பொறாமை உள்ளவனின் செல்வமும், பொறாமை இல்லாதவனின் வறுமையையும் அவை எப்படி அவர்களைச் சேர்ந்தனவென்று ஆராய்தல் வேண்டும்." என்றார் திருநாவுக்கரசு.

**அதிகாரம் -18** **வெ.:.காமை**

நடுவுஇன்றி நன்பொருள் வெ.:.கின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். 171

படுபயன் வெ.:.கிப் பழிப்படுவ செய்யார்
நடுவுஅன்மை நாணு பவர் 172

சிற்றின்பம் வெ.:.கிஅ றன்அல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். 173

இலம்என்று வெ.:.குதல் செய்யார் புலம்வென்ற
புன்மைஇல் காட்சி யவர். 174

அ.:.கி அகன்ற அறிவுஎன்னாம் யார்மாட்டும்
வெ.:.கி வெறிய செயின். 175

அருள்வெ.:.கி ஆற்றின்கண் நின்றான் பொருள் வெ.:.கிப்
பொல்லாத சூழக் கெடும். 176

வேண்டற்க வெ.:.கிஆம் ஆக்கம் விளைவயின்
மாண்டற்கு அரிதுஆம் பயன் 177

அ.:.காமை செல்வத்திற்கு யாதெனின் வெ.:.காமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 178

அறன் அறிந்து வெ.:.கா அறிவுடையார்ச் சேரும்

திறன் அறிந்து ஆங்கே திரு. 179

இறல்ஈனும் எண்ணாது வெ.்.கின் விறல்ஈனும்
வேண்டாமை என்னும் செருக்கு. 180

காயத்திரி, கல்யாணியின் வீட்டுக்கு வந்த போது கல்யாணி விசர்பிடித்தவளைப் போல இருந்தாள்.

“உனக்கு இந்த நிலைமை தேவையா? ஒருவன் நடுநிலை இல்லாமல் பிறரது பொருளை அடைய நினைத்தால் அவனது குடும்பம் கெடும் என்பார்கள். நாகநாதன் பிறரின் பொருளை அடைய விரும்புபவன். அவனது மகள் அகல்யாவும் அப்படியானவள். அதனால் தான் பணம், பொருள் யாவும் இருந்தும் அவர்களை மதிப்பவர்கள் யாரும் இல்லை. அவர்களை மதிப்பவர்களும் கெட்டழிந்து போவார்கள் என்று உனக்குத் தெரியாதா…? அவளின் பேச்சை நம்பி நீபடும் பாடு உனக்குத் தான் தெரியும். நடுநிலையில்லாத செயல்களைக் காண வெட்கப்படல் வேண்டும். அறநெறியால் வரும் இன்பத்தை விரும்புபவர்கள் அறமல்லாத செயல்களைச் செய்ய மாட்டார்கள். மாதவனின் பெற்றோர் பரம ஏழைகள் தான். அவர்களோடு பிரச்சினைப்பட்ட அகல்யா அவனைப்பற்றித் தவறாக உனக்குக் கூற நீ அதை நம்பிப் பெரிது படுத்தி விட்டாய். இதனால் எவ்வளவு பிரச்சினைகள் தெரியுமா? புலன்களை அடக்கும் ஆற்றல் உடையவர்கள் தம் வறுமை நீங்குவதற்காக ஒருபோதும் தகாத செயல்களைச் செய்யமாட்டார்கள். பிறரின் பொருளை அடைய எண்ணி

அறிவுக்கு ஒவ்வாத செயல்களைச் செய்வோர் எவ்வளவு நுட்பமான, விரிவான அறிவைப் பெற்றாலும் எந்தவிதமான பயனுமில்லை என்பதை அறியாத அகல்யா தான் அப்படி நடந்தாளென்றால் நீயுமா அப்படி....?" என்று கேட்டுவிட்டு நிறுத்தினாள் காயத்திரி.

"கல்யாணி எதுவும் பேசாது விம்மினாள்; "அருளை விரும்பி நல்ல வழியில் வாழ்பவர், பிறரின் பொருளை விரும்பித் தீயசெயல்களைச் செய்தால் அழிந்து விடுவார்கள் என்பது மாதவனுக்குத் தெரியும். பிறரின் பொருட்கள் ஒருவனுக்கு அழிவையே தரும் என்றும், பிறரின் பொருள் தனது பொருளையும் சேர்த்து அழித்துவிடும் என்று பலமுறை அனுபவித்து அறிந்தும் நாகநாதனும் அகல்யாவும் திருந்துகிறார்களில்லையே" பெருமூச்சு விட்டாள் காயத்திரி.

"பிறர் பொருளை விரும்பாது வாழும் பலர் ஊரில் ஓகோவென்று வாழ்கிறார்கள். அவர்களின் வீட்டில் திருமகள் வீற்றிருந்து அள்ளிக்கொடுக்கிறாள். பிறரின் பொருளை விரும்பினால் அது அழிவையே கொடுக்கும். விரும்பாவிட்டால் வெற்றியைக் கொடுக்கும் என்பது மாதவனுக்குத் தெரியும். அதனால் தான் வாழ்க்கையில் அவர் எதிலும் வெற்றி பெறுகிறார். அவருக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி கிடைத்துள்ளது. அப்படியானவர் சிவராசாவின் பொருளான அவரின் மனைவியை விரும்புவாரா?" என்று கேட்டாள் காயத்திரி."

"அழுவதாலோ, துன்பப்படுவதாலோ பிரச்சினைகள் தீராது. உண்மையை அறிவின் மூலம் அறிந்தால் தான் மனக்குழப்பம் நீங்கும்" என்றாள் காயத்திரி.

**அதிகாரம் -19** **புறங்கூறாமை**

அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. 181

அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன் அழீஇப் பொய்த்து நகை. 182

புறங்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும். 183

கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல். 184

அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்சொல்லும்
புன்மையால் காணப் படும். 185

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும் 186

பகச்சொல்லி கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்புஆடல் தேற்றா தவர் 187

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு 188

அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. 189

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு 190

அதிபர் தணிகாசலம் அன்று அனைத்து ஆசிரியர்களையும் அழைத்திருந்தார். அடுத்த வாரம் நடைபெறவுள்ள பாடசாலையின் பரிசளிப்பு விழா பற்றி விரிவாகக் கூறினார். அதன் பின்பு பொதுவிடயங்களைப் பற்றிச் சொன்னார்.

“இப்போ மாணவர்களது ஒழுக்கம் சீர்குலைந்து வருகிறது. அதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று ஆசிரியர்களின் நடத்தை. நான் சென்ற வாரம் ஆசிரியர்கள் ஓய்வெடுக்கும் அறைப்பக்கமாகச் சென்ற போது சில ஆசிரியர்கள் வேறு சில ஆசிரியர்களைப் பற்றி மிகவும் தரக்குறைவாகக் கதைத்துக் கொண்டிருந்தனர்” என்று நிறுத்தினார் தணிகாசலம்.

ஆசிரியர் மத்தியில் சிறு சலசலப்பு. அவர்களைப் பார்த்து விட்டுச் சொன்னார்; “ஒருவர் அறநெறிகளைப் போற்றி வாழாதவராகவும், அறச்செயல்களைச் செய்யா -தவராகவும் இருக்கலாம். ஆனால் மற்றவர்களைப் பற்றி இல்லாத பொல்லாதவற்றைக் கதைக்கக் கூடாது. தீயவற்றைச் செய்தால் அக்கறை உள்ளவர்கள் அதைநேரில் எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர அவரில்லாத இடத்தில் கூடியிருந்து

கதைக்கக் கூடாது. அத்துடன் சம்பந்தப்பட்டவரை நேரிற்காணும் போது சிரித்துப் பேசுவதும், பின்புறங் கூறுவதும் பெரும்பாவத்தை உண்டாக்கும். இவ்வாறு பொய்யாக வாழ்வதை விட வறுமையுள்ளவராக வாழ்வது மேலானது. இப்படிப் பேசுபவர்கள் அறநெறிப்படி வாழ்பவர்கள் அல்ல. இவர்களைப் பெரியவர் மதிக்கமாட்டார்கள்; கடவுள் மன்னிக்க மாட்டார். புறங்கூறி நல்லவர்களைப் பிரிப்பவர்கள் அறக்கடவுளால் தண்டிக்கப்படுவர். நெருங்கிப் பழகும் நண்பர்களைப் பற்றிப் புறங்கூறுவோர் நெருங்கிப் பழகாதவர்கள் பற்றி என்னென்ன சொல்வார்களோ தெரியாது. ஒருவர் இல்லாத போது அவரைப் பற்றிப் புறங்கூறுபவர்களின் உடற்பாரத்தையும் தாங்க வேண்டியது தர்மம் என்று சொல்லித்தான் பூமி தாங்குகிறது. ஒவ்வொருவரும் பிறரில் உள்ள குற்றத்தைக் கண்டு பிடிக்காது தன்னில் உள்ள குற்றங்களைக் கண்டு பிடித்துத் திருத்துவது தான் தர்மம்" என்று கூறி நிறுத்தினார் தணிகாசலம்.

**அதிகாரம் - 20 பயன்இல் சொல்லாமை**

பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 191

பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது 192

நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை. 193

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்புஇல்சொல் பல்லார் அகத்து 194

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை யுடையார் சொலின் 195

பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல். 196

நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயன்இல சொல்லாமை நன்று. 197

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல். 198

பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசுஅறு காட்சி யவர். 199.

சொல்லுக சொல்லில் பயன்உடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல் 200

தணிகாசலத்தின் அருகே வந்த யாதவன் என்ற மாணவன் எதையும் கூறமுடியாது விக்கி விசும்பி அழுது கொண்டிருந்தான். அவனது அழுகையைக் கட்டுப்படுத்த அவரால் முடியவில்லை. அதனால் அவனது வகுப்பாசிரியரான அகல்யாவையும் வேறு சில ஆசிரியர்களையும் காரியாலயத்திற்கு அழைத்தார். அவர்கள் அவனை மருட்டி

அவனது அழுகைக்கான காரணத்தை அறிய முயன்றனர். வெகுநேரத்தின் பின் அவன் விக்கி விசும்பியபடி சொன்னான்.

'நேற்று நான் வெண்காயம் நட்டதால் பாடசாலைக்கு வரவில்லை. வீட்டு வேலையும் செய்யவில்லை. அதற்காக அகல்யா ஆசிரியை என்னைப் பற்றியும், எனது குடும்பத்தவர்களைப் பற்றியும் மிகவும் தரக்குறைவாக ஏசினார். என்னைப் பாடசாலைக்கு வரவேண்டாமென்றும் கூலி வேலை செய்யும்படியும் கூறினார்."

மீண்டும் விக்கி விசும்பி அழுதான் யாதவன்.

தணிகாசலம் திகைத்துப் போனார். பின் அமைதியாகச் சொன்னார்; "அகல்யா, சொற்கள் உயிருள்ளவை. அவை இறவாதிருந்து நினைக்கும் போதெல்லாம் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும். தீய சொற்கள் மனதில் நிலையாகத் தங்கி வளர்ந்து பெரும் விருட்சமாகும். அது பரம்பரை பரம்பரையாகத் துன்பத்தைக் கொடுக்கும்" நிறுத்தினார் தணிகாசலம். அகல்யாவுக்கு வியர்த்தது.

"ஒருவர் பேசும் சொற்களைக் கொண்டு அவரையும் அவரது குடும்பத்தினரைம் அறிந்து கொள்ளலாம். பயனில்லாத சொற்கள் அவமானத்தைத் தரும்; தீமைகளைத் தரும்; தர்மத்தை மீறச் செய்யும்; அறத்தை அழிக்கும்; நன்மைகளைக் கொடுக்கும்; கற்றவர்களின் சிறப்பையும், மதிப்பையும் அழிக்கும். அத்துடன் கேவலமான மனிதர்கள் தான் அன்பு, பொறுமை, காருண்யம் ஆகிய நல்ல குணங்களைமறந்து

பயனில்லாத சொற்களைப் பேசுவார்கள். இவர்கள் மனிதர்களுள்ப் பதர் என்று பெரியவர்கள் சொல்வார்கள். மாணவர்களைக் கண்டிக்க வேண்டும். அதற்காகப் பயனில்லாத சொற்களைக் கூறக்கூடாது. பெரியவர்கள் என்று கூறப்படும் ஆசிரியர்கள் பிறருடன் பேசும் போது மிக மிக அவதானமாகவும், சொற்களின் அர்தத்தை நன்கு புரிந்தும் பேசவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் பெற்ற கல்வியால் தீமையே உண்டாகும். நல்லவர்கள், வல்லவர்கள், கற்றவர்கள் பயனில்லாத சொற்களைப் பேசினாற் கூட அவர்களது மதிப்பு மறைந்து விடும். உங்களது வார்த்தைகள் இந்தப் பிஞ்சு உள்ளத்தை எந்தளவு தூரம் பாதிக்கச் செய்திருக்கென்று பார்த்தீர்களா? யாதவனது குடும்பம் வறியது. தகப்பன் நோயாளி இதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒருவன் உரிய வயது வரை பாடசாலைக்கு வராவிட்டால் அவனால் சமூகத்திற்குப் பெரும்கேடு வரும் என்பதற்காகத்தான் படியாத முதியவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. கண்டித்தல் என்பது அளவுடன் இருத்தல் வேண்டும். கண்டிப்பதற்கு அன்பான இனிமையான பல சொற்கள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்துங்கள். கண்டித்தல் உள்ளத்தைத் தொடும். அது தீதாகத் தொட்டால் பகையையும், வெறுப்பையும், குரோதத்தையும் தான் உண்டாக்கும். அதனால் இனிமேல் கவனமாக பேசுங்கள்” என்றார் தணிகாசலம்.

**அதிகாரம் -21** **தீவினை அச்சம்**

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு. 201

தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 202.

அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல். 203.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு. 204.

இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலன் ஆகும் மற்றும் பெயர்த்து 205

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான். 206

எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும். 207.

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று. 208

தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்துஒன்றும்
துன்னற்க தீவினைப் பால். 209.

அருங்கேடன் என்பது அறிக மருங்குஓடித்
தீவினை செய்யான் எனின். 210.

**ஆ**சிரியர்களின் ஓய்வு அறைக்கு மிகுந்த ஆத்திரத்துடன் வந்த அகல்யா அங்கிருந்து காயத்திரியைக் கண்டதும், கோபத்துடன் சொன்னாள்;

“நான் அப்படியென்ன சொல்லி விட்டேன் என்று அவர் துள்ளிக் குதிக்கிறார். ஒழுங்காக அவன் பாடசாலைக்கு வருவதில்லை. சரியாகப் படிப்பதில்லை. வீட்டுவேலைகள் செய்வதில்லை. அதனால் தான் கூலி வேலைக்குப் போவென்றேன். அவையின் பரம்பரை பெரும்படிப்புப் படித்ததா? கூலி வேலைகள் தானே செய்யுதுகள்” ஆத்திரத்தால் சொற்கள் தடுமாறின.

காயத்திரி எதுவும் சொல்லவில்லை. சொன்னால் பெரும் பிரச்சினை வரும் என்று அவளுக்குத் தெரியும். தீயசொற்களைப் பேசிப்பழகியோர் தீய சொற்களை அஞ்சாது பேசுவர். அத்தீய சொற்கள் என்றும் நீங்காத தீமையைத் தரும் என்று அவர்களுக்குப் புரியாது. நல்லவர்கள் தமக்குத் தீமை செய்வோருக்கும் நன்மை செய்வர். தீயோர் நன்மை செய்தவர்க்கும் பெரும் கொடுமை செய்வர். தீயவர்களை அறம் தண்டிக்கும். தண்டித்தாலும் அது அவர்களுக்குப் புரியாது. தொடர்ந்தும் தீயவற்றையே செய்வார்கள். வறியவர்களான யாதவனின் பெற்றோர் மறந்துங்கூடத் தீயசொற்களைப் பேசுவதில்லை. பேசினால் தீமையும், வறுமையும் வந்து வாட்டும் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் கற்ற அகல்யாவுக்கும் அவளது குடும்பத்தினருக்கும் தெரியவில்லையே. பிறருக்குத் துன்பம் செய்தால் அது ஒரு காலத்தில் திரும்பி வந்து

செய்தவர்களைத் தாக்கும் என்றும், எவ்வளவு பகையை உடையவரும் தப்பி வாழலாம் ஆனால் தீயவற்றைச் செய்தவர்கள் அதிலிருந்து தப்ப முடியாதென்பதை உணர்ந்தும் ஏன் சிலர் அதைச் செய்கிறார்களோ தெரியவில்லை. தீமைகள் செய்வோரை அத்தீமைகள் நிழலாகத் தொடரும் என்றும், நல்லவற்றைச் செய்தால் தான் நன்மைகளும் பிறரின் உதவிகளும் கிடைக்கும் என்றும் கற்றவர்களுக்கு ஏன் புரிவதில்லை? ஊரில் கேடு செய்யாதிருக்கும் பலர் இன்பமாக வாழ்வதைக் கண்டும் கற்றவர் பிறருக்குத் தீமைகளைச் செய்து துன்பப்படுகிறார்களே, இது ஏன்?" என்று நினைத்தாள் காயத்திரி.

"நீ நியாயத்தை உணர்ந்து கொள்வாயென்று பார்த்தால், பேசாமல் இருக்கிறாய். பயமா..? நான் பயப்படமாட்டன். போராடுவன்"

"தீயவர்கள் தீயதைச் செய்ய அஞ்சமாட்டார்கள்" என்று நினைத்து வலிந்து புன்னகைத்தாள் காயத்திரி.

**அதிகாரம் -22** **ஒப்புரவு அறிதல்**

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு. 211

தாள் ஆற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 212.

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல்அரிதே
ஒப்புரவின் நல்ல பிற. 213.

ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 214

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகுஅவாம்
பேரறி வாளன் திரு 215

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின். 216.

மருந்துஆகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். 217.

இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடன்அறி காட்சி யவர். 218.

நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர்
செய்யாது அமைகலா ஆறு. 219

ஒப்புரவி னால்வரும் கேடுஎனின் அஃதுஒருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து. 220

மாதவன் கதிரேசனது வீட்டுக்கு வந்தான். அவனின் முகத்தில் என்றுமில்லாத மகிழ்ச்சி குடிகொண்டிருந்தது ; “அண்ணை, பெரிய உதவி செய்து விட்டீர்கள். கல்யாணி திமிர் பிடித்தவள்; பணக்காரி. அதனால் அவள் என்னை மதித்து வாழமாட்டாள் என்று நினைத்தேன். நீங்கள் கூறிய புத்திமதிகள் நன்கு உறைத்துள்ளது. அதனால் அவள் வீடுதேடி வந்து தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டாள். அத்துடன்; “இனிமேல் திமிராக நடக்க மாட்டேன்’ என்று சத்தியம் செய்தாள். நன்றி, மிகவும் நன்றி. உணர்ச்சிவசப்பட்டான் மாதவன்.

“ஐயையோ, இது மனிதர்களின் கடமை. இதற்கு நன்றி சொல்லத் தேவையில்லை. இயற்கை எப்பொழுதும் கைம்மாறு கருதாது மக்களுக்கு உதவி செய்கிறது. மழையாக இருந்தாலென்ன, மரங்களாயிருந்தாலென்ன, மிருகங்களாக இருந்தாலென்ன எல்லா உயிர்களும் உதவிகள் தானே செய்கின்றன. பாடுபட்டுப் பணத்தைத் தேடியவன் ஏழை எளியவர்களுக்குத் தானம் செய்ய வேண்டும். உதவி செய்தல் ஒருவனது நற்செயல். அது தேவர்களாலும் மதிக்கப்படும். பிறருக்கு உதவி தேவைப்படும் போது, உதவி செய்து வாழாதவன் பிறந்ததனால் என்ன பயனை அடைகிறான். அப்படியான வனின் பண்பு ஊரில் உள்ள நல்ல நீர் உடைய கிணற்றுக்குச் சமம்” என்றும் கூறும்போது மாதவன் குறுக்கிட்டுச்சொன்னான்; “ஊரின் நடுவே உள்ள நன்நீர்க்கிணறு

மட்டுமல்ல, பயனை அதிகமாகத் தரும் பொது இடத்தில் நிற்கும் மரத்தையும், அதன் உறுப்புக்களையும், மருந்தாகக் கொடுக்துதவும் மருத்துவக் குணங்கொண்ட மரத்திற்கும் ஒப்பானதென்று பெரியவர்கள் கூறியது உண்மை" என்றான்.

"செல்வம்இருந்ததோ இல்லையோ, கேட்பவர்களுக்கு எப்பாடுபட்டாவது கொடுத்தல் வேண்டும். அப்படி உதவாவிட்டால் வாழ்வதில் என்ன பயன்? அது தான் உள்ளவனுக்கு வறுமை. ஒருவன் துன்பப்படும் போது அத்துன்பத்தைத் தன்னை விற்றாவது தீர்க்க வேண்டுமென்று பெரியவர்கள் கூறியுள்ளனர். உனது துன்பம் பெருந்துன்பம். அதனால் தான் அவமானம் வந்தாலும் பரவாயில்லையென்று சென்றேன். அது பயனளித்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது" என்றார் கதிரேசன். "மாதவன், கதிரேசனது கையைப் பிடித்தான். அவனது உடல் நடுங்கியது. கண்கள் கலங்கின. பேசமுடியாது அவதிப்பட்டான் மாதவன்.

**அதிகாரம் - 23** **ஈகை**

வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து. 221

நல்ஆறு எனினும் கொளல்தீது மேல்உலகம்
இல்எனினும் ஈதலே நன்று 222

இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள. 223

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்

இன்முகம் காணும் அளவு 224

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் 225

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் பழி. 226

பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது 227

ஈந்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்துஇழக்கும் வன்க ணவர். 228

இரத்தலின் இன்னாத மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல். 229

சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை 230

"நல்லவர்கள் எப்பொழுதும் பிறரின் நல்வாழ்விற்கு உதவவேண்டும்" என்று கூறி நிறுத்திய கதிரேசன் சிறிது நேரத்தின் பின் சொன்னார்; "பயனை எதிர்பாராது செய்யும் உதவி தான் கொடை. அத்துடன் நன்மை செய்வதற்காகக் கூடப் பிறரிடம் பொருளைப் பெறவும் கூடாது; பிறருக்குக் கொடுக்கும்படி கூறவும் கூடாது..." என்று நிறுத்தினார் கதிரேசன்.

"ஒருவன் கூறாமலே அவனது நிலையை அறிந்து கொடுப்பது தான் தர்மம். நீங்கள் எதுவும் கூறாமல் நிறுத்தியது, யாதவனுக்கு உதவி செய்யும்படி கூறாமல் கூறுவது போலுள்ளது. அவனது கல்விச் செலவை நான் ஏற்க

விருக்கிறேன். அதைச் சொல்லக்கூடாது. ஆனால் உங்கள் மனவிருப்பைப் பூர்த்தி செய்யவதற்காகவே கூறினேன்.” என்றான் மாதவன். “தவவலிமை உடையவர்கள் எதையும் கேட்கமாட்டார்கள். நல்லகுடியில் பிறந்தோர் எல்லோருடைய விருப்பையும் அறிந்து உதவி செய்வார்கள். அத்தன்மை தான்பொருளுள்ளவன் செய்யும் பணி. அவ் உதவி அவனுடன்கூட இருந்து வாழ்நாள் முழுவதும் உதவும். இப்படியானவர்களைப் பசி என்னும் தீயநோய் ஒருபோதும் வருத்தாது. உண்ணாதவனுக்குச் சுவை தெரியாது. தர்மம் செய்யாதவனுக்கு அதனால் வரும் உயர்ந்த பேரின்பம் என்னவென்று தெரியாது” என்றார் கதிரேசன்.“கொடுத்துதவாத தன்மை யாசிப்பதை விட கேவலமானது. சாவதுதான் துன்பமானது. அதைவிடத் துன்பம் யாசிப்பவனுக்கு ஈயாமை என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நான் யாசிக்காமல், எனது மனநிலை அறிந்து தேவையான உதவி செய்துள்ளீர்கள்” மீண்டும் கண்கலங்கினான் மாதவன்.

**அதிகாரம் - 24** **புகழ்**

ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு 231

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ் 232

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல். 233

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு. 234

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது 235

தோன்றின் புகழொடு தோன்றுக அ.ஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 236

புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன். 237

வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின். 238

வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா
யாக்கை பொறுத்த நிலம் 239

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர். 240

“கதிரேசனும் திருநாவுக்கரசுவும் தணிகாசலமும் பரிசுப் பொருட்களுடன் மாதவனின் வீட்டுக்கு வந்தனர். அவர்கள் இருவரையும் கல்யாணியும் மாதவனும் மகிழ்வுடன் வரவேற்றனர்.

“முயற்சிக்கேற்ற பலன் கிடைத்துள்ளது. இருவரையும் சோடியாகப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கிறது” என்றார் கதிரேசன்.

“பெரிய பதவியைப் பெற்றுள்ளீர்கள். படித்த பாடசாலைக்கும், பிறந்த கிராமத்திற்கும் சேவை செய்து மேலும் புகழ்பெற வேண்டும்” என்றார் தணிகாசலம்.

“வறுமைப்பட்டவர்களுக்கு கொடுத்துதவுவது தான் பெரும்புகழ். நீங்கள் வறிய மாணவர்களுக்கு நிரந்தரமான கொடையான அறிவைக் கொடுக்கிறீர்கள். பெருமையாகப் பேசப்படுவது அது தான். புகழ்தான் அழியாதது. இந்தச் சிறு வயதில் தர்மம் செய்தும், ஏழை மாணவர்களுக்குக் கற்பித்தும் பெரும் புகழைப் பெற்று விட்டீர்கள். அது அழியாது; அழிக்க முடியாதது. உங்களுக்கு வந்த புகழைத் தேவர்கள்கூடப் போற்றுவார்கள். பொருள் குறையக் குறையப் புகழ்வளரும், அறிவு வளர வளரப் புகழ் பெருகும். அத்துடன் தோன்றில் புகழோடு தோன்ற வேண்டும் என்ற பெரியவர்களின் வார்த்தைகளை மெய்ப்பித்து விட்டீர்கள். புகழைத் தேடாதவர்களின் வாழ்க்கை பழியுடையது. அவர்களின் உடம்மைத் தாங்கும் பூமி கூடத் தனது விளைவைக் குறைத்து விடும். உங்களுக்குள்ள புகழ்தமக்கு வரவில்லையே என்று பலர் மனம் வருந்துவதை நான் கண்டுள்ளேன். அது அவர்களின் குற்றம். நீங்களும் உங்களின் தந்தையும், ஏழைகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கிறீர்கள். ஏழைமாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் கொடுத்துக்

கற்பிக்கிறீர்கள். அந்தப் பயனால் தான் கல்விப் பணிப்பாளர் என்ற பெரும் பதவி உங்களுக்குக் கிடைத்துள்ளது. அதை நல்ல முறையில் நாடு சிறக்கச் செய்யுங்கள்" என்றார் தணிகாசலம்.

மாதவனும், கல்யாணியும் அதைக் கேட்டுப் பூரித்துப் போனார்கள்.

## அதிகாரம் -25 அருள் உடைமை

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. 241

நல்ஆற்றான் நாடி அருள் ஆள்க பல்ஆற்றான்
தேரினும் அ∴தே துணை. 242

அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை
இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல் 243

மன்உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு இல்என்ப
தன்உயிர் அஞ்சும் வினை. 224

அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. 245

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்துஒழுகு வார். 246.

அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லைப் பொருள்இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. 247.

பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்
அற்றார்மற்று ஆதல் அரிது 248

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம். 249

வலியார் முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. 250

பரமசிவம் அந்த ஊரில் பெருந்தனவந்தன். அன்று சதுர்த்தி. விநாயகருக்கான பூசை முடிந்த பின் வந்த அவன்; "நான் வருமுன் எப்படிப் பூசையை முடிக்கலாம்? நான் பிள்ளையாரைத் தூக்க விட மாட்டன்" என்றான் ஆவேசமாக அவனது நண்பர்கள் கத்தி பொல்லுகளுடன் நின்றனர்.

கதிரேசனுக்கும், திருநாவுக்கரசுவிற்கும் தணிகாச - லத்திற்கும் துக்கமாக இருந்தது. மக்கள் கொந்தளித்தனர்.

"பொருளின் திமிரைப் பரமசிவன் காட்டுகிறான். பொருள் இழிந்தவர்களிடமும் இருக்கு. கசாப்புக் கடைக்காரனிடமும் இருக்கு. கசாப்புக் கடைக்காரனான அருளம்பலத்தை விட இவனிடம் பொருளிருக்கா? பொருள் இருந்தென்ன பிரயோசனம். தயவு, தாட்சண்யம், அன்பு, பொறுமை என்று சொல்லப்படுகின்ற அருள் இருத்தல் வேண்டும். அருள்தான் வாழ்க்கைக்கு உறுதுணையாவது என்று அறியாத செல்வந்தர்கள் தான் திமிரால் குற்றச் செயல்களைச் செய்கிறார்கள். அறியாமையுள்ள பரமசிவம் எதையும் உணரமாட்டான்.

மற்றவர்கள் சொல்வதையும் கேட்க மாட்டான். இவன் எத்தனை பேரிடம் அடிவாங்கியிருப்பான். இருந்தும் திருந்துகிறானில்லையே. கதிரேசன்ணை, திருநாவுக்கரசண்ணை, அதிபர் போன்ற அருளாளர்களைப் பார்த்தும் திருந்தாதவர்களை என்ன செய்வது?" கோயில் தலைவர் ஆத்திரப்பட்டார்.

"இவன்ரை பரம்பரைக்கே அருளாகிய நல்ல குணங்கள் இல்லை. இவன் முற்பிறப்பிலும் தீயவனாகத் தான் இருந்திருப்பான். அருளில்லாதவர்களுக்கு வாழ்க்கை முழுவதும் துன்பம் தான் வருமென்று தெரிந்தும் செய்கிறான். பொருளை இழந்தால் தேடலாம். அருளை இழந்தால் பிறக்கும் எந்தப் பிறப்பிலும் இன்பமயமாக வாழ முடியாது என்று நான் அவனுக்குப் பல தடவைகள் சொன்னனான். கேட்கிறானில்லை. அறிவில்லாதவன் பயன்கருதித் தான் அறச்செயல்களைச் செய்வான். இவனும் பயன்கருதித்தான் சண்டை பிடிக்கிறான். இவன் கதிரேசண்ணைக்குத்தான் பயப்படுவான். ஏனென்றால் கதிரேசண்ணையுடன் ஏறுமாறாகக் கதைத்தால் ஊரவர்கள் ஒன்று சேர்ந்து தன்னைத் தாக்கி விடுவார்கள் என்ற பயம். அதனால் கதிரேசண்ணை போங்கோ" என்றார் தணிகாசலம்.

கதிரேசனைக் கண்டதும் பரமசிவம் தோளில் இருந்த சால்வையை எடுத்து விட்டுப் பணிவுடன் சொன்னான்; "நான் சதுர்த்தி விரதம். பிந்திப் போனன். அதுதான் அப்படிக் கதைச்சிட்டன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ..."

"கதிரேசன் எதுவும் பேசவில்லை. பிள்ளையார் அமைதியாக மேளதாளத்துடன் வீதி வலம் வந்தார்.

## அதிகாரம் - 26 புலான் மறுத்தல்

தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். 251

பொருள்ஆட்சி போன்றாதார்க்கு இல்லை அருள்ஆட்சி
ஆங்குஇல்லை ஊன்தின் பவர்க்கு 252

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம். 253

அருள் அல்லது யாதுஎனின் கொல்லாமை கோறல்
பொருள்அல்லது அவ்வூன் தினல். 254

உண்ணாமை உள்ளத உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு. 255

தினற் பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல். 256

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்அது உணர்வார்ப் பெறின். 257

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன். 258

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று. 259

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். 260

பிள்ளையார் வீதிவலம் வந்த பின் குருக்கள் திருநீறு, தீர்த்தம், சந்தணம், பூக்கள் கொடுத்தார். விழாக் காலங்களில் விழா முடிந்ததும் நமசிவாயம் சுவாமிகள் சொற்பொழிவாற்றுவார். அதனால் மக்கள் மண்டபத்துள் அமர்ந்தனர்.

“அன்பானவர்களே, உங்கள் உடம்பைப் பெருக்க வைப்பதற்காக இன்னோர் உயிரைக் கொன்று அதன் உடலைத் தின்னாதீர்கள். அருளுள்ளவர்கள் புலால் உண்ண மாட்டார்கள். கொலைக் கருவிகளை வைத்திருப்பவனின் உள்ளத்தில் இரக்கம் இல்லாதது போலப் புலால் உண்பவனின் மனதில் அருள் இராது. ஓர் உயிரைக் கொல்லாதிருப்பதே அறம். புலால் உண்பது அருளுமாகாது அறமுமாகாது. புலால் உண்பதால் தான் அரிய பல உயிரினங்கள் அழிந்து போகின்றன. அதனால் புலாலை உண்ணாதிருங்கள். புலாலை உண்ணா விட்டால் வியாபாரத்திற்காக யாரும் உயிர்களைக் கொல்ல மாட்டார்கள். ஆராய்ந்து பாருங்கள். புலால் என்பது ஓர் உயிரின் புண். புண்ணை உண்ணலாமா..? குற்றமில்லாத நல்ல அறிவை உடைய பெரியவர்கள் புலால் உண்ண மாட்டார்கள். நீங்கள் விரதம் அனுட்டிக்கிறீர்கள். நெய் முதலியவற்றைத் தீயிலிட்டு அபிஷேகம் செய்கிறீர்கள். அதன் பின் புலாலை உண்கிறீர்கள். இது தர்மமல்ல. இத்தகைய விரதங்கள், பூசைகள் செய்வதை விடப் புலால் உண்ணாமல் இருப்பது சிறந்தது. புலால் உண்ணாமலும், உண்பதற்காக உயிர்களைக் கொல்லாமலும்

வாழ்கின்றவர்களை எல்லா உயிர்களும் கை கூப்பித் தொழும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**அதிகாரம் - 27 தவம்**

உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு. 261

தவமும் தவம்உடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதுஇலார் மேற்கொள்வது. 262

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம். 263

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். 264

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 265

தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு 266

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு 267

தன்உயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்உயிர் எல்லாம் தொழும் 268

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு 269

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர் 270

கைலாயம், நமசிவாயம் சுவாமிகளின் மிகப்பெரிய அடியவர். அவரை உயிராக நினைப்பவர். வேலை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் அவருடன் இருப்பவர். நேர்மையானவர்; உண்மையானவர்; விசுவாசமானவர்; இறை சிந்தனை உள்ளவர். அவருக்கு ஐந்து பிள்ளைகள். ஒருவரும் திருமணமாகவில்லை. இருவர் கற்கின்றனர். அவர் குடும்பத்தை விட்டு விட்டு நமசிவாயம் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் நிரந்தரமாகத் தங்க விரும்பினார்.

“மகனே, தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளல், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருத்தல், ஒழுக்கமுடையவராக இருத்தல் போன்றன தான் தவத்தின் தன்மைகள். அவற்றை நீ பின்பற்றி வருகிறாய். ஆனால் உனக்குப் பொறுப்புக்கள் உண்டு. பிள்ளைகளுக்குத்திருமணம் செய்து வை. இருபிள்ளைக -ளினதும் கல்வியை முடித்து வை. அதன் பின் துறவு கொள்ளலாம். துறவிகளுக்கு உணவளித்துப் பேணத்தான் உன்போன்ற இல்லறத்தார் துறவுமேற்கொள்ளாதிரு -க்கிறார்கள்”

“தீமை செய்வோரை அடக்கல், நன்மை செய்தோரை உயர்த்துதல் போன்றன தவ வலிமை உள்ளவர்களுக்குப் பொருந்தும். அது உனக்கும் பொருந்துகிறது. அதனால்

விரும்பியதை விரும்பியபடி அடையத் தவசிகளால் முடியும். ஆனால் அதை நல்ல இல்வாழ்வானும் பெறுவான். தவம் செய்யாதவர்கள் ஆசை வசப்பட்டு கெட்டழிவர். சுடச்சுடப் பொன் ஒளி பெறுவது போலத் தவசிகளும் துன்பம் வருத்த வருத்த அவர்களுக்கு மெய்யுணர்வு அதிகரிக்கும். அதனால் அவர்களின் பெருமையை உணர்ந்து உலகத்தவர் போற்றுவர். இப்படியான தவ வலிமை பெற்றோர் மரணத்தையும் வென்றவர்களாவர். உலகில் ஆற்றல் இல்லாதவர்கள் பலராகவும், ஆற்றல் உள்ளவர்கள் சிலராகவும் இருப்பதற்குக் காரணம், தவம் செய்யாதவர் பலராகவும், தவம் செய்வோர் சிலராகவும் இருப்பதே ஆகும். தவத்தை நன்கறிந்து அதைப் பின்பற்ற நினைக்கும் உன்னை ஆசீர்வதிக்கிறேன். குடும்பப் பாரத்தை நீக்கிய பின்பு வா. அதன் பின்புதான் மனம் அமைதி பெறும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**அதிகாரம் - 28** **கூடா ஒழுக்கம்**

வஞ்ச மனத்தான் படிற்றுஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். 271

வான்உயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின். 272

வலிஇல் நிலைமையான் வல்உருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. 273

தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து

வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று 274
பற்றுஅற்றேம் என்பார் படிற்றுஒழுக்கம் எற்றுஎற்றுஎன்று
ஏதம் பலவும் தரும். 275
நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல் 276
புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து 277
மனத்தது மாசுஆக மாண்டார்நீர் ஆடி
மறைந்துஒழுகும் மாந்தர் பலர் 278
கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல் 279
மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். 280

தனது பேச்சைக் கைலாயம் விரும்பவில்லை என்பதை அவனது முகத்தில் படிந்திருந்த உணர்வுகள் நமசிவாயம் சுவாமியாருக்கு உணர்த்தின.

“குடும்பத்தில் இருந்து கொண்டு மனதை அடக்கிக் குடும்பத்தின் நல்வாழ்வுக்காக உழைப்பதும், ஏழை எளியவர்களுக்கும், துறவிகளுக்கும் அனாதைகளுக்கும் உதவி செய்து வாழ்வதும் தவவாழ்க்கை தான். நீ குடும்பத்தை ஈடேற்றாது விலகி வந்தால் ஊரவர் பரிகசிப்பர். அதனால் தவவாழ்வை மேற்கொள்ள முடியாது. அத்துடன்

குடும்பத்தவர்கள் தமது தேவைகளுக்காக உன்னிடம் வந்தே தீருவார்கள். அது மனதைக் குழப்பும். மனங் குழம்பிய பொய்யான ஒழுக்கத்தைக் கண்டு உடம்பில் கலந்து இருக்கும் ஐம்பூதங்களும் சிரிக்கும். மனதில் பிரச்சினைகள் உள்ளவன் தவக்கோலத்தால் நன்மையடைய மாட்டான். அத்தன்மை பசுவானது புலித்தோலைப் போர்த்திக் கொண்டு பயிர்களை மேய்வதைப் போன்றதும், வேடன் புதரில் மறைந்திருந்து வலை வீசிப் பறவைகளைப் பிடிப்பதைப் போன்றதுவுமாகும். குடும்பத்தவன் ஆசைகளை விட்டாலும், குடும்பத்தவர் விடார். அதனால் தெரியாமல் தவக்கோலத்தைப் பூண்டுவிட்டோமென எண்ணத் தோன்றும். அதனால் ஆசைகள் உருவாகும். ஆசைகளை மறைத்து வாழ்வது கொடுமையான வாழ்க்கை. குன்றிமணி தன் சிவந்த பக்கத்தைக் காட்டிக் கொண்டு மறுபக்கத்தில் இருக்கும் கறுப்பான பகுதியைக் காட்டாது இருப்பதைப் போன்றது தான் ஆசைகளை மறைத்து வாழும் வாழ்வு. மனதில் வஞ்சகத்தை வைத்துக் கொண்டு வெளிவேஷம் போடுபவர்கள் தான் அனேகர். நேராக இருந்தாலும் அம்பு கொடியது. வளைவாக இருந்தாலும் யாழ் இனிமையானது. எனவே ஒருவரை அவரின் குணத்தையும், செயலையும் வைத்துத் தான் ஆராய்ந்து முடிவு எடுத்தல் வேண்டும். உலகம் பழிக்கின்ற தீயசெயல்களைச் செய்யாமல் தவ வாழ்வு மேற்கொண்டோர் மொட்டையடிக்க வேண்டியதில்லை; அது போலச் சடையும் வளர்க்கத் தேவையில்லை. நல்லவர்களைக் கெட்டவர்களாக்குவது துன்பம். தவசிகளை வழி தவறச் செய்வது குடும்ப நினைவு. அதனால்

குடும்பச் சுமையை நீக்கிய பின் துறவை மேற்கொள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**அதிகாரம் - 29 கள்ளாமை**

எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு 281

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல் 282

களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து
ஆவது போலக் கெடும். 283

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும். 284

அருள்கருதி அன்புடையார் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். 285

அளவின்கண் நின்றுஒழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர். 286

களவுஎன்னும் கார்அறிவு ஆண்மை அளவுஎன்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல் 287

அளவுஅறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவு அறிந்தார் நெஞ்சில் கரவு 288

அளவுஅல்ல செய்தாங்கே வீவர் களவுஅல்ல
மற்றைய தேற்றா தவர் 289

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்

தள்ளாது புத்தேள் உலகு. 290

அகல்யா ஆசிரியை வீட்டில் பாதுகாப்பில்லையெனக் கருதித் தனது தங்க ஆபரணங்களைக் கைப்பையில் வைத்துப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அது அன்று பாடசாலையில் தொலைந்து விட்டது. அதனால் பாடசாலை அல்லோலகல்லோலப்பட்டது.

“தணிகாசலம் அதிர்ந்து போனார். இதுவரை பாடசாலையில் சிறு பொருட்கள்கூடத் தொலைந்ததில்லை. பாடசாலைக்குள்ளேயும், வெளியேயும் மாணவர்களால் தொலைக்கப்படும் பொருட்களை எடுத்தவர்கள் கொண்டு வந்து கொடுத்து விடுவார்கள். அதனால் அகல்யாவை அழைத்துச் சொன்னார்; “ அம்மா, வீட்டில் சென்று பார்த்து வாருங்கள். சில சமயம் மறதி காரணமாக விட்டு விட்டும் வந்திருப்பீர்கள்”

“இல்லை ஐயா, நான் கொண்டு வந்தனான்” என்று பிடிவாதமாகச் சொன்னாள் அகல்யா.

காலைவேளையில் பிரார்த்தனை முடிய அவர் மாணவர்களுக்குப் புத்திமதிகள் சொல்வார். அது பெரும்பாலும் சொற்பொழிவாகவே இருக்கும். தணிகாசலம் மிகச் சுவையாகச் சொல்வதால் மாணவர்கள் விரும்பிக் கேட்பார்கள். பெரும்பான்மை மாணவர்கள் அதன்படி நடப்பாரரகள். முதல் நாள் அவர் சொன்னது நினைவுக்கு வந்தது.

“அன்பான எனது பிள்ளைகளே, பிறர் தன்னை இகழக்கூடாதென்று நினைப்பவர்கள், பிறரின் பொருளைக்

கவரக்கூடாது. அப்படிய நினைப்பதே பாவம். திருடப்பட்ட பொருள், பெரும் இன்பத்தைக் கொடுத்தாலும் அது அவர்களை அழித்து விடும். அதனால் புகழ் மங்கும். மக்கள் வெறுப்பர். அதனால் அவமானம் உண்டாகும். திட்டமிட்டுத் திருடுபவன் அருளுள்ளவனாகவோ, அன்புள்ள வனாகவோ இருக்கமாட்டான். திருடன் அளவறிந்து வாழாமையால் அவன் விரைவில் அழிந்து போவான். அவனது நெஞ்சில் அறம் இராது. தீமைகள் தான் இருந்து தீமை செய்யும். திருடுபவர்கள் பொய் சொல்வார்கள்; பொய்ச் சத்தியம் செய்வார்கள்; குற்றங்களைச் செய்வார்கள். இதனால் பெரும் துன்பமடைவார்கள். அவர்களது உடம்பு தண்டிக்கப்படும். அத்துடன் கடவுளும் விரும்பமாட்டார். அதனால் வீடுபேறும் கிடைக்காது"

"ஐயா, அகல்யா ஆசிரியை ஆபரணங்களைக் கைப்பையில் வைத்துக் கொண்டு வரும் போது வழியில் தவறி விழுந்து விட்டது. அதை நான் எடுத்து வந்துள்ளேன்" என்றார் ஒரு பெற்றார்.

"தணிகாசலம் அதிர்ந்து போனார். அவரின் கண்கள் கலங்கின.

**அதிகாரம் - 30** **வாய்மை**

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 291

பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். 292

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். 293.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். 294.

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. 295

பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை
எல்லா அறமும் தரும். 296

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யமை செய்யாமை நன்று. 297

புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையான் காணப் படும். 298

எல்லா விளக்கும் விளக்குஅல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு 299

யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்து ஒன்றும்
வாய்மையின் நல்ல பிற. 300

"நன்றி, நன்றி, கந்தவனம் அண்ணா" கண்கலங்கினாள் அகல்யா.

“அகல்யா திமிரானவள். அவரின் பிள்ளைகளைக் கண்டபடி ஏசுபவள். அதனால் கந்தவனம் வாய்ப்பைப் பயன்படுத்த விரும்பினார்.

“அம்மா , வாய்மை என்பது தீங்கில்லாத சொற்களைப் பேசுவதாகும். தீங்கில்லாத சொற்களைப் பேசுபவன் பொய் சொல்ல மாட்டான். அதனால் அவன் தவறான செயல்களைச் செய்ய மாட்டான். தர்மத்தைக் காப்பதற்காகப் பொய் சொல்லலாம் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அதை நாம் புராண இதிகாசங்களில் காண்கிறோம். ஆனால் மனமறிந்து பொய்பேசக்கூடாது, தவறிப் பேசினால் மனச்சாட்சி கொல்லும். அத்துடன் பெரியவர்கள் வெறுப்பார்கள். பொய்பேசாதவன் தவம் செய்வோரையும், தானம் செய்வோரையும் விட உயர்ந்தவன் என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. பொய் பேசாது வாழ்ந்தால் புகழும் நன்மையும் வரும். பொய் பேசாதவன் அறச் செயல்களைச் செய்யா விட்டாலும் அவன் தர்மவான். உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும் என நினைப்போர் மறந்தும் பொய்பேசார். வெளியிருளை நீக்கும் விளக்கு விளக்கல்ல, அறியாமையைக் கொடுக்கும் பொய்மையை அகற்றும் வாய்மையே உண்மையான விளக்கு. உலகில் நிலைத்து நிற்பது வாய்மைதான். வாய்மை சகல இன்பங்களையும் தருமென நான் நினைத்து வாழ்கிறேன்” என்றார் கந்தவனம்.

“பல இலட்ச ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களைத் தந்துள்ளீர்கள். அகல்யா சன்மானம் தர விரும்புகிறா….” என்றார் அதிபர்.

“ஐயையோ, எனக்கு வேண்டாம். எனது குலப்பெருமை கெட்டு விடும்” என்றார் கந்தவனம்.

**அதிகாரம் - 31 வெகுளாமை**

செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக்
காக்கின்என் காவாக்கால் என். 301

செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற. 302.

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும். 303

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற. 304

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 305

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும். 306

சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு
நிலத்துஅறைந்தான் கைபிழையா தற்று 307

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 308

உள்ளிய எல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். 309

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 310.

அன்று சிவன் கோயிலில் பரமசிவத்தின் திருவிழா. அதற்கு உதவி செய்யும் படி பரமசிவம் கூறிய கூலித் தொழிலாளியான நடராசா தனது மகனின் சுகவீனம் காரணமாக வரவில்லை. அதனால் பரமசிவம் அவனின் வீட்டுக்குச் சென்று அவனைத் தாக்கி விட்டான். அதை நடராசா கதிரேசனுக்குச் சொல்லி அழுதான்.

கோயிலில் பட்டு வேட்டி அணிந்து ஆடம்பரமாக நின்ற பரமசிவத்திற்குக் கதிரேசன் சொன்னார்; “நடராசாவின் மகனுக்குத் திடீரென்று வலிப்பு வந்து விட்டது. அவன் தனது மகனை வைத்தியசாலைக்குக் கொண்டு போனான். அதை அறியாமல் அவனுக்கு நீ அடித்து விட்டாய். பலிக்கின்ற இடத்தில் சினம் வராமல் காப்பவன் தான் சிறந்த மனிதன். பலவீனனைத் தாக்குவது தர்மமுமல்ல, வீரமுமல்ல. வலியவனான தம்பிப்பிள்ளையைக் கண்டால் விலகிச் செல்கிறாய். அவன் தம்பிப்பிள்ளைக்குக் கூறினால் என்ன செய்வாய்? யாரிடத்தும் கோபம் கொள்ளாது வாழ்வது தான் சிறப்பு. சினம் மனிதனுக்கு வரும் இன்பங்கள் அனைத்தையும் கெடுத்து விடும். தன்னைக் காக்க வேண்டும். புகழ்பெற வேண்டும் என்று நினைப்பவன் கோபங் கொள்ளான். சினம் தன்னை அழிக்கும்; குடும்பத்தை அழிக்கும்; சுற்றத்தை அழிக்கும். நிலத்தில் அடிப்பவனின் கைக்குத்தான் தீங்கு உண்டாகும். அது போலக் கோபங் கொள்பவனுக்குத்தான் துன்பங்கள் வரும். என்னதான் கொடுமைகளைப் பிறர்

செய்தாலும் கோபப்படாதவன் தேவர்களை விட உயர்ந்தன் தான். அவன் எண்ணியவாறு எண்ணிய கருமங்கள் முடியும். கடவுளும் அவனை ஆசீர்வதிப்பார். அளவு கடந்த கோபத்தை உடையவன் செத்தவருக்குச் சமமானவன். கோபத்தை அடக்குபவன், துறவியை விட மேலானவன். அதனால் கோபப்படுவதை விடு. பலவினர்களுடன் பிரச்சினைப்படாதே" என்றார் கதிரேசன். பரமசிவம் எதுவும் பேசவில்லை.

**அதிகாரம் - 32 இன்னா செய்யாமை**

சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள் 311

கறுத்துஇன்னா செய்தஅக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள். 312

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும். 313

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 314

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை. 315

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல் 316

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம்
மாணாசெய் யாமை தலை. 317

தன்உயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல். 318

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும். 319

நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோய்இன்மை வேண்டு பவர். 320

"சிரிக்காதை, எனக்குத் துக்கமாக இருக்கு. பாவம் நடராசா. பிள்ளை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கு. அதை உணராமல் நீ அடித்திருக்கிறாய். சிறப்பைத் தரும் பெரும் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும் கூடப் பிறருக்குத் துன்பம் செய்யாமல் வாழ்வது தான் குற்றமில்லாதவனின் கொள்கை. பெரியவர்கள், ஒருவன் கடுங்கோபங்கொண்டு பெருந்துன்பம் செய்தாலும் அதைப் பொறுத்துக் கொள்வர். தீங்கு செய்தவருக்குத் தீங்கு செய்வதே பாவம். அப்படியிருக்க ஓர் அப்பாவிக்குத் தீங்கு செய்திருக்கிறாய். தீங்கு செய்தவன் வெட்கப்படும் படியாக நன்மை செய்வது தான் பெரியவர்களின் கொள்கை. மற்றவர்களுக்குத் துன்பமேற்பட்டால் அதை நீக்க வேண்டும். இல்லாவிட்டால் கற்ற கல்வியாலோ, தேடிய செல்வத்தாலோ எந்தப் பயனும் ஏற்படாது. ஒருவன் தனக்குத் துன்பம் என்று நினைப்பவற்றை மற்றவர்களுக்குச் செய்யக்கூடாது. சிறிய தீங்குகள் கூடச் செய்யாது வாழ்வது

தான் சிறந்த வாழ்வு. அவன் வராதது உனக்குத் துன்பம் என்று நீ நினைக்கிறாய். அவனது பெருந்துன்பத்தை நீ உணரவில்லை. உன்னைச் சார்ந்தவர்களுக்கு இப்படியொரு துன்பம் வந்தால் பொறுப்பாயா? ஒருவன் முற்பகல் செய்வது, பிற்பகலில் வந்து சேரும் என்று அறியாமல் தான் பலர் பிறருக்குத் துன்பங்களைச் செய்கிறார்கள். தனக்குத் துன்பங்கள் வருவதை விரும்பாதவர்கள் பிறருக்குத் துன்பம் செய்ய மாட்டார்கள். பிறருக்குத் துன்பங்கள் பலவற்றைச் செய்து விட்டுக் கோயிலில் திருவிழாச் செய்தால் புண்ணியம் வராது" என்றார் கதிரேசன்.

**அதிகாரம் - 33 கொல்லாமை**

அறவினை யாதுஎனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும். 321

பகுத்துஉண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. 322

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. 323

நல்ஆறு எனப்படுவது யாதெனின் யாதுஒன்றும்
கொல்லாமை சூழும் நெறி. 324

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. 325

கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிர்உண்ணும் கூற்று. 326

தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை. 327

நன்றுஆகும் ஆக்கம் பெரிதுஎனினும் சான்றோர்க்குக்
கொன்றுஆகும் ஆக்கம் கடை. 328

கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து 329

உயிர்உடம்பின் நீக்கியார் என்பசெயிர் உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். 330

அன்று பிள்ளையார் கோயிலில் தேர்த்திருவிழா. பிள்ளையார் அடியார்கள் புடைசூழ மேளதாளங்களுடன் வந்து தேரில் ஏறி அமர்ந்து கொண்டார். பரமசிவம் பட்டு வேட்டி கட்டி, நெற்றியில் திருநீறு பூசி, வயிற்றில் தங்கச் சங்கியிலின் அட்சரக்கூடு அசையத் தேங்காயுடன் நின்றார்.

அவர் திருவிழா நடைபெறும் பத்து நாட்களும் சைவ உணவுகளையே உண்பார்.

குருக்கள் பஞ்சாலாத்தி காட்ட அடியார்கள் முன்டியடித்துத் தேங்காய் உடைத்தார். அப்பொழுது பரமசிவத்தின் உயிர்நண்பன் சிவராசா வந்து சொன்னான்; “மச்சான், ஆறுமுகத்திடம் நல்லதொரு ஆட்டுக்கடா நிற்கிறது. நாளையிண்டைக்கு அடிக்கலாம். அட்சவாரம் கொடுக்கட்டா…?”

“தேங்காய் அடிக்க வலதுகையைத் தூக்கிய பரமசிவம், தேங்காயை அடிக்காது சொன்னார்; “விலையைச் சரியாகப் பேசிக் கொடு”

அவ்வார்த்தைகள் அக்கினிக் கோலாக தணிகாசலத்தின் காதுகளில் நுழைந்தன; “ஆண்டவா எந்த உயிரையும் கொல்லாமல் வாழ்வது தான்அறம். திருவிழா நாளில் விரதம் பிடித்துவிட்டு உயிர்க்கொலை பற்றிப் பேசுகிறார்களே, இது கடவுளுக்குத் தகுமா? கிடைத்ததைப் பகிர்ந்துண்பது தான் அறம். அந்த உயர்ந்த அறத்தை மீறிக் கோயிலில் உயிர்ப்பலிபற்றிப் பேசுகிறார்களே, கோயிலடியில் உயிர்களை அழிக்க நினைக்கிறார்களே. இவர்கள் மனிதர்கள் தானா…? துறவிகளை விட இல்வாழ்க்கை வாழ்ந்து கொண்டு உயிர்க்கொலை செய்யாதிருத்தலே உயர்ந்த அறம் என்பார்கள். கொல்லாதவனை யமன் கூட நெருங்க மாட்டான் என்று தர்மநூல்கள் கூறுகின்றன. தனது உயிருக்கு ஆபத்து வந்தாலும் கூட இன்னோர் உயிரைக் கொல்லக்கூடாது. கொலை செய்வதே பாவம். அதைக் கோயிலில் திட்டமிடுவது மகா பாவமல்லவா. இத்தகைய புலையரை எப்படி உயர்ந்தவர்கள் என்று நினைப்பது? கொலை செய்பவர்கள் நோய் முதலிய பெருந்துன்பங்களுக்காளாகி வருந்துவர் என்று தெரிந்தும் இதைச் செய்கிறார்களே. ஆண்டவா, இவர்களைத்திருத்து. நான் தெரியாமல் இவர்களுக்கருகில் நின்று இவர்கள் பேசியதைக் கேட்டுப் பாவத்தை அனுபவிக்கப் போகிறேன்” எனத் துன்பப்பட்டார் தணிகாசலம்.

## அதிகாரம் - 34 நிலையாமை

நில்லா தவற்றை நிலையின என்றுஉணரும்
புல்லறிவு ஆண்மை கடை. 331

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. 332

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். 333

நாள்என ஒன்றுபோல் காட்டி உயிரும்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின் 334

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். 335

நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு. 336

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. 337

குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு. 338

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு 339

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு 340

தேர்த்திருவிழா முடிந்ததும், அடியவர்களுக்கு மடத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. சிவநாதன் ஒரு கிழிந்த அழுக்கடைந்த வேட்டியைக் கட்டிக்கொண்டு வந்து சபையில் அமர்ந்தார். பரமசிவமும் அவரது நண்பர்களும் உணவு பரிமாறிக் கொண்டிருந்தனர். பரமசிவம் சிவநாதனின் இலையில் சாதத்தை வைத்தார். சிவநாதன் நிமிர்ந்து அவரைப் பார்த்தார். ஒரு காலத்தில் சிவநாதன் பெரும் தனவந்தன். பரமசிவத்தின் நண்பன். அவனுடன் சேர்ந்து செய்யக்கூடாத தீய செயல்களையெல்லாம் செய்தவன்.

தான் செய்தவற்றைச் சிவநாதன் நினைத்துப் பார்த்தார்; "நிலையில்லாதவற்றை நிலையானது என்று எண்ணிச் செயற்படுகிறாய். அது பெரும் துன்பங்களையும், இழிவையும் தான் தரும். பெருஞ்செல்வம் வரும்போது, கூத்தாடும் இடத்திற்கு நிறைய மக்கள் வந்து போவதைப் போலச் சேரும் அச்செல்வம் போகும் போது, கூத்துப் பார்த்த கூட்டம் கலைந்து செல்வதைப் போலப் போய்விடும். செல்வம் அழியக்கூடியது. அதனால் செல்வம் இருக்கும் போது நிலைத்து நின்று பிற்காலத்திற்கு உதவக்கூடிய நற்செயல்களைச் செய்தல்

வேண்டும். காலம் என்பது வாழ்வை அழிக்கும் வாள். அதனால் மரணம் வருமுன் நற்செயல்கள் பலவற்றையும் செய்து விடல் வேண்டும். நேற்றிருந்தவர் இன்று இல்லை என்று சொல்வது இந்த உலகம். நல்ல முறையில் வாழத் தெரியாதவர்கள், பலவிதமான கற்பனைகளைச் செய்து தீய வழியில் வாழ்கிறார்கள். ஆகவே மகனே, உடம்பிற்குள்ள உறவு பறைவக்கும் கூட்டுக்கும் உள்ள உறவைப் போன்றது. பறவை எந்த நேரத்திலும் பறந்து சென்று விடும். மரணம் என்பது ஒருவன் உறங்குவதைப் போன்றது. உறங்கியவன் விழிப்பதைப் போன்றதுபிறப்பு. நோய்க்கிடமான இவ்வுடம்பின் எங்கோ ஒரு பகுதியில் இந்த உயிர் தங்கியுள்ளது. அது சென்று விடும் என நினைத்துத் தீயசெயல்களைச் செய்யாதே" என்று அவரது தகப்பன் கூறிய வார்த்தைகள் அவரின் காதுகளில் ஒலித்தன.

இப்போது அவ்வார்த்தைகள் எப்போதும் ஒலித்துச் சித்திரவதை செய்கின்றன. அதனால் அவர்சாப்பிடாது எழுந்தார்.

**அதிகாரம் - 35** **துறவு**

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். 341

வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டுஇயற் பால பல 342

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு 343

இயல்புஆகும் நோன்பிற்குஒன்று இன்மை உடைமை

மயல்ஆகும் மற்றும் பெயர்த்து 344
மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்புஅறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை. 345
யான்எனது என்னுஞ் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும். 346
பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு 347
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர் 348
பற்றுஅற்ற கண்ணே பிறப்புஅறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். 349
பற்றக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு 350

மகேஸ்வரபூசை முடிவடைந்ததும் அடியவர்கள் பலர் சென்று விட்டனர். சிலர் நமசிவாயம் சுவாமிகளின் பிரசங்கத்தைக் கேட்பதற்காக மண்டபத்தில் வந்தமர்ந்தனர்.

“அன்பானவர்களே, இன்று யாருக்கும் எதற்கும் நேரமில்லை. இறைவனைக் கூட அவசர அவசரமாக வழிபடுகின்றனர். கோயிலுக்கு வருமுன்பே பலவேலைகள் இருப்பதாகக் கூறிக் கொள்கின்றனர். ஒருவன் எந்தெந்தப் பொருள்களிலிருந்து ஆசையை நீக்கிக் கொள்கிறானோ, அவனுக்கு அந்தந்தப் பொருட்களால் துன்பம் வராது. துன்பமில்லாத நிலை வேண்டுமானால் பொருட்கள் மீதுள்ள

ஆசைகளை நீக்குதல் வேண்டும். ஐம்புலன்களின் ஆசைகளை அடக்கினால் செய்யும் செயல்கள் யாவும் வெற்றியையும் இன்பத்தையும் தரும். கடவுளைத் தொழும் போது பற்றில்லாது தொழ வேண்டும். அது தான் தவம்; துறவு; பிறவித்துன்பத்தை நீக்க விரும்புபவர்களுக்கு உடலே பாரமாக இருக்கும். அத்துடன் கடவுளை முழு மனதோடு வழிபடுபவர்களுக்குப் பிறவித்துன்பமும், உலகில் வரும் துன்பங்களும் இல்லாமற் போகும். நான் எனது என்ற நிலைதான் துன்பங்களுக்கும் காரணமானது. இது இல்லாவிட்டால் சகலஇன்பங்களையும் தரும் வீட்டின்பத்தைப் பெறலாம். முற்றும் துறந்தவரே துறவிகள். ஆசைகளைத் துறந்து விட்டு இறை சிந்தனையுடன் சேவை செய்யுங்கள். உங்களை நாடி யாவும் வரும். அந்த நிலை வரவேண்டுமென்றால்பரபரப்பில்லாது இறைவனை வணங்குதல் வேண்டும்" என்றார் சுவாமியார்.

**அதிகாரம் 36 மெய் உணர்தல்**

பொருள்அல் லவற்றைப் பொருள்என்று உணரும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு. 351

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசுஅறு காட்சி யவர்க்கு 352

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து. 353

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே

மெய்யுணர்வு இல்லா தவர்க்கு. 354

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு 355
கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி. 356
ஓர்த்துஉள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு. 357
பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்
செம்பொருள் காண்பது அறிவு 358
சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றுஅழித்துச்
சார்தரா சார்தரும் நோய். 359
காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். 360

தொடர்ந்து சுவாமியார் உரையாற்றினார், "இந்த நிலையை மெய்யுணர்தல் என்பார்கள். மெய்யானவற்றை, இன்று பலர் பொய்யானது என்கின்றனர். இதனால் பிறப்பு, தன் உயர்வை இழக்கிறது. சந்தேகமில்லாது நம்பிக்கையுடன் வழிபட்டால் மெய்யறிவு உண்டாகும். இம்மெய்யறிவு அறியாமையை நீக்கும். இவர்களுக்கு, இவர்கள் அடைய வேண்டிய விண்ணுலகம் அருகில் உள்ளது. மெய்யுணர்வு இல்லாதவர்கள் உலகில் உள்ள அரிய பொருட்களைப் பெற்றிருந்தாலும், அவற்றால் பயனடைய மாட்டார்கள். பொருட்களின் வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்காது அதன்

உண்மைத் தன்மையை உணர்ந்து கொள்வதே அறிவாகும். கற்க வேண்டியவற்றை உணர்பவர்கள் மெய்யறிவுள்ளவராவர். இவர்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்க மாட்டார்கள். பிறவித் துன்பததிற்குக் காரணம் அறியாமை. அறியாமையை நீக்கினால் பேரின்ப வாழ்வு கிட்டும். அறியாமை நீங்கினால் செம்பொருளான இறைவனின் அருள் கிடைக்கும். இவ்வாறு வாழ்பவர்களைத் துன்பங்கள் எதுவும் நெருக்க மாட்டாது. ஆசை,சினம், அறியாமை தான் துன்பங்களுக்குக் காரணம். அதனால் அவற்றை ஒழியுங்கள். அவசரப்படாமல் ஆறுதலாகக் கடவுளை வணங்குங்கள்" என்றார் சுவாமியார்.

**அதிகாரம் - 37 அவா அறுத்தல்**

அவாஎன்ப எல்லா உயிர்க்கும்எஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து 361

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். 362

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை
ஆண்டும் அ∴தொப்பது இல். 363

தூஉய்மை என்பது அவாஇன்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 364

அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர். 365

அஞ்சுவது ஓரும் அறனே ஒருவனை
வஞ்சிப்பது ஓரும் அவா 366

அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும். 367

அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம்அ∴து உண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். 368

இன்பம் இடையறாது ஈண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். 369

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும் 370

"அன்பானவர்களே, வாழ்க்கையில் வருகின்ற துன்பங்கள் யாவும் ஆசையால் தான் வருகின்றன. பாவங்களுக்கு விதையாக அமைவது ஆசை. இது பிறப்புக்களை உண்டாக்கும். கோயிலுக்கு வரும் போது புனிதர்களாக வாருங்கள். உங்கள் நடத்தைகளும், உடலும்தான் உங்களுக்கும் பிறருக்கும் ஆசைகளை உருவாக்கித் துன்பப்படுத்துகின்றன. ஒருவனது பெரும்பேறு பிறவாத நிலை அடைதல். இது ஆசையைத் தவிர்த்தால் மட்டுமே உண்டாகும். ஆசையில்லாமை தான் முத்தி; செல்வம் ; பேரின்பம் என்று நூல்கள் கூறுகின்றன. இந்தத் தூய நிலையை அடைய உண்மை பேசுதல் வேண்டும். ஆசை அவாவை உண்டாக்கும். ஆசையை விட்டால் விரும்பியனவெல்லாம் கிடைக்கும்; துன்பங்கள் எவையும் நெருங்க மாட்டாது. ஆசை அடங்காதது. ஒன்று கிடைத்தால் பலவற்றைத் தேடுவது. அதனால் கோயிலுக்கு வருவோர் மற்றவர்களின் ஆசையைத்

தூண்டத்தக்க விதத்தில் வரக்கூடாது. ஆதனால் பாவம் தான் உண்டாகும். என்றார் சுவாமியார்.

## அதிகாரம் - 38 ஊழ்

ஆகூழால் தோன்றும் அசைவுஇன்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி 371

பேதைப் படுக்கும் இழவுஊழ் அறிவுஅகற்றும்
ஆகல்ஊழ் உற்றக் கடை 372

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். 373

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு 374

நல்லவை எல்லாம்அம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு 375

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம 376

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. 377

துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறற்பால
ஊட்ட கழியும் எனின் 378

நன்றுஆங்கால் நல்லவாக் காண்பவர் அன்றுஆங்கால்
அல்லற் படுவது எவன். 379

ஊழின் பெருவலி யாஉள மற்றுஒன்று
சூழினும் தான்முந் துறும். 380

சிவநாதன் நமசிவாயம் சுவாமிகளின் பாதங்களைத் தனது இரு கைகளாலும் பற்றிப் பிடித்து விம்மி விம்மி அழுதார்; "பெரும் பணக்காரனாக இருந்த நான் ஏன் ஏழையானேன்? எனக்கேன் இக்கொடிய துன்பங்கள் வந்தன" என்று அழுதார்.

"மகனே, ஒருவனுக்குச் செல்வம் வரவேண்டும் என்றால் வரும். வந்த செல்வம் வளர விதி உதவி செய்யும். அச் செல்வம் அழியவேண்டுமானால் விதி மதியை மயக்கும்; சோம்பலை உண்டாக்கும்; சேரக்கூடாதவர்களுடன் சேர வைக்கும். ஒருவனை அறிவாளியாக்கித் தனவந்தனாக்குவது விதி. அதே விதி பொருளை இழக்கப்பண்ணி அவனை அறிவற்றவனாக்கும். நூல்களை ஒருவன் நுட்பமாகக் கற்றாலும் அவனை மேன்மையடைச் செய்வதும், அறிவீனனாக்குவதும் விதி. ஊழ் இரண்டு தன்மைகளை உண்டாக்கும். ஒன்று செல்வந்தராக இருப்பது. அடுத்தது அறிவுள்ளவராக இருப்பது. இரண்டும் வெவ்வெறானவை. செல்வத்தைத் தேடும்போது நல்ல விதி செல்வத்தைச் சேர்த்து வைக்கும். தீயவிதி செல்வத்தை அழித்துவிடும். நல்லவை தீயவையாகலாம். தீயவை நல்லவையாகலாம். எமக்குரிய பொருளை யாரும் கவர முடியாது. அது போல எமக்கில்லாத பொருளைப் பாதுகாக்கவும் முடியாது. பொருள் சேர்ப்பவன் அனுபவிப்பதும், அனுபவிக்காமல் இருப்பதும் விதியைப் பொறுத்ததே. விதி துன்பங்களைக் கொடுக்காமல் இருக்குமானால், அனுபவிக்கப்

பொருளில்லாத வறியவன் துறவியாகிவிடுவான். நல்வினை வரும் போது மகிழ்ச்சியடைபவர்கள், தீவினை வரும் போது துன்பப்படுவது ஏன்? இரண்டிற்கும் ஊழ்வினையே காரணம். விதியை விட வலிமையானது வேறெதுவும் இல்லை. விதியை விலக்க வேறு வழிகளைத் தேடினாலும் அங்கும் விதியே முன் வந்து நிற்கும். எனவே கவலைப் படாது இறைவனை நம்பிக்கையுடன் வணங்கு. தளராமல் முயற்சி செய்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**அதிகாரம் - 39 பொருட்பால்**

**இறைமாட்சி**

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. 381

அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு 382

தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவற்கு. 383

அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா
மானம் உடையது அரசு 384

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. 385

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்

மீக்கூறும் மன்னன் நிலம். 386

இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு 387

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும். 388

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. 389

கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி 390

கதிரேசனும் திருநாவுக்கரசுவும், திருநாவுக்கரசுவின் இளை மகன் திருமாறனைப் பற்றிக் கதைப்பதற்காகப் பாடசாலைக்கு வந்தனர். அதிபர் அலுவலகத்தில் தனியே இருந்தார். அவர்களைக் கண்டதும் எழுந்து வரவேற்றார்.

பத்திரிகைகளைப் பார்க்கப் பயமாக இருக்கிறது. எமது நாடு இப்படி ஏன் செல்கிறது? கொலை, களவு, விபத்துக்கள் மலிந்து விட்டன" என்றார் கதிரேசன்.

"சிறந்த படை, உயர்ந்த குடி மக்கள், நிறைந்த உணவுப் பொருட்கள், நல்ல அமைச்சர்கள், உயர்ந்த நட்பு, பாதுகாப்பு முறைகள் என்ற ஆறு அங்கங்களைப் பெற்றவன் தான் சிறந்த அரசர்களுள் ஆண் சிங்கம் போன்றவன். அச்சம் இல்லாதிருத்தல், வறியவர்களுக்கு உதவுதல், ஊக்கமுடன் இருத்தல் என்ற நான்கு தன்மைகளும் குறைவுபடாமலும், காலம் தாழ்த்தாது விழிப்புடன் இருப்பது கல்வி, அறிவுடமை,

துணிவுடமை என்ற மூன்றும் குறைவுபடாமல் இருப்பவன் தான் சிறந்த அரசன் என்றும், அவன் அறந்தவறாமலும், நீதியில்லாதவற்றைச் செய்யாதவனாகவும், வீரத்தில் குறைவுபடாதவனாகவும் இருப்பான் என்றும், பொருள் வரும் வழிகளை உண்டாக்கி, வரும் பொருளைச் சேர்த்து வைத்து, சேர்ந்த பொருட்களைக் காத்து, அதைப் பாகுபாடின்றி மக்களுக்குக் கொடுத்து, குடிமக்களுடன் அன்புடன் உறவாடி, கடுமையான சொற்களைப் பேசாது, பாகுபாடு காட்டாது, அரசாளும் அரசனுக்குப் புகழ்சேரும் என்றும், அப்படியான அரசனை மக்கள் தெய்வமாக வணங்குவர் என்றும், பொறுமையுடன் மக்களை நேசிக்கும் அரசனின் ஆட்சியின் கீழ் உலகமே தங்கும் என்றும், குடி மக்களை நல்ல முறையில் காத்து அவர்கள் விரும்பியவற்றைக் கொடுத்து, நீதி தவறாது நடந்து எல்லோரையும் பாதுகாக்கும் அரசன் அரசர்க்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவன் என்றும் பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.இப்போ அரசர்கள் இல்லை. ஆனால் பெரியவர்கள் சொன்னவற்றை நாட்டை ஆள்பவர் கேட்டு நடந்தால் இத்தகைய தீய செயல்கள் எவையும் நடக்காது" என்றார் தணிகாசலம்.

**அதிகாரம் - 40** **கல்வி**

கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக 391

எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்

கண்என்ப வாழும் உயிர்க்கு 392

கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு

புண்ணுடையர் கல்லா தவர். 393

உவப்பத் தலைக்கூடி உள்ளப்பிரிதல்

அனைத்தே புலவர் தொழில் 394

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்

கடையரே கல்லா தவர். 395

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத்து ஊறும் அறிவு 396

யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்

சாந்துணையும் கல்லாத வாறு. 397

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப்பு உடைத்து. 398

தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு

காமுறுவர் கற்றறிந் தார். 399

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடுஅல்ல மற்றை யவை. 400

“இப்போ நல்ல குடும்பத்தில் பிறந்த பிள்ளை கூடப் பெரியவர்களின் சொற்களைக் கேட்பதில்லை. எனது மூன்று

பிள்ளைகளும் நான் சொல்பவற்றைக் கேட்டுத் தட்டாமல் நடந்தவர்கள். நான்காவது மகன் திருமாறன் எதையும் கேட்கிறானில்லை” கலங்கினார் திருநாவுக்கரசு.

“ஐயா, கற்பதற்கேற்ற நூல்களைக் குற்றமில்லாமல் கற்கவேண்டும். அத்துடன் அந்நூல்களில் உள்ளபடி நடக்க வேண்டும் என்று நினைப்பவன் நான். உங்களது மகனால் பாடசாலையின் ஒழுக்கத்திற்குக் கேடாக உள்ளது. அவனுக்கு வேண்டியளவு புத்திமதிகள் கூறிவிட்டேன். எண்ணும் எழுத்தும் எம் இருகண்களைப் போன்றதென்றும், கற்றவர்களே கண்ணுடையவர்கள், கல்லாதவர்களின் கண்கள் புண்கள் என்றும், செல்வந்தர்கள் முன் ஏழைகள் இரப்பதற்கு நிற்பதைப் போல கற்காதவர்கள் கற்றவர்களைப் பணிந்து கற்றல் வேண்டும் என்றும், நிலத்தைத் தோண்டத் தோண்ட நீரின் அளவு கூடும். அதுபோலக் கற்கக் கற்கப் புகழின் அளவு கூடும் என்றும், கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டாகும் அதனால் ஒருவன் இறக்கும் வரையும் கற்க வேண்டும் என்றும், ஒருவன் ஒரு பிறிவியில் கற்கும் கல்வி அவன் எடுக்கும் ஏழு பிறவிக்கும் உதவும் என்றும், நான் கற்ற கல்வியால் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். அதுபோல உலக மக்கள் அனைவரும் நன்கு கல்வி கற்று இன்பமாக வாழ வேண்டும் என்று நினைப்பதால் தான் மாணவர்களுக்கு கூறுகின்றேன் என்றும், எவ்வயைாலும் அழிவடையாத கல்வியை முயன்று கற்க வேண்டும் என்றும் கல்வி நல்ல பண்புகளை வளர்க்கும் என்றும், கல்வியறிவுடையவரைப் பிரிவது துன்பம்

என்றும் பலமுறை உங்களது மகனுக்குக் கூறிவிட்டேன்” என்று பெரு மூச்சு விட்டார் தணிகாசலம்.

**அதிகாரம் - 41 கல்லாமை**

அரங்குஇன்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல் 401

கல்லாதான் சொல்கா முறுதல் முலைஇரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 402

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின் 403

கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்
கொள்ளார் அறிவுடை யார். 404

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 405

உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர் அனையர் கல்லா தவர். 406

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மான் புனைபாவை அற்று. 407

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. 408

மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்துஇலர் பாடு. 409

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். 410

“அவன் கேட்க மாட்டான் ஐயா, அவனது மூத்த சகோதர்கள் அவனைக் கொடுமையாகத் தண்டிப்பார்கள். எனது நண்பர்கள் புத்திமதி சொல்வார்கள். நான் காலையில் கல்லாமையால் வரும் தீமைகளைப் பற்றிச் சொன்னேன்; “மகனே, கற்பதற்கேற்ற நூல்களைக் கற்காவிட்டால் கற்றவர்கள் மதிக்க மாட்டார்கள். கற்றவர் உள்ள சபையில் கல்லாதவர்களைப் பேசக்கூட விடமாட்டார்கள். இந்தத் தன்மை ஆடுகளம் இல்லாமல் சூதாடுவதைப் போன்றது. கற்றவர் உள்ள சபையில் கல்லாதவன் ஒன்றைச் சொல்ல விரும்புவது மார்பகங்கள் இரண்டும் இல்லாத பெண் பிள்ளைப் பெற விரும்புவது போன்றது. கற்காவிட்டால் கற்றவர் சபையில் எதுவும் பேசாதிருந்தால் அவர் நல்லவராவர். கல்வியறிவில்லாதவர்கள் தமது அறிவைச் சிறப்புடைய தாகக் காட்டிக் கொண்டாலும் அதைச் சுற்றத்தவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். கல்லாதவன் பிறர் முன் பேசும் போது அவனது பேச்சைக் கொண்டே அறிஞர்கள் அவனது கல்வித் தரத்தைப் பற்றி உணர்ந்து கொள்வர்கள். கல்லாதவர்கள் பயிர்கள் விளையாத களர் நிலத்திற்குச் சமமானவர்கள். கல்லாதவனின் அழகிய தோற்றம் மண்ணாலான அழகிய பொம்மை போன்றது. கல்லாதவனிடம் சேரும் செல்வத்தால் பிறருக்குத் துன்பமுண்டாகும். அது நல்லவர்களது வறுமையை விடக் கொடியது. கல்லாதவர்கள் உயர்குடியிற் பிறந்தாலும் அவர்

தாழ்ந்தவராவார். தாழ்ந்த குடியிற் பிறந்த இழிந்தவரும் கல்வியில் உயர்ந்தால் அவர் உயர்ந்தவராவார். கற்றவர்கள் தான் மனிதர்கள். கல்லாதவர்கள் விலங்குகள். உனது சகோதரர்கள் நன்கு கற்றுள்ளனர். அதனால் மதிக்கப்படுகின்றனர். உனக்குக் காலம் போகவில்லை. இனியாவது நன்றாகப் படி" என்று பலமுறை சொல்லியும் கேட்கிறானில்லை" என்று விம்மினார் திருநாவுக்கரசு.

**அதிகாரம் - 42 கேள்வி**

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. 411

செவிக்குஉணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். 412

செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரொடு ஒப்பர் நிலத்து 413

கற்றிலன் ஆயினும் கேட்க அ∴துஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை. 414

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல். 415

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 416

பிழைத்துஉணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துஉணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர். 417

கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி 418

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது 419
செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என். 420

"கவலைப்படாதீர்கள். கிரகதோசத்தாலும் இவை நடைபெறலாம். கிரகசாந்தி செய்யுங்கள். அவன் திருந்துவான் என்று எனக்கு நம்பிக்கை இருக்கு" என்றார் தணிகாசலம்.

"அவனை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று கதிரேசன் கூறிவிடுச் சில கணங்கள் யோசித்தார். பின்பு சொன்னார்; "முருகானந்தத்தின் மகனுக்கு ஏதோ சுகவீனமென்றவன். என்ன வருத்தம்?" என்று கேட்டார் கதிரேசன்.

"அவன் நல்ல கெட்டிக்காரன். ஆனால் காது கேளாது. வைத்தியர்கள் பரிசீலித்து விட்டுக் காது கேட்கும் இயந்திரம் வாங்க வேண்டும் என்றும் சிறு சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்றும் சொல்கிறார்கள். அதற்க ஓர் இலட்ச ரூபா வேண்டும்" என்றார் தணிகாசலம்; "செவியால் கேட்பது ஒரு செல்வம். அது ஏனைய செல்வங்கள் அனைத்திலும் மிக மிக உயர்ந்தது. கேட்டறிதல் இல்லாதபோது தான் அறிஞர்கள் உணவு உண்பார்கள். செவி உணவான கேட்டல் அறிவை உடையவர்கள் தேவர்களுக்கு இணையானவர்கள். கற்காதவன் கண் தெரியாதவன் கூடக் கற்றவர்களிடம் கேட்டுக் கற்று

பெரும் அறிவாளியாகலாம். அந்த அறிவு ஊன்ற கோலைப் போலத் துணை செய்யும். கேட்கின்ற சொற்கள் கேட்கின்ற அளவிற்கு நன்மைகளைத் தரும். நுட்பமான கேள்வியறிவுள்ளவர்கள் தவறிக்கூட தீயசொற்களைப் பேச மாட்டார்கள். பெரியவர்களின் வார்த்தைகளைக் கேளாத காதுகள், கேட்கும் தன்மையுள்ள செவிட்டுக் காதுகள். கேள்வி ஒருவனை அறிவாளியாக்கும்; உயர்ந்தவனாக்கும்; பகுத்தறிவாளனாக்கும். செவியால் கேள்விச் சுவையை உணராதவர்கள் வாழ்ந்தாலென்ன இறந்தாலென்ன? இளமையிலேயே அவனது வாழ்வு பாழாவதை நான் விரும்பவில்லை. அதனால் நான் அதற்கான செலவு முழுவதையும் தருகிறேன்" என்றார் கதிரேசன்.

"நன்றி ஐயா" கலங்கினார் அதிபர்.

**அதிகாரம் - 43 அறிவு உடைமை**

அறிவு அற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளகழிக்கல் ஆகா அரண். 421

சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு 422

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு 423

எண்பொருள ஆகச் செலச் சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு. 424

உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு. 425

எவ்வது உறைவது உலகம் உலகத்தோட
அவ்வது உறைவது அறிவு. 426

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அ∴துஅறி கல்லா தவர். 427

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் 428

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய் 429

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 430

திருநாவுக்கரசு தனது இளைய மகனான திருமாறனைக் கொடூரமாகத் தண்டித்து விட்டு உணவு கொடாமல் மரத்தில் கட்டி வைத்திருந்தார். அதை அறிந்த கதிரேசன் அங்கு சென்றார். திருமாறன் விக்கி விக்கி அழுதபடியிருந்தான். அவனது உடலெங்கும் தழும்புகள் இருந்தன. அதைக் கண்டு பதறிப்போனார் கதிரேசன்.

“திருநாவுக்கரசு, இதென்ன முரட்டுத்தனமான வேலை. அறிவு இல்லையா உனக்கு? பச்சைப் பாலனைக் கொடூரமாகத் தண்டித்திருக்கிறாய். அறிவு என்பது அழிவு வராமல் காக்கும்

கருவி. பகைவர்களால் அழிக்க முடியாத கோட்டை. மனதை அது போன போக்கில் விடாமல் சிந்தித்து நல்ல செயல்களைச் செய்வது தான் அறிவு. யார் எதைச் சொன்னாலும், அதை அப்படியே ஏற்காமல் உண்மை நிலையை ஆராய்ந்து அறிந்து கொள்வது தான் அறிவு. நாம் பிறருக்குச் சொல்வதை அவர்கள் புரிந்து கொள்ளும்படி சொல்லுதல் வேண்டும். பிறரிடம் கேட்பதையும் சரியாகப் புரிந்து கொள்ளல் வேண்டும். உலகத்தில் உயர்ந்தவர்களை நட்பாக்கிக் கொள்ளல் வேண்டும். அவர்கள் சொல்வதைக் கேட்டல் வேண்டும். அது போல உயர்ந்தவர்களைப் பின்பற்றி வாழுதல் வேண்டும். பின்பு நடக்கப் போவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளல் வேண்டும். திருமாறனின் செயல்களுக்கு நீயும் உனது குடும்பமும் தான் காரணம். அஞ்சாமலிருப்பது. அஞ்சாதவற்றிற்கு அஞ்சுவது அறிவாகாது. நீ பின்வரக்கூடியவற்றை அறியாமல் இருக்கிறாய். அது அறிவுடைமையாகாது. அறிவுள்ளவர்கள் எதுவும் இல்லாவிட்டாலும் எல்லாம் உள்ளவர்கள் என்று அறிஞர்கள் சொல்வார்கள். தண்டிப்பது அறிவாகாது. மன்னிப்பது தான் அறிவு. நீ உனது மற்றைய பிள்ளைகளைப் போலத் திருமாறனும் கல்வி கற்க வேண்டுமென்று விரும்புகிறாய். அதற்காகப் பலாத்காரத்தை உபயோகிக்கிறாய். அது பலன் தராது. நான் திருமாறனை எனது வீட்டிற்குக் கூட்டிச் செல்கிறேன். அவன் அங்கேயே வளரட்டும். நான் வளர்த்துக் காட்டுகிறேன்” உணர்ச்சி வசப்பட்டார் கதிரேசன்.

**அதிகாரம் - 44** **குற்றம் கடிதல்**

செருக்குஞ் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. 431

இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு. 432

தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 433

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை. 434

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 435

தன்குற்றம் நீங்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு? 436

செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பாலது அன்றிக் கெடும். 437

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன்று அன்று 438

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. 439

காதல காதல் அறியாமை உய்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல் 440

முருகானந்தம் கதிரேசனைத் தேடி அவரது வீட்டுக்கு வந்தான். அப்போது கதிரேசன் வீட்டில் இருந்தார். திருமாறன் படித்துக்கொண்டிருந்தான்.

“ஐயா, உங்களின் இனத்தவனல்ல நான். இருந்தும் எனது மகனுக்குப் பெரும் உதவி செய்திருக்கிறீர்கள். அதனால் அவன் இம்முறை மருத்துவ பீடத்திற்குத் தெரிவாகியிருக்கிறான். கர்வம், சினம், காமம். ஆகிய குற்றங்கள் இல்லாத உயர்ந்தவர் நீங்கள் பொருள் கொடுத்து உதவாத தன்மையும், பெருமைஇல்லாத தன் மானமும், தகுதியல்லாத மகிழ்ச்சியும் பெரியவர்களுக்கு இருக்கக்கூடாது. எனது மைத்துனனான பரமசிவம் எனது மகனை அனாதை ஆச்சிரமத்தில் கொண்டு சென்று விடச் சொன்னான். நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் தங்களின் உதவி அவனைப் பெரும் மனிதனாக்கி விட்டது. பெரியவர்கள் சிறு குற்றங்களையும் செய்ய மாட்டார்கள். தீயவர்கள் அஞ்சாது பெரும் தீங்குகளைச் செய்வார்கள். குற்றங்கள் தான் மனிதரை அழிப்பது. குற்றம் செய்பவனுடைய வாழ்வு நெருப்பின் அருகே உள்ள வைக்கோல் போன்றதென்று தெரிந்தும் பலர் அஞ்சாது குற்றங்களைச் செய்கிறார்கள். தன்னிடமுள்ள குற்றங்களை நீக்கிவிட்டுத் தான் மற்றவர்களின் குற்றங்களைப் பற்றிப் பேச வேண்டும்”.

“ஐயா, நீங்கள் குற்றங்கள் செய்யாத தருமவான். அதனால் தான் ஏழைகளுக்கு உதவுகிறீர்கள். தான தர்மம் செய்யாதவனின் செல்வம் பாதுகாப்பின்றி அழிந்து விடும் எனப்

பெரியவர்கள் சொல்வார்கள். உலோபித்தனம் எல்லாக் குற்றங்களையும் விட மேலான குற்றம். தற்பெருமை கொள்வதும், நன்மை தராத செயல்களில் ஈடுபடுவதும் துன்பத்தையேதரும். தான் செய்ய விரும்புபவற்றை யாருக்கும் தெரியாது செய்யும் தருமவானான நீங்கள் என்றும் பெருவாழ்வு வாழ வேண்டும்” என்றான் முருகானந்தன்.

**அதிகாரம் - 45 பெரியாரைத் துணைக்கோடல்**

அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல் 441

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 442

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் 443

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. 444

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல் 445

தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல். 446

இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர் 447

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். 448

முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்புஇலார்க்கு இல்லை நிலை. 449
பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். 450

முருகானந்தன் சென்ற பின் திருமாறன் வந்து கதிரேசனின் கால்களைப் பிடித்தான்.

“மாமா, தவறு செய்து விட்டேன். வீட்டில் இருக்கும் வரை நான் செய்வது தவறென்று எனக்குப் புரியவில்லை. வீட்டில் உள்ளவர்கள் என்னைப் புரியாது எனக்குத் தண்டனைகளைத் தந்தனர். அத்தண்டனைகள் என்னைச் சினங் கொள்ள வைத்தன. நேற்று எனது மாற்றத்தைக் கண்டு அதிசயித்த அதிபர் என்னோடு மிகமிக அன்பாகப் பேசினார்”.

“திருமாறா, அறம் உணர்ந்தவராய், தம்மை விட மூத்தவராய் உள்ள அறிவுடையவர்களுடன் சேர வேண்டும். கதிரேசன் நல்லவர்; வல்லவர்; அறிவுள்ளவர். வந்துள்ள துன்பத்தைப் போக்கி, இனிவரப்போகும் துன்பத்தை உணர்ந்து அதன்படி நடப்பவர். அத்தகையவரைப் போற்றி அவருடன் இருக்கும் நீ கெட்டிக்காரன். அப்படிச் சேர்ந்திருப்பது வல்லமைகள் யாவற்றிலும் வல்லமை. தக்க வழிகளை ஆராய்ந்து சொல்பவர்கள் அரசர்களுக்கே கண்களைப் போன்றவர்கள். அறிவிற் சிறந்தவரான கதிரேசனுடன் சேர்ந்திருக்கும் நீ எதிர்காலத்தில் ஒரு சிறந்த வைத்தியனாவாய்

என்று நான் நம்புகிறேன். அன்புடன் கண்டித்து அறிவுரை சொன்னால் கேட்காதவனும் கேட்பான் என்பதற்கு உதாரணம் நீ. மூலதனம் இல்லாத வியாபாரிக்கு வருவாய் இல்லை. அது போல அன்புடன் கண்டித்துத் திருத்தும் பெரியவரின் துணையில்லாத மனிதர்களுக்கு நல்வாழ்வு இல்லை. நல்லவரவு தொடர்பைக் கைவிடுவது பலரது பகையைத் தேடித்தரும். நீ நல்லவன். கதிரேசன் வல்லவர்" என்றார். உங்களின் நம்பிக்கையை நான் கெடுக்க மாட்டேன்" என்று கலங்கினான் திருமாறன்.

**அதிகாரம் - 46 சிற்றினம் சேராமை**

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 451

நிலத்து இயல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பது ஆகும் அறிவு. 452

மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான்ஆம்
இன்னான் எனப்படும் சொல் 453

மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துஉள தாகும் அறிவு. 454

மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்

இனம்தூய்மை தூவா வரும். 455

மனம்தூயார்க்கு எச்சம்நன்று ஆகும் இனம்தூயார்க்கு
இல்லைநன்று ஆகா வினை. 456

மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும். 457

மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து. 458

மனநலத்தின் ஆகும் மறுமைமற்று அ.்.தும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து. 459

நல்லினத்தின் ஊங்கும் துணைஇல்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். 460

“மாமா, நல்லவர்கள் எப்போதும் நல்லவர்கள் தான். அவர்களுக்குத் தீய எண்ணங்கள் வராது. அப்பாவோடு பரமசிவம் எப்போதும் பிரச்சினைப்படுபவர். அவர்தான் எனது இந்த நிலைக்குக் காரணம். அவர் அப்பாவின் மீதிருந்த பகையைத் தீர்ப்பதற்கு என்னைப் பயன்படுத்தினார். அவரது மயக்கும் வார்த்தைகளை உண்மையானவை என நினைத்து விட்டேன். அவர் மதுவைக்கூடக் குடிக்கச் சொல்வார்.”

“கதிரேசன் அதிர்ந்து போனார். தணிகாசலம் பரமசிவத்தைப் பற்றிச் சொன்னது சரிதான்” என்று நினைத்தார்.

“கதிரேசண்ணை, நீங்கள் பெருமைக்குரிய குணங்களைக் கொண்டவர். தீயவர்கள் தீயவர்களையே தமது சுற்றமாகக் கொள்வார்கள். நீரானது சேரும் மண்ணுக்கேற்ப மாறும். அது போல மக்களும் தமது சேர்க்கையால் மாறுபாடடைவார்கள். திருமாறன் பரமசிவத்துடன் திரிவதை நான் பலமுறை கண்டேன். அவன் தான் திருமாறனைக் கெடுக்கிறான். மக்களது இயல்பான அறிவு மனத்தால் உண்டாகும். அவனது குணம் சேரும் இனத்தால் உண்டாகும். ஒருவனது நடத்தையைத் தீர்மானிப்பது அவன் சேரும் நண்பர்களைப் பொறுத்ததேயாகும். மனத்தின் தூய்மையும் அவன் சேரும் இனத்தைப் பொறுத்தே அமையும். நல்லவரரோடு சேர்பவர் நல்லவராவர். அது போலத் தீயவர்களோடு சேர்பவர் தீயவராவர். நல்லவர்களின் உறவு ஆக்கத்தையும் புகழையும் தரும். அத்துடன் அவர்களுக்குப் பாதுகாப்பாகவும் இருக்கும். அது எடுக்கும் பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும். உலகில் ஒருவருக்கு நல்ல இனத்தை விடச் சிறந்த துணையில்லை. அதுபோலத் தீய இனத்தை விடத் துன்பம் தரும் பகையும் இல்லை. அதனால் திருமாறனைப் பரமசிவத்துடன் சேராமற் பண்ணுங்கள்” என்றார். அது எவ்வளவு உண்மை என்று நினைத்தார் கதிரேசன்.

**அதிகாரம் - 47 தெரிந்து செயல்வகை**

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல் 461

தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல். 462

ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 463

தெளிவு இலதனைத் தொடங்கார் இளிவுஎன்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர். 464

வகைஅறச் சூழாது எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு. 465

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். 466

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு 467

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். 468

நன்றுஆற்றல் உள்ளும் தவறுஉண்டு அவரவர்
பண்புஅறிந்து ஆற்றாக் கடை 469

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு. 470

தணிகாசலம் பாடசாலையில் தண்ணீர்த் தாங்கி அமைப்பது சம்பந்தமாகப் பெற்றோருடன் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார்.

“ஆயிரம் பிள்ளைகள் படிக்கும் இப்பாடசாலைக்கு ஒரு நீர்தாங்கி அமைத்தல் வேண்டும். அது இல்லாததால் பெரும் கஷ்டமாக இருக்கிறது. மாணவர்களின் உடல் நலத்திற்கும் கல்விக்கும் பெரும் இடஞ்சலாக இருக்கிறது. ஒரு செயலைத் தொடங்குமுன் அதனால் வரும் அழிவையும் , அதன்பின் வரும் ஆக்கத்தையும் , செய்து முடித்த பின் வரும் ஆக்கத்தைப் பற்றியும் ஆராயவேண்டுமென்பார்கள். பெரும்பணம் தேவை. கட்டிமுடித்தால் மாணவர்களின் கற்கும் நேரம் கூடும்.; உடல் ஆரோக்கியமாகும்; விபத்துக்கள் தவிர்க்கப்படும். ஒரு செயலைச் செம்மையாகச் செய்யத் தெரிந்தவர்களுடன் ஆலோசிக்க வேண்டும். என்பதற்காகத் தான் நான் ஊர்ப் பெரியவர்களை அழைத்துள்ளேன். எனது முடிவு கட்டாயம் நீர்த்தாங்கி அமைக்க வேண்டுமென்பதே. வரவிருக்கும் நன்மையைக் கருத்தித் தான் சொல்கிறேன். தமக்கு இழிவேற்படுவதை விரும்பாதவர்கள் செய்ய முடியாத செயலைச் செய்யத் தொடங்க மாட்டார்கள். செய்ய முடியாத செயலை செய்யத் தொடங்குவதால் பகையும் பழியும் வந்து சேரும் என்பது எனக்குத் தெரியும். ஒருவன் செய்யக் கூடாததைச் செய்வதும், செய்ய முடிந்ததைச் செய்யாது விடுவதும் கேடு பயக்கும். செய்யுமுன்பே ஆலோசிக்க வேண்டும். தொடங்கிய பின் ஆலோசிப்பது செயலைக் கைவிடும் செயலாகும். முறைப்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்யப்படாத செயலுக்கு ஆயிரம் பேர் உதவி செய்தாலும் அது முடிவு

பெறாது. ஒவ்வொருவரினதும் எண்ணத்தை அறியாது செயலைத் தொடங்குவது தவறாக அமைந்து விடும். தம் நிலைக்குப் பொருந்தாதவற்றைப் பெற்றோர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதனால் தான் உங்களை அழைத்துள்ளேன். ஒவ்வொருவரும் அச்சமின்றித் தம் கருத்தைச் சொல்லலாம்". என்றார் தணிகாசலம்.

**அதிகாரம் - 48** **வலி அறிதல்**

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல் 471

ஒல்வது அறிவது அறிந்துஅதன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல். 472

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். 473

அமைந்தாங்கு ஒழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும். 474

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். 475

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்

உயிர்க்குஇறுதி யாகி விடும். 476

ஆற்றின் அளவிறந்த ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி. 477

ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை 478

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். 479

உளவரைத் தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும். 480

"கதிரேசன் எழுந்து சொன்னார்; "தான் எடுத்துக் கொண்ட செயலின் வலிமை, தன்னுடைய வலிமை, எதிர்ப்பவர்களுடைய வலிமை, இருதரப்பினருக்கும் துணையாக வருவோரின் வலிமை ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்த பின்பே செயற்படல் வேண்டும். தன்னால் செய்ய முடியும் என்பதையும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்று அறிந்து தளராது முயற்சிப்பவன் கட்டாயம் வெற்றிபெறுவான். தன்னுடைய வலிமையை அறியாதவர்கள் தான் தோல்வியடைவார்கள். ஆற்றல் உள்ளவர்களுடன் ஒத்துழைக்காமல், தனது வலிமையையும் அறியாது, தன்னைத் தான் பெரிதாக நினைப்பவன் விரைவில் கெட்டுப் போவான். மிக மெல்லிய மயிலிறகேயானாலும் அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றினால்,

வண்டியின் அச்சு முறிந்து விடும். அது போல மரத்தின் உச்சிவரை ஏறியவர். அதையும் கடந்து மேலே ஏற முயன்றால், அது அவருடைய உயிருக்கே ஆபத்தாக அமையும். ஒவ்வொருவரும் தமது வருவாயை உணர்ந்த பின்பு தான் உதவ முன்வரல் வேண்டும். அதுதான் நாணயமாக வாழும் முறை. பொருள் வரும் வழி சிறிதாக இருந்தாலும் போகும் வழி பெரிதாக இல்லா விட்டால் தீங்கு இல்லை. அதனால் பணம் கொடுக்க முடியாதவர்கள், பொருளாகவோ, சேவையாகவோ செய்யலாம். தன் வருவாயின் அளவைத் தெரியாதவனுடைய பகட்டு வாழ்க்கை பிரகாசமாக இருப்பது போலக் காட்டும். அதனால் அழிவே உண்டாகும். தமக்குரிய பொருளின் அளவை உணர்ந்து உதவுங்கள். அதிபர் நல்லவர்; வல்லவர்; முயற்சியுடையவர்; எடுத்த செயலைச் செய்து முடிப்பவர். நீர்த்தாங்கியில்லாததால் மாணவர்கள் கிணற்றில் தவறி விழுவது உங்களுக்குத் தெரியும். யாவற்றையும் உணர்ந்து செயற்படுங்கள்" என்று கூறிவிட்டு அமர்ந்தார் கதிரேசன்.

**அதிகாரம் - 49 காலம் அறிதல்**

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 481

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு. 482

அருவினை என்ப உளவோ கருவியாள்

காலம் அறிந்து செயின். 483

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின் 484

காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர். 485

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து. 486

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்பேர்ப்பர் ஒள்ளி யவர் 487

செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை. 488

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல். 489

கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து. 490

கூட்டம் முடிந்து எல்லோரும் சென்று விட்டனர். கதிரேசனும் திருநாவுக்கரசுவும் தணிகாசலமும் பாடசாலையில் கதைத்துக் கொண்டிருந்தனர்.

“நேற்றுப் பரமசிவத்தின் இளைய மகன் கிணற்றில் விழுந்து மயக்கமடைந்ததைச் சாட்டாக வைத்துப் பரமசிவத்திடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்று விட்டீர்கள்.

காக்கை தன்னை விட வலிமை உடைய கோட்டானைப் பகலில் வென்று விடும். அதுபேலக் காலமறிந்து செயற்படுவோர் காரியத்தை முடித்து விடுவார்கள். காலத்திற்கு ஏற்றபடி நடந்தால் நினைத்தவற்றை நினைத்தவாறு அடையலாம். செயலை முடிப்பதற்கேற்ற முக்கிய கருவியான திட்டத்துடன் நடந்து கொண்டமையால் தான் வெற்றி கிட்டியது. பரமசிவம் எதுவும் பேசத்தோன்றாமல் சம்மதித்ததால் தான் அவனது நண்பர்களும் மறுபேச்சுப் பேசவில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகளை நன்குணர்ந்து செயற்படுவோர் இந்த உலகத்தை அடைய வேண்டும் என்று நினைத்தாலும் அதுவும் கைகூடும். ஊக்கம் உடையவர்கள் அடங்கியிருப்பது, சண்டையிடும் ஆட்டுக்கடா தாக்குவதற்குரிய வேகத்தைப் பெறுவதற்காகப் பின்னே செல்வதைப் போன்றது. இவ்வளவு காலமும் பிள்ளைகள் கிணற்றில் தவறி விழும் போது பொறுத்திருந்த நீங்கள் பரமசிவத்தின் மகன் விழுந்ததைப் பயன்படுத்தி விட்டீர்கள்". என்றார் கதிரேசன்.

"பகைவர்கள் தீங்கு செய்தால் அறிவுடையவர்கள் அடங்கியிருந்தது தக்க காலம் வரும் போது செயற்படுவர் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதைத்தான் அதிபர் செய்துள்ளார்" என்றார் திருநாவுக்கரசு.

"காலம் கனியட்டும் எனக் காத்திருந்தேன். காலம் வந்து விட்டது செயலும் முடிந்து விட்டது. காலத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். பெரிய மீன் வரும் வரை காத்திருக்கும் கொக்கைப் போலக் காத்திருந்தேன். காலம் வந்தது. அதனால்

அரிய செயலைச் செய்ய முடிந்தது” என்றார் தணிகாசலம். அவரது முகத்தில் மகிழ்ச்சி பெருகியிருந்தது.

**அதிகாரம் - 50** **இடன் அறிதல்**

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது. 491

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்துஆம்
ஆக்கம் பலவும் தரும். 492

ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின் 493

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின் 494

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 495

கல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல் ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து 496

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின் 497

சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும். 498

சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தொடு ஒட்டல் அரிது. 499

காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு. 500

“முழுமையாகச் செய்து முடிக்கும் வாய்ப்பு வந்துள்ளது. பரமசிவம் தான் பாடசாலைக் கருமங்களை எதிர்ப்பவர். அவர் தான் தருவதாச் சொன்ன பணத்தைத் தந்து விட்டார். எனவே நல்ல நாளில் ஆரம்பிக்கலாம்’ என்றார் தணிகாசலம்.

“ஆரம்பிக்கலாம் எனினும் பரமசிவம் தொல்லைகள் கொடுப்பான். அவதானமாக இருத்தல் வேண்டும்” என்றார் கதிரேசன்.

“எமக்குப் பாதுகாப்பாகக் கல்வித்திணைக்களம் இருக்கு அவர்களிடம் அனுமதி எடுத்தாயிற்று. அத்துடன் நல்லவர்கள் பலர் எம்முடன் இருக்கிறார்கள்” என்றார் தணிகாசலம்.

“நன்கு திட்டமிட்டு, எதிரியையும் இணைத்து, தக்கபடி செயலை மேற்கொண்டால் வலிமையில்லாதவனும் வெற்றியடைவான். அதிபர் வலிமையானவர். எதிரிகளையும் நேசிப்பவர். ஆழமான நீரில் முதலை பிற உயிர்களை வென்றுவிடும். ஆனால் தரையில் அதன் பலம் பலிக்காது. இப்போ பரமசிவம் தரையில் உள்ள முதலை. வலிமை மிக்க சக்கரங்களை உடைய தேர் கடலில் ஓடாது. கடலில் செல்லும்

கப்பல் தரையில் செல்லாது. செய்யும் செயல்களை தர்மமான முறைப்படி செய்தால் யாருக்கும் அஞ்சத்தேவையில்லை. சிறியபடையை உடைய அரசனும் வாய்ப்பான இடத்தை அடைந்து விட்டால், அவனை வெல்ல முடியாது. பலமான கோட்டையையும், வீரமான படையையும் உடைய அரசனானாலும் பகையரசனைத் தேடிச் சென்று வெல்ல முடியாது. பலபோர்களில் வெற்றியடைந்த யானை சேற்றில் அகப்பட்டால் தப்ப முடியாது அல்லறபடும் அதிபர், வீரன், பொறுமைசாலி; நினைத்ததை நினைத்தவாறு செய்து முடிப்பவர். அதனால் பரமசிவத்தைப் பற்றிப் பயப்படத் தேவையில்லை" என்றார் திருநாவுக்கரசு.

**அதிகாரம் - 51** **தெரிந்து தெளிதல்**

அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்
திறம் தெரிந்து தேறப்படும். 501

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு. 502

அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. 503

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் 504

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 505

அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி. 506

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும். 507

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். 508

தேறற்க யாரையும் தேராது தேர்ந்த பின்
தேறுக தேறும் பொருள் 509

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். 510

“பரமசிவம் கட்டிட நிர்மான வேலையை மகேந்திரன் என்ற கொத்தனாரிடம் கொடுக்கச் சொல்கிறார். மகேந்திரன் எனது மாணவன் தான். ஆனால் அவன் ஒழுங்காகத் தொழில் செய்வதில்லை. அறம், பொருள், இன்பம். தன் உயிருக்காக அஞ்சுகின்ற அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராயப்பட்ட பின்பே ஒருவன் தொழிலுக்குத் தகுந்தவன் தானா என்று அறிய முடியும். நற்குடியிற் பிறந்து குற்றங்களிலிருந்து நீங்கிப் பாவச் செயல்களைச் செய்ய நாணப்படும் ஒருவனைத் தான் நம்பலாம். அரிய நூல்களைக் கற்றுக் குற்றங்கள் இல்லாதிருக்கும் பெரியவர்களிடமும் அறியாமை இருக்கும். பரமசிவமும் மனோகரனும் நண்பர்கள். இருவரும் ஒத்த குணங்களை உடையவர்கள்” என்றார் தணிகாசலம்.

"ஒருவனது குணங்களை ஆராய்ந்து பின் குற்றங்களை ஆராய்ந்து அவற்றுள் எது மிகுதியாக இருக்கிறதோ, அதைக் கொண்டே அவனது தகுதியைத் தீர்மானிக்க வேண்டும். அதற்கு உரைகல்லாக இருப்பது அவனது செயல்கள். சுற்றத்தாருடன் இருவரும் தொடர்பில்லாதவர்கள். இப்படியானவர்களை நம்பக்கூடாது. இப்படியனவர்கள் பழிக்கு அஞ்சமாட்டார்கள். இப்படியானவர்களைச் சிபாரிசுகாரணமாக நம்பினால் பல துன்பங்களைச் சந்திக்க வேண்டி வரும். தெரிந்த பின்பும் நம்பக்கூடாது. நம்பினால் தீராத துன்பங்கள் தான் வரும் ஒருவரை ஆராயாமல் நம்புவதும், நம்பிய பின் சந்தேகப்படுவதும் நீங்காத துன்பங்களையே தரும். அதனால் சின்னத்துரையிடம் வேலையை ஒப்படையுங்கள்" என்றார் கதிரேசன். தணிகாசலம் அதை ஏற்றுக் கொண்டார்.

**அதிகாரம் - 52 தெரிந்து வினையாடல்**

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். 511

வாரி பெருக்கி வளம்படுத்த உற்றவை
ஆராய்வான் செய்க வினை. 512

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு 513

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர். 514

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்

சிறந்தான் என்று ஏவற்பாற் றன்று. 515
செய்வானை நாடி வினைநாடிக் காலத்தொடு
எய்த உணர்ந்து செயல். 516
இதனை இதனான் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். 517
வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரியன் ஆகச் செயல். 518
வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக
நினைப்பானை நீங்கும் திரு. 519
நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு. 520

“நன்மையையும், தீமையையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவைற்றைச் செய்பவன் தான் செயலுக்கு உரியவன். பொருள் வரும் வழிகளைப் பெருக்கி, அவற்றை வளம் உண்டாக்கும்படி மேலும் வளர்த்து, இடையில் ஏற்படும் துன்பங்களை நீக்கித் தான் ஏற்றுக் கொண்ட செயலைத் தாமதமின்றிச் செய்து முடிப்பவனே செயல் வீரனாவான். அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், ஆசையில்லாமைஆகியன உள்ளவனே நம்பிக்கைக்குரியவன். எவ்வாறு ஆராய்ந்து முடிவெடுத்தாலும் செயலைச் செய்யும் போது மனம் மாறுபாடடைபவர்களும் இருக்கிறார்கள் தான்” என்றார் தணிகாசலம்.

“உண்மைதான், ஆனால் நீங்கள் சொன்ன அத்தனை தகுதிகளும் சின்னத்துரைக்கு உண்டு. செய்யும் வழிகளை நன்கறிந்து, எதிர்கொள்ளும் இடையூறுகளைத் தாங்கிக் கொண்டு செயலை முடிப்பவனை விட்டு விட்டு, வேறுகாரணங்களுக்காக வேறொருவனிடம் செயலை ஒப்படைக்கக் கூடாது. சின்னத்துரை நல்லவன் மட்டுமல்ல வல்லவனும் கூட. பரமசிவத்தை அவன் சமாளிப்பான். அவனுக்கு எல்லோரையும் சமாளிக்கத் தெரியும். நல்ல கொத்தனார் என்று ஊரில் பெயர் எடுத்தவன். ஊரவரில் பெரும்பான்மையானவர்கள் அவனைக் கொண்டே செயலைச் செய்விக்கின்றனர். தான்மேற்கொள்ளும் செயலில் எப்பொழுதும் முயற்சியுள்ளவனைத் தவறாக எண்ணும் தலைவனின் செயல் நட்டத்தைத் தருவதோடு அது முடியாது.” என்றார் கதிரேசன்.

“இந்தச் செயலை இத்தகைய முறையால் இவன் முடிப்பான் என்றும், இந்தச் செயலை முடிக்க இவன் தான் தகுதியானவன் என்றும் தெரிந்த பின்பு தான் நான் கொடுத்துள்ளேன். தொழில் செய்பவன் மனங்கோணாமல் தொழிலைச் செய்யும் வரை உலகம் கெடாது. அதனால் தொழில் கொடுப்பவன் தொழில் செய்பவனின் மனம் கோணும்படியாக நடக்கக் கூடாது” என்றார் தணிகாசலம்.

**அதிகாரம் - 53 சுற்றம் தழால்**

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள 521

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும். 522

அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடுஇன்றி நீர்நிறைந் தற்று. 523

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். 524

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தான் சுற்றப் படும். 525

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல். 526

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. 527

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். 528

தமராகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும். 529

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல். 530

கதிரேசுவின் மனைவி அன்னபூரணம் ஒரு பொதியைக் கொண்டு வந்து வைத்துவிட்டுச் சொன்னாள்; “ஏகாம்பரம் இரண்டு மூன்று தரம் வந்தது, நீங்கள் இல்லை. உங்களைப் பார்க்க விருப்பமாக இருக்காம். கிழவன் ஆசைப்படுது. “ஒருவன் வறியவனான காலத்திலும் அவனுடன் உறவு கொண்டு அன்புடன் பழகுவது நல்ல உறவினர்களிடத்தில் இருக்குமென்றும் அப்படியான உறவு மேலும் மேலும் செல்வத்தைத் தரும்” என்றும் சொல்வீர்கள். ஏன் அங்கு செல்லவில்லை? உணவுப் பொருட்கள் வைத்துள்ளேன் கொண்டு சென்று கொடுங்கள்”

“உண்மைதான். பாடசாலை வேலை காரணமாகச் செல்வில்லை. அது எனது மனதை உறுத்திக் கொண்டிருக்கிறது. சுற்றத்தவர்களுடன் மனங் கலந்து பழகாதவனுடைய வாழ்க்கை, கரையில்லாத குளம் நீர் நிறைந்ததைப் போன்றது. சுற்றத்தார் சுற்றியிருக்க வாழ்வது தான் செல்வத்தைப் பெற்றதன் பயன் என்று பெரியவர்கள் சொல்வார்கள். சுற்றத்தவருடன் இனிமையாகப் பேசி, உதவிகள் பலவும் செய்வோரைச் சுற்றத்தினர் எப்பொழுதும் சூழ்ந்திருப்பர்”.

“ஒருவர் கோபங்கொள்ளாதவராகவும், கொடுத்துதவுப - வராகவும் இருந்தால் சுற்றத்தார் எல்லோரும் அவரது அன்புக்காக ஏங்குவர். காக்கை தனக்குக் கிடைத்ததைக் கூவி அழைத்துச் சேர்ந்தே உண்ணும். அத்தகைய குணம்

உடையவர்களுக்குச் சுற்றத்தாரால் ஆக்கம் உண்டாகும் என்பர். நீங்கள் அப்படி வாழ்வதால் தான் எல்லோரும் தேடியலைகிறார்கள்” என்றாள் அன்னபூரணம்.

“அரசன் கூட எல்லோரையும் ஒரே மாதிரியாகப் பாராமல், அவரவர் தகுதியறிந்து நடந்தால், அந்தச் சிறப்பால் அவனை நெருங்கிப் பலர் வாழ்வர். ஏகாம்பரம் முன்பு காணிப் பிரச்சினையால் என்னைத் தவறாக நினைத்துப் பிரிந்து சென்றவர். பின் தனது தவறை உணர்ந்து திரும்பி வந்தார். நான் அது பற்றி நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பே உறவாக்கிக் கொண்டேன். அவர் மிக மிக நல்லவர் . அவரைக் கெடுத்தது பரமசிவம். இப்போ அவர் அப்படியில்ல” என்றார் கதிரேசன்.

**அதிகாரம் - 54 பொச்சாவாமை**

இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு 531

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. 532

பொச்சார்ப்பாக்கு இல்லை புகழ்மை அது உலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு. 533

அச்சம் உடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு. 534

முன்உறக் காவாது இழுக்கியான் தன்பிழை

பின்ஊறு இரங்கி விடும். 535

இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அ.ஃ.துஒப்பது இல். 536

அரியஎன்று ஆகாத இல்லை பொச்சாவாக்
கருவியான் போற்றிச் செயின். 537

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். 538

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து 539

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின். 540

“திருப்பித் திருப்பிச் சொல்லியும் நீ மறந்து போனாய். அப்படியென்ன மறதியோ எனக்குத் தெரியவில்லை. மிகப் பெரிய மகிழ்ச்சியான வேளையிலும் கூட மறப்பது ஒருவனுக்கு அளவு கடந்த கோபம் வருவதை விடத் தீமையானது. நீங்காத வறுமை அறிவைக் கொல்வது போல, மறதி புகழைக் கொன்று விடும் என்று உலகில் உள்ள எல்லா நூல்களும் கூறுகின்றன. பயந்தவன் பாதுகாப்பான கோட்டைக்குள் இருந்தாலும் பாதுகாப்பில்லை. அது போல மறதி உடையவனுக்கு எல்லாச் செல்வங்களும் இருந்தாலும் அவற்றால் பயன் இல்லை. வரும் துன்பங்களை முன்பே அறிந்து காத்துக் கொள்ளாதவன், அது வந்த பின் வருந்துவதால் பயன் இல்லை. மறதி என்ற சோர்வு இல்லாதவன் எல்லா நன்மைகளையும் பெறுவான். மறதியில்லாதவனால் செய்ய முடியாதது எதுவும் இல்லை.

அறிவுடைய பெரியவர்கள் போற்றிய செயல்களை மதித்துச் செய்தல் வேண்டும். அதைச் செய்ய மறந்தவர்களுக்கு ஏழு பிறவிகளிலும் நன்மை இல்லை. தாம் தம்முடைய மகிழ்ச்சியால் கர்வம் கொள்ளும் போது அத்தகைய மகிழ்ச்சியால் கர்வம் கொண்டு கடமையை மறந்து அழிந்தவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும். ஒருவன் தான் எண்ணியத்தை அடைய வேண்டுமானால் சோர்வில்லாது தொடர்ந்து முயற்சித்தல் வேண்டும்" என்று கோபமாகக் கூறினார் கதிரேசன்.

"உண்மைதான். நீ எத்தனையோ தரம் சொன்ன போதும் நான் மறந்து விட்டேன்" என்று கவலைப்பட்டார் திருநாவுக்கரசு.

"உனது மறதியால் அதிபருக்குக் கெட்ட பெயர். அத்திபாரம் வெட்டப் பலரும் வந்து விட்டனர். உன்னிடம் சொல்லச் சொன்ன கொத்தனார் சின்னத்துரை நீ சொல்ல மறந்ததால் வரவில்லை. அதனால் கல்வித்திணைக்கள அதிகாரிகள் கோபப்பட்டனர்" என்றார் கதிரேசன்.

**அதிகாரம் - 55** **செங்கோன்மை**

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்தசெய் வ.்.தே முறை. 541

வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. 542

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். 543

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 544

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு. 545

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடாது எனின். 546

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். 547

எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும். 548

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில் 549

கொலையின் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 550

"அன்றுகாலை அதிபர் தணிகாசலம் மாணவர்களுக்கு நற்சிந்தனை வழங்கினார்; "அன்பான மாணவர்களே, நீங்கள் எப்பொழுதும் ஒழுக்கம் தவறாமல் வாழ வேண்டும். ஒழுக்கமும் நீதியும் தான் உங்களை உயர்த்தும் ஏணி. தமிழ் நாட்டை மனுநீதி கண்ட சோழன் என்ற அரசன் ஆளும் போது, அவனது மகன் தேரினால் ஒரு பசுக்கன்றை நெரித்துக் கொன்று விட்டான். அதைத் தாய்ப்பசு மணி அடித்து முறைப்பாடு செய்தது. உடனே சோழன் தனது மகனையும் தேர்ச் சில்லில் வைத்து நசித்துக் கொல்லச் சொன்னான்".

"யாராக இருந்தாலும் அவர்கள் செய்த குற்றத்தை ஆராய்ந்து இரக்கம் காட்டாமல் நடுவு நிலையில் நின்று தண்டனை அளிப்பதே சிறந்த நீதி. உயிர்கள் மழையை நம்பி வாழ்கின்றன. அதுபோல குடிகள் அரசனது செங்கோலை நம்பி வாழ்கிறார்கள். அந்தச் செங்கோல் அந்தணர் ஓதும் வேதத்திற்கும் அறத்திற்கும் காவலாக இருக்க வேண்டும். குடிகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து நல்லாட்சி புரியும் மன்னனைப் பின்பற்றி உலகம் நடக்கும். இத்தகைய அரசன் அரசாளும் நாட்டில் பருவ மழை குறையாது. அதனால் தானியங்கள் அமோகமாக விளையும். அரசனுக்கு வெற்றி பெற்றுக் கொடுப்பது ஆயுதங்கள் அல்ல. நீதி தவறாத ஆட்சியே. அந்த நீதி எப்போதும் அரசனைக் காப்பாற்றும். மக்கள் தமது குறைகளை நேரிற் சென்று கூறத்தக்க முறையில் மன்னன் இல்லாவிட்டாலும், ஆராயாது தண்டனை வழங்கினாலும் அரசனின் வாழ்வு கெடும். குடி மக்களுக்குத் தன்னாலும், பிறராலும் ஆபத்து வராமல் காப்பதோடு கொடிய செயல்களைச் செய்வோர்க்கு தகுந்த தண்டனை அளித்தல் வேண்டும். இது அரசனது கடமை. இப்படி நடப்பது பயிர்களைக் காப்பதற்காக விவசாயிகள் களையைப் பிடுங்கி எறிவதற்குச் சமமாகும். இவ்வாறு நீதியாகவும் மக்களின் நன்மைக்காகவும் சோழன் நாட்டை அரசாண்டான்".

**அதிகாரம் - 56 கொடுங்கோன்மை**

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து. 551

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. 552

நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும். 553

கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. 554

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை 555

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃ.துஇன்றேல்
மன்னாவாம் மன்னர்க்கு ஒளி. 556

துளிஇன்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்
அளிஇன்மை வாழும் உயிர்க்கு 557

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். 558

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். 559

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின். 560

“நீதிநெறி தவறாது ஆண்ட மன்னர்களை இன்றும் மக்கள் போற்றுகின்றனர். அது போலக் கொடுங்கோலாட்சி செய்த துரியோதனன் போன்ற அரசர்களை மக்கள் இன்றும் தூற்றுகின்றனர்”.

“கொடுங்கோல்அரசர்கள் நிறைவேறாத ஆசைகளுக்கு ஆளாகிமுறையற்ற செயல்களால் மக்களைத் துன்புறுத்துவர்.

இவர்கள் கொலைத் தொழிலைச் செய்பவர்களை விடக் கொடியவர்களாவர். இவ்வகையான அரசர்கள், குடிமக்களிடம் பொருள் பறிப்பது, வழிப்பறிக் கள்வர் கையில் வேலேந்தி நின்று மக்களிடம் பொருள் பறிப்பதைப் போன்றது. தனது நாட்டில் நடைபெறும் நன்மை தீமைகளை ஆராயாது தனது ஆசைக்கேற்றபடி அரசாளும் அரசனின் ஆட்சி கொஞ்சம் கொஞ்சமாகப் பறிபோகும். கொடுங்கோல் மன்னன் பொருளையும் குடிமக்களையும் ஒரு சேர இழந்து விடுவான். அரசனது கொடுமைகளைத் தாங்க முடியாது குடிமக்கள் குமுறி அழுத கண்ணீர் அரசனது ஆட்சியை அழிக்கும். ஆயுதமாகச் செயற்படும். அரசனது நீதியான ஆட்சியானது என்றென்றும் புகழைத் தரும் என அறியாதவர்களே மக்களை வருத்துவர். மழையில்லா விட்டால் வரும் பெருந்துன்பத்தைவிடத் துன்பமானது, அருளில்லாத அரசனின் ஆட்சி. இத்தகைய அரசனின் ஆட்சியில் வாழும் பெருஞ் செல்வந்தர்களும் ஏழைகளும் துன்பத்தை அடைவர். முறையற்ற அரசனின் ஆட்சியில் மழை பெய்யாது; பசுக்கள் பால் தரா; அந்தணர்கள் வேதங்களை ஓதமாட்டார்கள். இத்தகைய தன்மைகள் ஒரு நிர்வாகத்திற்கு நீதியில்லாத அதிகாரி இருந்தால் ஏற்படும்” என்றார் தணிகாசலம்.

**அதிகாரம் - 57 வெருவந்த செய்யாமை**

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. 562

கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிது ஆக்கம்

நீங்காமை வேண்டு பவர். 562

வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். 563

இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல்வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். 564

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்னது உடைத்து. 565

கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடுஇன்றி ஆங்கே கெடும். 566

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம் 567

இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு. 568

செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். 569

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுஅல்லது
இல்லை நிலக்குப் பொறை 570

அகல்யா ஆசிரியைக்கும் பெற்றோர் சிலருக்கும் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக மேலதிகாரியான சிவஞானம் பாடசாலைக்கு வந்திருந்தார்.

பெற்றோரை விசாரித்து முடித்தபின் சிவஞானம் அகல்யாவை அழைத்தார். அவருடன் தணிகாசலமும் கதிரேசனும் இருந்தனர். அகல்யா அழுதுகொண்டிருந்தாள்.

"சிவஞானம் சொன்னார் ; "மேலதிகாரிகள் நீதியான அரசர்களைப் போல நடந்து கொள்ளல் வேண்டும். விசாரணைகளின்படி நீர்குற்றம் செய்தவராகக் கருதப்படுகிறீர். ஒருவர் குற்றம் செய்தால் மீண்டும் அக் குற்றத்தை அவரும், பிறரும் செய்யாத படி தகுந்த தண்டனை வழங்குவது மேலதிகாரியின் கடமை. கடுமையாகத் தண்டிக்க வேண்டும். ஆனால் சிலகாரணங்களுக்காக எச்சரிக்கிறேன். மாணவர்களாகிய குடிமக்கள் அஞ்சும்படி நடப்பது ஆசிரியருக்கு ஆகாது. அப்படி நடந்தால் பதவியில் இருந்து நீக்க வேண்டிய நிலை உண்டாகும். தமது ஆசிரியர்கள் கொடியவர் என்று மாணவர்களும், தமது பிள்ளைகளைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் கொடுங்கோலர்கள் என்று பெற்றோரும் நினைத்தால் ஆசிரியர் ஆயுள் குறைந்து அழிந்து விடுவார்".

"எளிதில் காண முடியாதவராகவும், இனிமையற்ற முகத்தை உடையவராகவும் உள்ள ஆசிரியரை எவரும் மதிக்க மாட்டார்கள். கடுமையான சொற்களும் இரக்கமற்ற தன்மையும் உள்ள ஆசிரியர்களின் புகழும் செல்வமும் அழிந்து விடும். கடுமையான தண்டனைகள் ஆசிரியர்களின் உயர்வைத் தேய்கும் அரமாகச் செயற்படும். பெற்றோர்கள், மாணவர்களுடன் பேசும் அர்த்தமற்ற பேச்சுக்கள் ஆசிரியரின் செல்வத்தைச் சுருக்கும். முன்னதாகவே தக்க பாதுகாப்புக்களைச் செய்து கொள்ளாத அரசனும் பணியாளர்களும் போர் வந்த காலத்திலும், பிரச்சினைகள் வந்த காலத்திலும் தம்மைக்

காத்துக் கொள்ள முடியாமல் அல்லற்படுவர். கொடுங்கோலான அரசன் அறிவில்லாதவர்க -ளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதைப் போல அறிவில்லாதவர்களும்அறிவில்லாதவர்களையே துணையாகக் கொள்வர். அது தான் நடந்துள்ளது. இம்முறை தணிகாசலத்திற்காகவும், கதிரேசனுக்காகவும் மன்னிக்கிறேன்" என்றார் சிவஞானம்.

**அதிகாரம் - 58 கண்ணோட்டம்.**

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டுஇவ் உலகு. 571
கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அ∴திலார்
உண்மை நிலக்குப் பொறை 572
பண்என்னாம் பாடற்கு இயைபுஇன்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். 573
உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண் 574
கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அ∴துஇன்றேல்
புண்என்று உணரப் படும். 575
மண்ணொடு இயைந்த மரத்தனையர் கண்ணொடு
இயைந்துகண் ணோடா தவர். 576
கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். 577
கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு

உரிமை உடைத்திவ் வுலகு. 578

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. 579

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 580

“கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற இரக்கம் இருப்பதால் தான் உலகம் அழியாமல் இருக்கிறது. பெண்கள் இரக்கமுள்ளவர்களாகவும், மன்னிக்கத் தெரிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். நீர் ஓர் ஆசிரியர். தாயை விட இரக்கமுள்ளவராக நடந்து கொண்டால் தான் சமூகம் சிறப்படையும். இரக்கமில்லாதவர்கள் பூமிக்குச் சுமையாகவே வாழ்கிறார்கள். பாட்டோடு பொருந்தாத இசையால் பயனில்லை. அது போல இரக்கமில்லாத கண்கள் பயனில்லாத குருட்டுக் கண்கள். அவை காட்சிக்காக முகத்தில் இருக்குமே தவிர அவற்றால் எந்தவிதமான பயனும் இல்லை. கண்களுக்கு ஆபரணம் இரக்கம், இரக்கமில்லாத கண்கள் புண்களாகவே கருதப்படும். அவர்கள் மரங்கள். இரக்கம் உள்ளவர்களுக்கு இந்த உலகமே சொந்தமாக இருக்கும். பெருங்குற்றங்கள் செய்தாலும் அதைப் பொறுத்து இரக்கம் காட்டி உதவி செய்வதே சிறந்த குணம். தம்மோடு பழகியவர் தம் கண்ணெதிரே நஞ்சைக் கொடுத்தாலும், அதை மறுக்காமல் பெற்று உண்பவர்கள் தான் உண்மையில் கண்ணோட்டம் உள்ளவர்கள். மாணவர்கள் குறும்புத்தனமுடையவர்கள்.

அதனால் அவர்கள் தாம் தவறு செய்வதாக உணரமாட்டார்கள். தவறை அவர்கள் உணரும்படி செய்ய வேண்டும். மீண்டும் அவர்கள் அத்தவறுகளைச் செய்யாதபடி அன்புடன் கண்டிப்பதே ஆசிரியரின் தன்மை. அதனால் இனிமேல் கவனமாக நடந்து கொள்ளும். இல்லாவிட்டால் இடம்மாற்ற வேண்டி வரும்" என்றார் சிவஞானம்.

**அதிகாரம் - 59 ஒற்றாடல்**

ஒற்றும் உரைசான்ற நூலும் இவை இரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். 581

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்அறிதல் வேந்தன் தொழில் 582

ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல். 583

வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று. 584

கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று 585

துறந்தார் படிவத்தர் ஆகி இறந்துஆராய்ந்து
என்செயினம் சோர்விலது ஒற்று. 586

மறைந்தவை கேட்கவற்று ஆகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று. 587

ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றும்ஓர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல். 588

ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும். 589

சிறப்புஅறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை. 590

அன்பான மாணவர்களே, க.பொ.த. உயர்தர வகுப்பில் தமிழ்ப் பாடத்தைக் கற்பிக்கின்ற மாணவர்கள் சங்க காலத்தில் எழுந்த தமிழ் நூல்களைக் கற்றல் வேண்டும். அவை பாடப்பரப்பில் இல்லா விட்டாலும் அவற்றைப் படிப்பதன் மூலம் தமிழ் நாட்டின் கலை கலாச்சாரத்தை அறிந்து கொள்ள முடியும். இன்று நான் உங்களுக்கு சுந்தர பாண்டிய மன்னனின் ஒற்றர்களைப் பற்றிக் கற்பிக்கப் போகிறேன். பண்டைய மன்னர் ஒற்றர்களையும், புகழ்பெற்ற நீதி நூல்களையும் தம் இரு கண்களாகவே கருதினர்".

"ஒற்றர்கள் மூலம் அரசர்கள் நாடெங்கும் நடக்கின்ற எல்லா நிகழ்வுகளையும் அறிந்து கொள்வார்கள். ஒற்றர்கள் கூறும் செய்திகளை அமைதியாக ஆராய்ந்து மன்னர் முடிவெடுப்பர். அதனால் தான் பாண்டியன் தன்னை எதிர்த்த சகல மன்னர்களையும் வெற்றி கொள்ள முடிந்தது. நாட்டிலுள்ள சுற்றத்தார், பகைவர், மக்கள் ஆகிய அனைவரையும் அவர்களுக்குத் தெரியாமல் ஆராய்பவன் தான் ஒற்றன். யாரும் ஐயப்பட முடியாத உருவத்தோடும் எச்சந்தர்ப்பத்திலும் தன்னை வெளிப்படுத்தாமலும் திடமான மனதுடன் இருப்பவன் தான் ஒற்றன். செல்ல முடியாத இடங்களுக்குத் துறவி வேடத்தில்

மறைந்து சென்று ஆராய்ந்து எத்தகைய இடர் வந்த போதும் மனத் தளர்வில்லாது செயலாற்றுபவன் தான் ஒற்றன். மறைந்த தகவல்களைக் கண்டு பிடித்து, அறிந்த செய்திகளை ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொள்வதில் வல்லவன் ஒற்றன். ஓர் ஒற்றன் சொன்ன செய்தகிளை உடன் நம்பாது, இன்னோர் ஒற்றனைக் கொண்டு ஆராய்வு செய்து உண்மையை அறிந்து கொள்வது அறிவுள்ள அரசனின் கடமை. ஒருவர் சொல்வதை மற்றவர் அறியாதவாறு மிகத் தந்திரமாக ஒற்றர்களைக் கையாள்வது அரசனின் திறமை. அரசன் ஒற்றர்களுக்குச் செய்யும் சிறப்பைப் பிறருக்குச் சொல்லக் கூடாது. இத்தகைய வல்லமை பொருந்திய பாண்டிய மன்னனுக்கு எதிராகக் கதைக்கவே அரசர்கள் பயப்படுவார்கள். அரசனது திறமை, வீரம், புகழ் யாவும் சிறந்த ஒற்றர்களிலே தங்கியுள்ளது" என்றார் பண்டிதர் துரைராசா.

**அதிகாரம் - 60 ஊக்கம் உடைமை**

உடையர் எனப்படுவது ஊக்கம் அ.்.தில்லார்
உடையது உடையரோ மற்று. 591

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 592

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார். 593

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை. 594

வெள்ளத்து அணைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு. 595

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. 596

சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பின்
பட்டுப்பாடுஊன்றும் களிறு. 597

உள்ளம் இலாதார் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு 598

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். 599

உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அ.்.துஇல்லார்
மரமக்கள் ஆதலே வேறு. 600

“அன்பான மாணவர்களே, ஒருவர் உடையவர் என்று சொன்னால் அது பொருளைக் குறிக்காது. ஊக்கத்தையே குறிக்கும். ஊக்கமுள்ள மனிதன் நினைத்தவற்றையெல்லாம் அடைவான். அது போல ஊக்கமுள்ள அரசன் உலகைத் தன் குடையின் கீழ்க் கொண்டு வருவான். ஊக்கம் தான் நிறைந்த செல்வம். அது நிலையானது; அழிவில்லாதது. ஊக்கமுள்ள மனிதன் பொருளை இழந்தால் கவலைப்படமாட்டான். உழைத்துப் பெறுவான். ஊக்கமுள்ள அரசன் நாட்டை இழந்தால் போராடிப் பெறுவான். ஊக்கமுள்ளவர்களைப் புகழும் செல்வமும் தேடிச்சென்றடைந்து தம்மைப் பெருமைப்படுத்தும்.

நீர்ப்பூவின் தாள் நீர் மட்டத்தில் இருக்கும். அது போல ஊக்கமுள்ளவனின் உயர்வு அவனது ஊக்கத்தின் அளவுக்கு உயர்ந்து நிற்கும். ஊக்கமுள்ளவன். தான் எண்ணுபவற்றை உயர்வாக எண்ணினால் அந்தளவிற்கு உடனே உயராவிட்டாலும் காலகதியில் அதற்கு மேலாகவும் உயர்வடையலாம். அதனால் உயர்வாக எண்ணுவதைவிடக் கூடாது. போர்க் களத்தில் போராடும் யானை தன்னுடலெங்கும் அம்புகளாற் புண்பட்டாலும் தனது பெருமையைநிலைநாட்டும். அது போல ஊக்கமுள்ளவர் -களுக்கு அழிவு வந்தாலும் அவர்கள் மனம் தளராது உறுதியுடன் உழைப்பார்கள். அத்துடன் தாம் தாம் சிறந்தவர்,சிறந்த கொடையாளியென்று ஊக்கமில்லாதவர்கள் மக்கள் மத்தியில் சொல்ல முடியாது. யானை பலமுள்ளது. கூரிய கொம்புகளை உடையது. ஆனால் ஊக்கமுடைய புலிக்கு அது அஞ்சும். ஒருவனது வலிமை அவனது ஊக்கமிகுதியே. ஊக்கமில்லாதவர்கள் மனிதத் தோற்றத்தை உடைய மரங்கள். அதனால் தான் ஊக்கமுள்ள சோழ மன்னன் நாடு கடந்து சென்று பல நாடுகளைக் கைப்பற்றினான். நீங்களும் ஊக்கமாகக் கற்றால் நீங்கள் விரும்பிய பதவியை அடையலாம்” என்றார் பண்டிதர் துரைராசா.

**அதிகாரம் - 61 மடி இன்மை**

குடிஎன்னும் குன்றாவிளக்கம் மடி என்னும்
மாசூர மாய்ந்து கெடும். 601

மடியை மடியா ஒழுகல் குடியைக்

குடியாக வேண்டு பவர். 602

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து. 603

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றுஇ லவர்க்கு 604

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 605

படியுடையார் பற்றஅமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது. 606

இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்று இலவர். 607

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும். 608

குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். 609

மடியில்லா மன்னவன் எய்தும் அடியத்தளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு. 610

கதிரேசனும் திருநாவுக்கரசுவும், திருநாவுக்கரசின் மூத்த சகோதரனான பொன்னம்பலத்தின் வீட்டுக்கு வந்தனர். பொன்னம்பலத்தின் மூத்த மகன் ரகுராமன் ஆசிரியராகப் பணிபுரிகிறான். அவன் அந்த வாரம் பாடசாலைக்குச் செல்லவில்லை.

காலை பத்து மணிக்கு நித்திரை விட்டெழுந்த ரகுராமன் அப்போது தான் பல்துலக்கிக் கொண்டிருந்தான். கதிரேசன் தான் அவனுக்கு அப்பாடசாலையைப் பெற்றுக் கொடுத்தவர். அவன் படிக்கும் போதே சோம்பேறி. ஆசிரியர் கொடுக்கும் வீட்டு வேலைகளையும், பாடசாலையின் புறவேலைகளையும் சோம்பல் காரணமாகச் செய்வதில்லை. கதிரேசன் இரந்து வேண்டியதால் தணிகாசலம் ஒத்துக் கொண்டார். ஆனால் ரகுராமன் சோம்பேறி. பரீட்சை தொடங்கச் சில நாட்கள் இருக்கும் போது விடுப்பில் நின்றான்.

“மகனே, ஒருவனுடைய குடும்பம் என்றும் மங்காத விளக்கு, சோம்பலாகிய தூசு படியப்படிய ஒளி மங்கிவிடும். தனது குடும்பத்தைச் சிறந்த குடும்பமாக்க விரும்புகின்றவன். சோம்பலை ஒழித்தல் வேண்டும். அழிக்கும் தன்மை கொண்ட சோம்பலை உடையவனின் குடும்பம் அவனுக்கு முன்னாலேயே அழிந்து விடும். அத்துடன் பெருமையையும் இழந்து குற்றங்களுக்காளாகும். காலதாமதம், மறதி, சோம்பல், அளவுக்கதிகமான நித்திரை ஆகியன கெட்டுப் போக வேண்டும் என்று நினைப்பவர்கள் விரும்பி ஏறும் மரக்கலன்களாகும். நாட்டை ஆளுகின்ற அரசனின் நட்புக் கிடைத்தாலும் சோம்பேறி முன்னேற மாட்டான். சோம்பலுடையவர்களைப் பிறர் இழிவாகக் கூறுவர்; இகழ்ந்து பேசுபவர். கல்வி, கேள்வி, ஞானம் உள்ள உயர்குடியிற் பிறந்தோரும் சோம்பியிருந்தால் பிறருக்கு அடிமையாக வேண்டிய நிலை உண்டாகும். பல்வேறு குற்றங்களைக் கொடுப்பதும், ஆண்மையை வலி இழக்கச்

செய்வதும் சோம்பல். சோம்பலில்லாதவனின் குடிக்குக் குற்றங்கள் வராது. ஆள்கின்ற அரசனானவன் சோம்பல் இல்லாதவனாக இருந்தால் திருமாலால் அளக்கப் பெற்ற உலகம் முழுவதையும் அவன் அடைவான்”

“உனது சோம்பலால் பாடசாலை நிர்வாகமும், கல்வித்திணைக்களமும், பெற்றோரும் வெறுப்படைந்துள்ளனர். அவர்கள் நடவடிக்கை எடுக்கு முன் திருந்து” என்றார் கதிரேசன்.

**அதிகாரம் - 62 ஆள்வினை உடைமை**

அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். 611

வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு. 612

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வோளாண்மை என்னும் செருக்கு. 613

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். 614

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். 615

முயற்சி திருவினை ஆக்கும் மயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 616

மடியுளான் மாமுகடி என்ப படியிலான்
தாளுளாள் தாமரையி னாள். 617

பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து
ஆள்வினை இன்மை பழி. 618

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 619

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர். 620

"மகனே, உன்னைப் போலவே நான் மாதவனையும் நேசிக்கிறேன். அவன் எவ்வளவு முயற்சியுடையவன் என்பதைப் பார். இச்செயல் செய்வதற்கு அரியதென்று ஒரு போதும் எண்ணக்கூடாது. அந்த எண்ணம் சோர்வைத் தரும். செய்ய ஆரம்பித்தால் முயற்சி வெற்றியைத் தரும். தொடங்கிய செயலை இடையில் விட்டு விட்டால் உலகம் பரிகசிக்கும். அதனால் முயற்சியில் தளர்ச்சியடையக்கூடாது. முயற்சியுள்ளவனிடத்தில் பிறருக்கு உதவி செய்தல் வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் இருக்கும். அதற்குக் காரணம் அவனது தளராத முயற்சிதான். முயற்சியில்லா தவன் பிறருக்கு உதவி செய்ய நினைப்பது, ஒரு பேடி தனது கையில் வாளை எடுத்துத் தன் ஆண்மையைக் காட்டுவதைப் போன்றதாகும். தனது இன்பத்தைப் பெரிதாக நினைக்காதவன், தான் எடுத்துக் கொண்ட செயலை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பான். அத்துடன் தனது சுற்றத்தாரின் துன்பங்களைப் போக்கி அவர்களைத் தாங்கும் தூணாகவும் இருப்பான். முயற்சி நினைத்த எல்லாவற்றையும் கொடுக்கும். சோம்பல் உள்ள

அனைத்தையும் அழிக்கும். சோம்பேறியின் மனதில் மூதேவி வாழ்கிறாள். முயற்சி உள்ளவனின் மனதில் திருமகள் வாழ்கிறாள். ஊழ்வினை காரணமாகச் செல்வமில்லாமல் இருப்பது பழியல்ல. அறியவேண்டியவற்றையெல்லாம் அறிந்த பின் செயலின்றியிருப்பதே பழி. தெய்வம் ஊழ்வினை காரணமாக உதவி செய்யாவிட்டாலும் முயற்சியின் அளவுக்கேற்ப கூலி கிடைக்கும். முயற்சியுடையவர்கள் ஊழையும் வென்று விடுவார்கள். கல்வியறிவில்லாதவன் சோம்பியிருந்தால் அது அறியாமையாகும். கல்வியறிவுள்ளவன் சோம்பியிருந்தால் அது பழி, குற்றம், மானக்கேடு" என்றார் கதிரேசன்.

**அதிகாரம் - 63 இடுக்கண் அழியாமை**

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அ∴தொப்பது இல். 621

வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 622

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர். 623

மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. 624

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும். 625

அற்றேம்என்று அல்லற் படுபவோ பெற்றேம்என்று
ஓம்புதல் தேற்றா தவர். 626

இலக்கம் உடம்புஇடும்பைக்கு என்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல். 627

இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்
துன்பம் உறுதல் இலன். 628

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். 629

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. 630

"எனக்குக் கற்பிக்கப்பிடிக்கவில்லை. அது பெருந் துன்பமாக இருக்கிறது." என்றாரன் ரகுராமன்.

"துன்பம் வந்தால் கலங்காது மகிழ்ந்து சிரித்தல் வேண்டும். அதுதான் துன்பத்தைப் போக்கும் வழி; மருந்து. வெள்ளம் போலத் துன்பம் வந்தாலும் அறிவுடையவன் அதைப் போக்க உறுதி கொள்வானே தவிரத் துன்பப் பட மாட்டான். உறுதி துன்பத்தைப் போக்கும். மனத்தளர்வு துன்பத்தைப் பெருக்கும். துன்பம் வரும் போது உறுதியுடன் அதை எதிர் கொள்வோர் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி வென்று விடுவார்கள். தடைப்படுமிடங்களிலும் தளராமல் வண்டியை இழுத்துச் செல்லும் எருதைப் போல, முயற்சியுள்ளவனுக்கு வரும் துன்பம் துன்பப்பட்டு விலகிப் போய் விடும். அடுக்கடுக்காகத் துன்பங்கள் வந்தாலும் அதைக் கண்டு

கலங்காத வலிமை உடையவனைக் கண்டு துன்பமே அஞ்சும். செல்வம் வந்த போது அதன் வலிமையை உணர்ந்து அதைக் காப்பாற்றாதவர்கள், அச்செல்வம் போன பின் வருந்துவதால் பயன்இல்லை. பெரியவர்கள், உடம்பு துன்பமயமானது என்பதை அறிந்து தமது உடம்புக்கு வரும் துன்பங்களை ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார்கள். இன்பம் துன்பமாக மாறும் என்று தெரிந்து கொண்ட பெரியவர்கள் துன்பம் வந்த போதும் கலங்க மாட்டார்கள். அத்துடன் இன்பம் வந்த போது அதற்காக மகிழாதவன், துன்பம் வந்த போது கலங்க மாட்டான். துன்பத்தை இன்பமாக ஏற்றுக் கொள்ளபவனுக்குப் பகைவர்கள் கூடப் போற்றும் உயர்வு உண்டாகும்." அதனால் சோம்பலை ஒழித்து உற்சாகத்துடன் முயற்சியைச் செய்" என்றார் கதிரேசன்.

**அதிகாரம் - 64** **அமைச்சு**

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு. 631

வன்கண் குடிகாத்தல் கற்று அறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு. 632

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு 633

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு 634

அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்

திறனறிந்தான் தேர்ச்சித் துணை. 635

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை. 636

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல் 637

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன். 638

பழுது எண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி யுறும். 639

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅதவர். 640

"ஐயா நான் படித்த நூல்களில் பெரியவர்களின் குணாதிசயங்களைப் பற்றிப் படித்திருக்கிறேனே தவிர நம்பவில்லை. ஏனென்றால் அப்படியான ஒருவரை நான் சந்தித்ததில்லை. இப்போது நம்புகிறேன். ஏனென்றால் நான் படித்த குணங்கள் அத்தனையையும் உங்களிடம் காண்கிறேன். நீங்கள் ஓர் அமைச்சர். சிறந்த அமைச்சன் என்பவன், செயலுக்குரிய கருவி, காலம், செய்யும் முறை ஆகியவற்றை நன்கு அறிந்தவன். அத்துடன் அஞ்சாமை, உயர்குடிப்பிறப்பு, பாதுகாக்கும் திறமை, கற்றுணர்ந்த அறிவு, சோர்வற்ற முயற்சி ஆகிய ஐந்து தன்மைகளையும் முழுமையாகப் பெற்றவன். பகைவரின் நண்பர்களைப் பிரித்தலும், தமக்கு வேண்டியவர்களின் நட்பைக் காத்தலும், தவறுதலான கருத்து முரண்பாட்டால் பிரிந்தவர்களைச் சேர்த்து வைக்கும் திறன்

உள்ளவனே அமைச்சன். அத்துடன் செய்யத் தகுந்த சிறந்த செயல்கள் இவையிவையென அறிந்து, அதை முடித்தற்குரிய வழி வகைகளை ஆராய்ந்து அறிந்து துணிவோடு செயலை மேற்கொண்டு வெற்றியடைய வைப்பவனே சிறந்த அமைச்சன். அறத்தை நன்கறிந்தவனாகவும், அறிவு நிறைந்த சொற்களைக் கூறுபவனாகவும், எக்காலத்திலும் செயல்திறன் நிறைந்தவனாகவும் இருப்பவனே அரசனின் முதல்தரமான துணையாவான். இயல்பான அறிவுக் கூர்மையோடு பல்வேறு வகையான அறிவு தரும் நூல்களையும் கற்றுத் தேர்ந்தவனுக்குத் தீர்க்க முடியாத பிரச்சினைகள் எதுவும் இருக்க மாட்டாது. இப்படியானவர்கள் உலக நடைமுறைகளை அறிந்து செயற்படுவார்கள். அறிவுறுத்துபவர்களின் அறிவுரைகளையும் ஏற்காமலும், தானும் அறிந்து கொள்ள முடியாதவனாகவும் இருப்பவனுக்கு உறுதியானவற்றை உணரும்படி உணர்த்துபவன் தான் சிறந்த அமைச்சன். பக்கத்தில் இருந்து கொண்டு ஆட்சிக்குத் தவறான வழிகளைக் காட்டும் அமைச்சனை விட எழுபது கோடிப் பகைவர்கள் இருந்தாலும் அது நன்மை தரும். செயல்களைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் திறமை இல்லாத அமைச்சன், முதலில் சரியாக எண்ணித் திட்டமிட்டிருந்தாலும் செய்யும் போது குறைபாடுகள் உடையதாகவே செய்வான். என்று நான் படித்திருக்கிறேன். நீங்கள் ஒரு சிறந்த அமைச்சர். அதனால் தான் எமது ஊரவர்கள் அனைவரும் உங்களிடம் ஆலோசனைகள் கேட்கிறார்கள். நீங்கள் முற்பிறப்பில்

பெரியதொரு மன்னனின் அமைச்சராக இருந்திருக்கிறீர்கள்" என்றான் ரகுராமன்.

**அதிகாரம் - 65 சொல்வன்மை**

நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று 641

ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு 642

கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். 643

திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனின்ஊங்கு இல். 644

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து 645

வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். 646

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது 647

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். 648

பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற
சிலசொல்லல் தேற்றா தவர் 649

இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார். 650

சிவன்கோயில் மாலை நேரப்பூசை முடிந்த பின்பு நமசிவாயம் சுவாமிகள் உரையாற்றிக் கொண்டிருந்தார். அரசமர இலைகள் சலசலக்கும் ஓசை மிகவும் பெரிதாகக் கேட்டுக் கொண்டிருந்தது. சிறுவர்களும், பெரியவர்களும் மிகவும் அமைதியாக இருந்து அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர் பேசி முடிந்ததும் மக்கள் எழும்ப மனமின்றி அமர்ந்திருந்தனர்; இன்னும் சிறிது நேரம் பேசியிருக்கலாம்" என்றார் திருநாவுக்கரசு.

"நாவன்மை என்று கூறப்படும் பேச்சுத் திறமை என்ற செல்வம் கடவுள் தரும் எல்லாச் செல்வங்களையும் விட மிக மிக உயர்ந்தது. நன்மையும், தீமையும் சொல்கின்ற சொற்களாலேயே வருவது. அதனால் பேசுபவன் தான் பேசும் சொற்களில் தவறு ஏற்படாமல் காத்துக் கொள்ளல் வேண்டும். பேசும் போது கேட்பவர்களை மெய்மறக்கச் செய்ய வேண்டும். கேட்காதவர்களைக் கேட்கவில்லையே என்று மனம் வருந்தத்தக்கதாகப் பேசுதல் வேண்டும். சொற்களின் வலிமையை அறிந்து, கேட்டபவரின் தகுதியையும் அறிந்து பேசுதல் வேண்டும். அதுதான் சிறந்த அறமும் சிறந்த பொருளுமாகும். தான் சொல்கின்ற சொல்லை வெல்லக் கூடிய வேறு சொற்கள் எவையும் இல்லை என்பதை அறிந்த பிறகே சொல்ல வேண்டியவற்றைச் சொல்லுதல் வேண்டும்.

கேட்கின்றவர்களுக்கு விருப்பம் உண்டாக வேண்டும். அவர்கள் இப்பேச்சைப் பற்றிக் கூறுபவற்றை நன்கு அவதானித்துப் பதில் கூறி அவர்களைத் திருப்பதிப்படுத்துதல் வேண்டும். அதுதான் சிறந்த பேச்சு.தனது கருத்தைத் தெளிவாகச் சொல்லுதல் வேண்டும். மறதி இல்லாமலும், சபைக்கு அஞ்சாமலும் பேசுபவனின் பேச்சை இலகுவில் வெல்ல முடியாது. கருத்துக்களை ஒழுங்குபடுத்தி, சபைக்கு விளங்கும் இனிய மொழியால் பேசுபவனின் பேச்சை உலகே கேட்டுநடக்கும். குற்றமில்லாத சொற்களை இனிமையில்லாமல் பேசுவர்கள் தான் நீண்ட நேரம் பேசுவார்கள். தாம் கற்றவற்றைத் தெளிவாகச் சொல்லும் ஆற்றல் இல்லாதவர்கள், கொத்தாத மலர்ந்தும் மணம் இல்லாத மலர்களைப் போன்றவர்களாவர். சுவாமியார் சிறந்த பேச்சாளர். அவர் பேசுவதைக் கேட்கக் கொடுத்து வைத்திருத்தல் வேண்டும்" என்றார் கதிரேசன்.

**அதிகாரம் - 66** **வினைத்தூய்மை**

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும். 651

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. 652

ஓஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர். 653

இடுக்கண் படினும் இழிவந்த செய்யார்

நடுக்குஅற்ற காட்சி யவர். 654

எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றஅன்ன செய்யாமை நன்று 655

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 656

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. 657

கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 658

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. 659

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று 660

“அதிபர் தணிகாசலத்திற்குப் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் கிடைத்திருந்தது. திருநாவுக்கரசுவும் கதிரேசனும் அவரைச் சந்தித்து வாழ்த்துக் கூறச் சென்றனர். பாடசாலையில் பெருந்தொகையான பெற்றோர் கூடியிருந்தனர். அப்போது கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பேசிக்கொண்டிருந்த ஆசிரியர் பேசி முடித்ததும் கதிரேசன் பேசினார்.

“பெரியவர்களே, நல்லவை எல்லாவற்றிற்கும் நாம் அதிபர் தணிகாசலத்தை உதாரணமாகக் கொள்ளலாம். ஒருவருக்கு நல்லவர்களின் துணை செல்வத்தைக் கொடுக்கும்.

அவர் செய்யும் நல்ல செயல்கள் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும். புகழையும் அறத்தையும் தராத எந்தச் செயலையும் ஒருவர் செய்யக்கூடாது. அத்துடன் புகழ்கெடும்படியாக நடந்து கொள்ளவும் கூடாது. தணிகாசலத்தைப் போன்ற பெரியவர்கள் துன்பங்கள் வந்த போதும் செய்யக்கூடாத செயல்களைச் செய்ய மாட்டார்கள். அறியாமல் தவறுசெய்தாலும் பெரியவர்கள் அதற்காக மனம் வருந்துவர். அதன்பின் அப்படியான செயல்களைச் செய்ய மாட்டார்கள். பெற்றதாய் பசியால் துடிதுடித்தாலும் அறிவுடையோர் அதைத் தீர்க்கத் தவறான வழியை நாட மாட்டார்கள். பழிக்குக் காரணமான இழிந்த செயல்களைச் செய்து பணக்காரராவதை விட வறுமையால் வாடுவதையே பெரியவர்கள் விரும்புவார்கள். தீய செயல்கள் செய்யும் போது இன்பத்தைக் கொடுத்தாலும் முடிவில் அது பெருந் துன்பத்தையே கொடுக்கும். பிறரை வருத்தி அடைந்த பொருட்கள் யாவும் பெற்றவன் வருந்தும்படி அவனை விட்டுச் சென்று விடும். நல்ல வழியில் சேர்த்த பொருட்களைப் பெரும் நன்மையைக் கொடுத்து விட்டே செல்லும். தீய வழியில் பொருளைச் சேர்த்துப் பாதுகாப்பது பச்சை மண்கலத்தில் நீரை ஊற்றிப் பாதுகாப்பதைப் போன்றது என்று தணிகாசலத்திற்குத் தெரியும். அதனால் தான் அவர் பெரும் உயர்வு பெற்றார்; பெருஞ்செல்வம் பெற்றார்” என்றார் கதிரேசன்.

## அதிகாரம் - 67 வினைத்திட்பம்

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற 661

ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டன்
ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள். 662

கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமம் தரும். 663

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். 664

வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறுஎய்தி உள்ளப் படும். 665

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 666

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி யன்னார் உடைத்து. 667

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல். 668

துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை. 669

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு. 670

அடுத்துத் திருநாவுக்கரசு பேசினார்; ஒரு செயலின் வலிமை என்பது செய்பவனின் மன வலிமையேயாகும். ஏனையவையெல்லாம் மனவலிமைக்கு அடுத்தவைதான். துன்பம் வராமல் காத்துக் கொள்ளல், துன்பம் வந்தால் மனவுறுதியோடு

இருத்தல் என்பன வலிமை உடையவர்களின் பண்புகளாகும். செய்யும், செயலை வெற்றிகரமாக முடித்த பின்பே வலிமை உடையவர்கள் அடுத்தவர்களுக்குச் சொல்வார்கள். அதற்கு முன் சொன்னால் செய்யும் செயலில் பல இடர்கள் உண்டாகும் என்பது வலிமை உள்ளவர்களுக்குத் தெரியும். இத்தொழிலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்வது மிகவும் எளிது. சொல்லியபடி செய்து முடித்தல் என்பது அரிது. செய்து முடிக்கும் திறமையால் புகழ் பெற்றவர்களை உலகோர் பாராட்டுவர். உறுதியுள்ளவர்கள் தாம் எண்ணியபடி செயல்களைச் செய்து முடித்து வெற்றிகாண்பர். பெரிய தேரை இயக்கச் சிறிய அச்சாணி பயன்படுவது போல உருவத்தால் சிறியவர்களும் மனவுறுதியால் செயற்கரிய செயல்களையும் செய்து முடிப்பர். ஏற்றுக் கொண்ட செயலை மனம் கலங்காமல், காலந்தாழ்த்தாமல் செய்து முடிப்பவர்கள் தான் செயல் வீரர்கள். முடிவில் பெரும் இன்பத்தைக் கொடுக்கும் செயல்கள் செய்யும் போது பல்வேறு வகையான துன்பங்களைக் கொடுக்கும் என்று வலிமை உள்ளவர்களுக்குத் தெரியும். வேறு பல நன்மைகள் உடையவராக இருந்தாலும் செய்யும் தொழிலைச் சரியாகச் செயயாதவரை உலகத்தவர்கள் மதிக்க மாட்டார்கள். இவை யாவும் தணிகாசலத்திற்குத் தெரிந்தமையால் தான் அவர் எல்லாச் செயல்களையும் வெற்றி பெறச் செய்தார்” என்றார் திருநாவுக்கரசு.

**அதிகாரம் - 68** **வினை செயல்வகை**

சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. 671

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்ககற்க
தூங்காது செய்யும் வினை. 672

ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல் 673

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். 674

பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். 675

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். 676

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல் 677

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று. 678

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல் 679

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. 680

இறுதியாகத் தணிகாசலம் பேசினார்; "ஒழுக்கமான வாழ்வு அனைத்தையும் தேடித் தரும். ஒரு செயலைச் செய்யு முன் அதைப் பற்றி நன்கு ஆராய்ந்து முடிவெடுத்தல் வேண்டும். துணிவுடன் முடிவெடுத்த பின்பு தாமதியாது அச் செயலலைச் செய்து முடித்தல் வேண்டும். முடிவெடுத்த பின் காலந்தாழ்த்துவது தீமையைத் தரும். காலந்தாழ்த்திச் செய்ய வேண்டிய செயல்களைக் காலந்தாழ்த்திச் செய்தல் வேண்டும். உடன் செய்ய வேண்டிய செயல்களைக் காலந்தாழ்த்தாது செய்தல் வேண்டும். முடியும் இடங்களிலெல்லாம் நல்ல செயல்களைச் செய்தல் வேண்டும். முடியாத போதும் தக்க வழிகளை ஆராய்ந்து செய்தல் வேண்டும். தொடக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட செயல், தீர்க்காத பகை ஆகிய இரண்டும் அணைக்கப்படாத சிறு நெருப்புப் போல இருந்து பின் பெரிதாகித் துன்பத்தைத் தரும். செயலைச் செய்து முடிக்கத் தேவையான பொருள், தேவையான கருவி. தக்க காலம், செய்ய வேண்டிய முறை, ஏற்ற இடம் என்ற ஐந்தையும் சரியாகத் தெரிவுசெய்தால் தோல்வி ஒரு போது ஏற்படாது. செயலை முடிக்கும் வழி வகைகளையும், இடையில் வரக்கூடிய இடையூறுகளையும் செயலைச் செய்து பெற்றுக் கொண்ட பின் வரும் நன்மைகளையும் அறிந்த பின்பு செயற்பட்டால் தோல்வி உண்டாகாது. அத்துடன் தான் செய்யும் தொழிலைப் பற்றி அறிந்தவர்களின் கருத்துக்களையும் தெரிந்து கொள்ளல் வேண்டும். தான் ஒரு செயலைச் செய்யும் போது அது தொடர்பான செயல்களையும் செய்தல் வேண்டும்.

இத்தன்மையானது ஒரு யானையை வைத்து இன்னொரு யானையைப் பிடிப்பதைப் போன்றது. நண்பர்களுக்குத் தொடர்ந்து நன்மை செய்து கொண்டிருப்பதை விட, தனது பகைவர்களுக்கு உதவிகள் செய்து அவர்களை நண்பராக்கிக் கொள்ளல் சிறப்பானது. வலிமை குறைந்த மன்னன் தனது நாட்டின் நன்மைக்காகப் பகை கொண்ட வலிய அரசனைப் பணிந்து போவது போல, செயலைச் செய்பவன் வலிய பகைவரைப் பணிந்து நடத்தல் வேண்டும். அப்போது தான் செயலில் வெற்றி பெறலாம். இவற்றைச் செய்ததால் தான் நான் எல்லாச் செயல்களிலும் வெற்றி பெற்று உயர்ந்தேன்" என்றார் தணிகாசலம்.

**அதிகாரம் - 69 தூது**

அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்
பண்புஉடைமை தூதுஉரைப்பான் பண்பு. 681

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று 682

நூலாருள் நூல்வல்லான் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. 683

அறிவுஉரு ஆராய்நத கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. 684

தொகச்சொல்லி தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது 685

கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது. 686

கடனறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை 687

தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றன்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. 688
விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன் 689
இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது. 690

அகல்யா ஆசிரியையின் போக்குச் சரியில்லாததால் அவளை இடம் மாற்றும்படி கோரியிருந்தார் தணிகாசலம். அதை அறிந்த அகல்யா கதிரேசனிடம் வந்து சொன்னாள்; “நான் செய்தவை யாவும் தவறு என்று உணர்ந்து கொண்டேன். இனிமேல் அப்படி நடக்க மாட்டேன். என்னை இடம் மாற்ற வேண்டாம் என்று தணிகாசலத்திடம் கூறுங்கள். அவர் பதவி உயர்வு பெற்றுச் செல்லுமுன் சொல்லி எனக்கு உதவி செய்யுங்கள். தூது என்ற அதிகாரத்தில் வள்ளுவன் தூதுவனுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் பற்றிக் கூறியுள்ளான். அத்தனையும் உங்களுக்கு இருக்கு. தூதுவன் அன்பு, நற்குடிப்பிறப்பு, அரசர் விரும்பம் பண்பு ஆகியவற்றொடு அன்பு, அறிவு, ஆராய்ந்து சொல்கின்ற சொல்வன்மை, ஆகியன இருக்கப் பெறல் வேண்டும். ஒருவரிடம் தூது சென்று தன் நாட்டை ஆளும் அரசனது வெற்றிக்கு ஏற்ற காரணங்களை

எடுத்துச் சொல்பவன், மிகக் கற்றவர்களை விட அதிகம் கற்றவன் என்றும், இயல்பான அறிவு, காண்பவரைக் கவரும் தோற்றம், ஆராய்ந்து தேர்ந்த கல்வி ஆகிய மூன்றும் உடையவனாக இருக்க வேண்டும் என்றும், பலவற்றைத் தொகுத்துச் சொல்லியும், அவற்றுள்ப் பயனற்றவற்றை நீக்கியும், மகிழ்ச்சி ஏற்படுமாறு சொல்லியும், தனது நாட்டிற்கு நன்மை சேர்ப்பனவாக இருக்க வேண்டும் என்றும், கற்க வேண்டியவற்றைக் கற்று, பகைவரின் கொடிய பார்வைக்கு அஞ்சாமல், சொல்பவற்றைக் கேட்பவர்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதியும்படி சொல்லி, காலத்தை அறிந்து தக்கபடி நடப்பவன் என்றும், தனது கடமையை இன்னதென்று தெளிவாக அறிந்து, அதைச் செயலாக்கு வதற்குரிய காலத்தையும் அறிந்து செயற்படுபவ னென்றும், தூய்மையான துணை, மிகுந்த துணிவு ஆகிய மூன்றையும் உடையவனென்றும், எந்தச் சூழ்நிலையிலும் தவறான சொற்களை வாய்தவறிக் கூடச் சொல்லாத உறுதியும், தனது வேந்தன் சொல்லியவற்றின் அர்தத்தை மாற்றாது உணர்த்துபவன் என்றும், தனக்கு அழிவே நேர்ந்தாலும், அஞ்சாமல் சொல்ல வேண்டியவற்றை உறுதியுடன் சொல்லித் தனது அரசனின் நன்மைக்காக உழைப்பவன் என்றும் வள்ளுவர் கூறியுள்ளார். இவையெல்லாம் உங்களுக்குப் பொருந்தியுள்ளமையால் தான் நீங்கள் செய்யும் செயல்கள் வெற்றியளிக்கின்றன. அதனால் தயவு செய்து எனக்காகத் தூது செல்லுங்கள்" என்று அழுதாள் அகல்யா.

**அதிகாரம் - 70 மன்னரைச் சேர்ந்து ஒழுகல்**

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 691

மன்னர் விழைய விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும். 692

போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது. 693

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து. 694

எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை. 695

குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல் 696

வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல். 697

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியொடு ஒழுகப் படும். 698

கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். 699

பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும். 700

“மகளே, அரசனைப் போல அதிகாரங்களை உடையவர்களைச் சார்ந்து வாழ்வோர், அதிகமாக நீங்கிச் செல்லாமலும், மிக நெருங்காமலும், நெருப்பின் முன் குளிர் காய்பவர்களைப் போலவும் இருந்து வாழ வேண்டும். அதிகாரிகள் விரும்பியவற்றை அவர்களைச் சார்ந்து வாழ்வோர் விரும்பாவிட்டால், அதனால் நிலையான பல நன்மைகளைப் பெறலாம். அத்துடன் தவறுகள் நேராமல் காத்துக் கொள்ளல் வேண்டும். சந்தேகத்திற்கும் ஆளாகக் கூடாது. அரசனின் முன் பிறருடன் இரகசியமாகப் பேசுதல், தேவையின்றிச் சிரித்தல் என்பன கூடாது. அச்செயல்கள் வெறுப்பை உண்டாக்கும். அதிகாரிகள் இரகசியமாக யாருடனாவது கதைத்தால் அதை அறிய முயலக்கூடாது. அவரே வலிய வந்து சொன்னாலன்றி அதைப் பற்றி ஆராய்வது துன்பங்களைக் கொடுக்கும். அத்துடன் சந்தர்ப்பமறிந்து வெறுப்பில்லாத செய்திகளையும், விருப்பமான செய்திகளையும் மகிழ்வுடன் கூறுதல் வேண்டும். விருப்பமானவற்றை மட்டும் கூறுதல் நல்லது. அவர் விரும்பாதவற்றைத் தவிர்த்தல் வேண்டும். அரசனோ, அதிகாரியோ தனக்கு இளையவர் என்றோ, உறவினர் என்றோ நினைக்காது அவர் அதிகாரமுள்ளவர் என்று நினைத்து மதித்து நடத்தல் வேண்டும். அரசருக்கு மிகவும் வேண்டியவராக இருத்தலும் கூடத் தகாத செயல்களையும் அவருக்கு விரும்பமில்லாத செயல்களையும் செய்யக்கூடாது. தன்னுடன் நெருங்கிப் பழகுபவர் நெடுங்காலமாகத் தொடர்புடையவர் என்று எண்ணி அவர் விரும்பாத செயல்களைச் செய்பவர்

தீமையையே அடைவார்கள். இது தான் உனக்கு நடந்தது. இனியாவத அவற்றை உணர்ந்து கொள்" என்றார் கதிரேசன்.

**அதிகாரம் - 71 குறிப்பு அறிதல்**

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி. 701

ஐயப் படாஅது அகத்த துணர்வானைத்
தெய்வத்தொ டொப்பக் கொளல். 702.

குறிப்பின் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். 703

குறித்தது கூறாமைக் கொள்வாரொடு ஏனை
உறுப்புஓ ரனையரால் வேறு. 704

குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண். 705

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 706

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும். 707

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின். 708

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின். 709

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற. 710

தனக்கு முன்னால் வந்தமர்ந்த கதிரேசனின் கண்களையும், முகத்தையும் சில கணங்கள் பார்த்து விட்டுச் சிரித்தார் தணிகாசலம். பின் சொன்னார்; “அகல்யா ஆசிரியைக்கு இடமாற்றம் விருப்பமில்லையா…?”

கதிரேசன் தான் வந்த நோக்கத்தை அவர் புரிந்து விட்டார் என்று நினைத்து ஆச்சரியப்படவில்லை; “ஒருவர் சொல்லாமலே அவரின் முகத்தைப் பார்த்து வந்த விடயத்தைப் பற்றி அறிந்து கொள்பவர்கள் உலகத்தின் உயர்ந்த ஆபரணத்தைப் போன்றவர்கள். ஒருவரின் மனதில் உள்ளவற்றை அவர் சந்தேகப்படா வண்ணம் அறிந்து சூட்சுமமாகக் கதைப்பர்கள் தெய்வத்திற்குச் சமமானவர்கள். அப்படியானவர்களை எவ்வளவு உயர்ந்த பொருட்களைக் கொடுத்தாயினும் துணையாக்கிக் கொள்ளல் வேண்டும். இவர்கள் உறுப்புக்களால் மற்றவர்களோடு ஒன்றுபட்டிருந்தாலும், அறிவினால் வேறுபட்டவர்கள். கண்களையும், முகத்தையும் பார்த்து அவன் என்ன நினைக்கிறான் என்றுஅறிந்து கொள்ள முடியாதவர்களுக்குக் கண்களால் ஒருபயனும் இல்லை. தன்முன்னால் இருப்பவற்றை அப்படியே கண்ணாடி காட்டுவது போல, மனதில் உள்ளவற்றை முகம் காட்டும். உள்ளத்தில் உள்ள உணர்ச்சிகளைச் சம்மந்தப்பட்டவன் மறைத்தாலும் முகம் காட்டிக் கொடுத்து விடும். அதனால் முகத்திற்கு இணையாக அறிவுள்ளது வேறு எதுவும் இல்லை. உள்ளத்தின் குறிப்பை அறிய வல்லவன் எதிரியின் முகத்தைப் பார்த்து அவனது திட்டங்களை அறிந்து கொள்வான். கண்பார்வையின்

வேறுபாடுகளைக் கொண்டு, அவற்றின் பொருள் என்னவென்று அறிந்து கொள்ளவல்லவனைத் துணையாகக் கொண்டால் எந்த எதிரியையும் வெற்றி கொள்ளலாம். நுட்பமாக அறிந்து சொல்பவர்களுக்குத் துணை செய்வது அவர்களது கண்கள் மட்டுமே. என்பது கதிரேசனுக்குத் தெரியும். அதனால் தான் தணிகாசலம் அப்படிச் சொன்னார் என்று திகைத்துப் பேசாமல் இருந்தார்.

"அகல்யா ஆசிரியரை வெருட்ட வேண்டும் என்பதற்காகத் தான் அப்படிச் செய்தேன். உங்களுக்காக எனது முடிவை மாற்றிக் கொள்கிறேன்" என்றார் தணிகாசலம்.

**அதிகாரம் - 72 அவை அறிதல்**

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 711

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர். 712

அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல். 713

ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல் 714

நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. 715

ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்

ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு. 716

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறக்
சொல்தெரிதல் வல்லா ரகத்து. 717

உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று. 718

புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார். 719

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தார்
அல்லார்முன் கோட்டி கொளல் 720

சபேசன் என்ற மாணவன் முத்தமிழ் விழாவில் பேசுவதற்கு விரும்பினான். முதல் முறையாக மேடையேறிப் பேசவுள்ளதால் அவன் நமசிவாயம் சுவாமிகளிடம் வந்து தனது எண்ணத்தைக் கூறினான். அவர் சொன்னார்; "சொற்களின் வகை தொகைகளை அறிந்த நல்ல பேச்சாளர்கள் சபையின் தன்மையை அறிந்த பின்பே பேசுவார்கள். இவர்கள் தாம் பேசும் போது சபையை அவதானித்துச் சபை தனது பேச்சை எவ்வாறு ஏற்றுக் கொள்கின்றது என்று ஆராய்ந்தே பேசுவர். அப்படி ஆராயமல் பேசுபவர்கள் பேசும் முறைமையை அறியாதவர்கள் அவர்களது பேச்சால் எந்தப் பயனும் உண்டாகாது. அறிவுள்ளவர்களின் சபையில் அறிஞர்களைப் போலப் பேச வேண்டும். அறிவில்லாதவர்களின் சபையில் வெண்சுண்ணாம்பு போலத் தாமும் அறிவில்லாதவர்கள் போலப் பேசுதல் வேண்டும். அறிவுள்ளோர் சபையில் மௌனமாக இருப்பது எல்லா நன்மைகளையும் தரும். அல்லாது குற்றம்

ஏற்படப் பேசுவதென்பது, நல்ல ஒழுக்கத்தில் இருந்து தவறி விடுவதைப் போன்றது. சொற்களின் பொருளைக் குற்றமில்லாது அறிந்திருப்பவர்- களின் சபையில் ஒருவர் பேசும் போது பேசுபவரின் சிறந்த புலமை எல்லோருக்கும் புலப்படும். பேசுபவரின் கருத்தை அறிந்து கொள்பவர்கள் இருக்கும் சபையில் நன்கு கற்றவர் பேசுவது தானாகவே வளரும் பயிர்கள் உள்ள பாத்திக்கு நீர் ஊற்றுவது போன்றதாகும். அறிஞர்கள் கூடியுள்ள சபையில் நல்ல கருத்துக்களைச் சொல்லும் வல்லமை உள்ளவர்கள் அறிவில்லாதவர்களின் சபையில் மறந்தும் கூடப் பேசக்கூடாது. தமக்கிணையான அறிவிற் சிறந்தவர்கள் இல்லாத சபையில் ஒரு பொருளைப் பற்றிப் பேசுவது தூய்மை இல்லாத இடத்தில் கொட்டிய அமிழ்தம் போன்றது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**அதிகாரம் - 73 அவை அஞ்சாமை**

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 721

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்றசெலச் சொல்லு வார்.. 722

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர் 723

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற

மிக்காருள் மிக்க கொளல். 724

ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு. 725

வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு. 726

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல். 727

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார். 728

கல்லா தவரின் கடைஎன்ப கற்றறிந்தும்
நல்லா ரவைஅஞ்சு வார். 729

உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களனஞ்சிக்
கற்றசெலச் சொல்லா தார். 730

“மகனே, சொற்களின் தொகுதியை அறிந்த தூய்மையான அறிவுடையவர்கள், சபையில் கூடியுள்ளவர்களின் வல்லமையை அறிந்து வாய் தவறிக்கூடப் பிழையாகப் பேச மாட்டார்கள். தாம் கற்றவற்றைச் சபையில் உள்ளவர்களின் மனதில் பதியுமாறு பேசக்கூடியவர்கள், கற்றவர்கள் அனைவரையும் விடக் கற்றவர்களாக மதிக்கப்படுவர். பகைவர்கள் நிறைந்த போர்க்களத்திற்கு அஞ்சாமற் சென்று போராடி மரணமடைபவர் பலர். ஆனால் கற்றவர் நிறைந்த சபைக்குச் சென்று பேசத் துணிவபவர்கள் சிலரேயாவர். கற்றவர்களிடம் தாம் கற்றதை அவர்களின் மனதில் பதியுமாறு எடுத்துச் சொல்லல் வேண்டும். தம்மை விடக் கற்றவர்களிடம்

தமக்குத் தெரியாதவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளல் வேண்டும். சபையில் உள்ளவர்களின் கேள்விகளுக்கு அஞ்சாமல் பதில் கூறத்தக்கதான நூல்களைத் தெளிவாகக் கற்றல் வேண்டும். வீரமில்லாத கோழையின் கையில் வாள் இருப்பதால் பயன் இல்லை. அதுபோல அறிஞர்கள் கூடியுள்ள சபையில் பேச அச்சப்படுவோர் பல்வேறு அறிவு தரும் நூல்களைக் கற்றதினால் பயன் இல்லை. சபையில் உள்ள அறிஞர்களுக்கு அஞ்சுபவன் கற்ற நூல், பேயிடின் கையில் உள்ள கூரிய வாளுக்குச் சமனானது. அறிஞர்களது அவையில் அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் பேசமுடியாதவன் பல்வேறுபட்ட அறிவு தரும் நூல்களைக் கற்றாலும் அதனால் பயன் பெற மாட்டான். இவன் படிக்காதவனை விடக் கீழானவனாவான். இத்தகையவன் உயிரோடு வாழ்ந்தாலும் இறந்தவனுக்கு ஒப்பானவனாவான். அதனால் அவையில் அஞ்சாமல் பேசவேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**அதிகாரம் - 74 நாடு**

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்
செல்வரும் சேர்வது நாடு. 731

பெரும்பொருளால் பெட்டகத்து ஆகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு. 732

பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு. 733
உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு. 734
பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு. 735
கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை. 736
இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு 737
பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்கிவ் வைந்து 738
நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு. 739
ஆங்குஅமைவ எய்ரியக் கண்ணும் பயம்இன்றே
வேந்துஅமைவு இல்லாத நாடு. 740

நாவலர் தமிழ் வித்தியாலய உயர் வகுப்பு மாணவர்களைச் சிறந்த நாடு என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதச் சொன்ன பண்டிதர் கந்தையா, சிறந்த நாடென்றால் என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்று கூறினார்.

“அன்பான மாணவர்களே, சிறந்த ஒரு நாட்டில் குறைவில்லாத விளைபொருட்களை உருவாக்குவோரும், தகுதி மிக்க அறிஞர்களும் பெருந் தொகையான தனவந்தர்களும் இருத்தல் வேண்டும். அள்ள அள்ளக் குறையாத செல்வ வளம் உடையதாகவும், பிறநாட்டு மக்கள் விரும்பக் கூடியதாகவும். பெருந்துன்பங்கள் பலவும் வந்த போதும் அதைத் தாங்கி நிவர்த்தி செய்யக் கூடிய தலைவன் உள்ளதாகவும் இருப்பதே சிறந்த நாடாகும். அத்துடன் பிறநாடுகளில் இருந்து போர் போன்ற அவலங்களால் வந்து குடியேறியவர்களைத் தாங்கக் கூடியதாகவும், காலந்தவறாது முழுவரிப் பணத்தையும் செலுத்தக்கூடிய மக்களைக் கொண்டதாகவும் மிகக் கொடிய பசியும், தீராத நோய்களும், அழிவினை ஏற்படுத்தும் கொடிய பகையும் வந்து சேராமல் இருப்பதே வளம் மிக்க சிறந்த நாடாகும். ஆட்சிக்கு எதிராக இயங்கும் பல குழுக்களும், உடனிருந்தே கேடுசெய்யும் உட்பகையும், கெடுமதியாளர்களின் தொல்லைகளும் இல்லாது இருப்பதே சிறந்த நாடாகும். அத்துடன் பகைவர்களால் கெடுக்க முடியாததாகவும், கேடு வந்தாலும் வளம் குறையாது இருக்கும் நாடே மற்றைய நாடுகளுக்கெல்லாம் தலையாய நாடாகும். ஊற்று நீர், மழை நீர் என்ற இருவகையான நீர் வளமும், இயற்கையாகவே அரனாக அமைந்த மலைகளும், அம்மலைகளில் இருந்து பெருகிப் பாய்ந்தோடும் ஆற்று நீரும், வலிமை மிகுந்த கோட்டைகளும் சிறந்த ஒரு நாட்டின் உறுப்புக்களாகும். நோயில்லாதிருத்தல் குறைவில்லாத செல்வம், விளைபொருள்

வளம், மகிழ்ச்சியான வாழ்க்கை, ஏற்ற பாதுகாப்பு ஆகிய ஐந்தும் சிறந்த நாட்டின் அணிகலன்களாகும். பெருமுயற்சி செய்யாது இருந்தாலும் குறைவில்லாத வளத்தைத் தரும் நாடே சிறந்த நாடாகும். பெரு முயற்சி செய்தும் உரிய பயனைத் தராத நாடு சிறந்த நாடாகாது. இவற்றுடன் நல்ல அரசனின் நலம் தரும் ஆட்சி இல்லாவிட்டால் வளங்கள் பல கொண்ட நாடாக இருந்தாலும் அதனால் பயனேற்பட மாட்டாது". என்றார் பண்டிதர் கந்தையா.

**அதிகாரம் - 75 அரண்**

ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். 741

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண். 742

உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல். 743

சிறுகாப்பின் பேரிடத்து ஆகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண். 744

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த்து ஆகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீரது அரண். 745

எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடையது அரண். 746

முற்றியும் முற்றாது எறிந்தும் அறைப்படுத்தும்

பற்றற்கு அரியது அரண். 747

முற்றுஆற்றி முற்றி யவரையும் பற்றுஆற்றிப்
பற்றியார் வெல்வது அரண். 748

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறுஎய்தி மாண்டது அரண். 749

எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண். 750

"வளங்கள் பலவும் கொண்ட ஒரு சிறந்த நாட்டிற்குப் பாதுகாப்பளிப்பது அரண். பிறநாட்டின் மீது போர் புரியும் போது படை வீரர்களுக்கு அரண் பாதுகாப்பளிக்கிறது. அது போலப் பகைவர் படையெடுத்து வரும் போது போர் வீரர்கள் பதுங்கிப் பாதுகாப்பாக இருக்கவும் அரண் உதவி செய்கிறது. மணிபோலத் தெளிந்த நீரும். வெட்ட வெளியான நிலமும், மலைகளும், குளிர்மையான நிழலைத்தரும் காடுகளும் உள்ள இடம் அரணாகும். உயரம், அகலம், உறுதி, பகைவரால் அழிக்க முடியாத தன்மை ஆகிய நான்கும் பொருந்தி இருப்பதே பாதுகாப்பான அரணாகும். காக்க வேண்டிய வாயில் சிறியதாயும், மற்ற இடங்கள் மிகப் பெரியனவாயும், எதிர்த்து வரும் பகைவரின் எழுச்சியைக் கெடுக்க வல்லதாயும் உள்ளதே அரண். பகைவரால் கைப்பற்ற முடியாததாகவும், கையிருப்பில் பலவகையான உணவுப் பொருட்களைக் கொண்டதாயும், உள்ளே இருப்பவர்கள் அச்சமின்றித் தங்கியிருந்து போர் செய்யக்கூடியதாகவும் அமைக்கப்படுவதே அரண். உள்ளே இருக்கும் வீரர்களுக்கு

வேண்டிய பொருட்களையெல்லாம் கொடுத்து, போர் வந்த காலத்தில் பகைவரை வெல்லக்கூடிய வீரரை உடையதாய் இருப்பதே அரண். முற்றுகையிட்டாலும், முற்றுகையிடாது போர் செய்தாலும், உள்ளிருப்பவர்கள் வஞ்சனை செய்தாலும் பகைவரால் வெல்ல முடியாதவாறு அமைக்கப்படுவதே சிறந்த அரண். போர் முனையில் பகைவர் அழியும் வண்ணம் உள்ளே இருக்கும் வீரர்கள் போர் செய்யக் கூடியதாக அமைக்கப்படுவதே பெருமையான அரண். அரண் வலிமை உடையதாகவும், பெருமைகள் பல உள்ளதாகவும் இருந்தாலும் உள்ளே இருக்கும் வீரர்கள் திறமையில்லாதவர்களாக இருப்பார்களானால் அரணால் எந்தவிதமான பயனும் ஏற்படாது. சிறந்த நாட்டிற்குப் பாதுகாப்பான அரணும் உறுதியான வீரர்களும் வேண்டும். இனிக்கட்டுரையை எழுதுங்கள்" என்றார் பண்டிதர் கந்தையா.

**அதிகாரம் - 76 பொருள் செயல்வகை**

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள். 751

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. 752

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று. 753

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து

தீதின்றி வந்த பொருள். 754

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். 755

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். 756

அருளென்னும் அன்புஈசன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு. 757

குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்னைத்தஒன்று
உண்டாகச் செய்வான் வினை. 758

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எ∴குஅதனிற் கூரியது இல். 759

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. 760

"தீயவனானாலும் பணக்காரனைத் தான் எல்லாவற்றிற்கும் முன்வைக்கிறார்கள். பரமசிவம் தீயவன். தீய செயல்களை அஞ்சாமற் செய்பவன். அவனைக் கொண்டு பாடசாலைக் கட்டிடத்தைத் திறக்கிறார்கள்.அவன் மழைக்குக்கூடப்பாடசாலையில் ஒதுங்கியதில்லை" என்று கோபப்பட்டார் திருநாவுக்கரசு.

“நீ கோபப்படுவதில் அர்த்தமில்லை. ஒரு பொருளாய் மதிக்கத்தகாதவரையும் மதிப்பு மிக்கவராகச் செய்வது செல்வம். செல்வம் இருந்தால் எல்லா நன்மைகளும் தேடி வரும். எல்லா நன்மைகளும் உடையவராக இருந்தாலும் பொருள் இல்லாதவரை யாரும் மதிக்க மாட்டார்கள். எந்த நன்மையும் இல்லாதவராக இருந்தாலும் பொருள் உள்ளவரை எல்லோரும் புகழ்வார்கள். பொருள் என்று சொல்லப்படுகின்ற அணையா விளக்கு எண்ணிய இடங்களுக்கெல்லாம் சென்று எண்ணிய வண்ணம் நடக்கச் செய்யும். சேர்க்கும் வழியறிந்து அறவழியில் தேடிய செல்வம் அறத்தை வளர்க்கும்; இன்பங்களைக் கொடுக்கும். அருள் அன்பு ஆகிய நல்வழியில் சேர்க்காத செல்வத்தைப் பயன்படுத்தக்கூடாது. உடையவர்கள் இல்லாமையால் தாமாகத் தேடி வந்த பொருளும் வரியாக வசூலிக்கப்படும் பொருளும், பகைவரை வென்றதால் திறையாகப் பெற்ற பொருட்களும் அரசுக்குரியவை. அன்பு என்ற தாய் பெற்ற அருள் என்ற அற்புதமான குழந்தை, பொருள் என்ற செவிலித் தாயால் வளரும். ஒருவன் தனக்குச் சொந்தமான செல்வத்தை வைத்துச் செயலாற்றுவது என்பது மலையின் மேலே ஏறிநின்று கொண்டு கீழே நடக்கும் யானைப் போரைப் பார்ப்பது போன்றது. ஒருவன் பொருளைத்தேட வேண்டும். அது தான் அவனது பகைவர்களின் செருக்கை அடக்கும் கூரிய ஆயுதம். அரிதான செல்வத்தை மிகுதியாகத் தேடியவர்களுக்கு அறமும் இன்பமும் மிகவும் எளிதாகக்

கைகூடும்" என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது தான் நடைபெறுகிறது" என்றார் கதிரேசன்.

**அதிகாரம் - 77 படை மாட்சி**

உறுப்பமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை. 761

உலைவிடத்து ஊறுஅஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக்கு அல்லால் அரிது. 762

ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். 763

அழிவின்றி அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. 764

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. 765

மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. 766

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து. 767

அடல்தகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும். 768

சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை. 769

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை

கதிரேசனுக்கு அரசர்களின் வாழ்க்கை வரலாறு பற்றியும் அவர்களது போர் முறைகளைப் பற்றியும் அறிந்து கொள்வதில் விருப்பம் அதிகம். அன்று திருநாவுக்கரசு சோழ மன்னனின் படைமாட்சியும் படைச் செருக்கும் என்ற புத்தகத்தைக் கொடுத்தார். அதை ஆவலுடன் எடுத்து வாசித்தார் கதிரேசன்.

"உறுப்புக்கள் அனைத்தும் அமைந்ததாய், போர்க்களத்தில் வரும் துன்பங்களுக்கு அஞ்சாமல் அவற்றை எதிர்த்து வெற்றி கொள்ளும் படைகளே அரசர்களின் செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்த செல்வமாகும். போரில் எதிர்பாராத அழிவால் வல்லமை, குன்றினாலும் அஞ்சாத நெஞ்சு உறுதி மூலப்படைக்கே உண்டு. எலிகள் பெரும் அளவிற்கூடி கடல் போலப் பேரொலி ஒலித்தாலும் பாம்புக்கு எதுவும் ஆகாது. பாம்பு மூச்சு விட்ட அளவிலேயே எலிகள் அழிந்து போகும். போரில் பகைவரால் வெற்றி கொள்ள முடியாததாகவும், பகைவரின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகாததாகவும் இருப்பதே பெருமையான படை. யமனே கோபங்கொண்டு எதிர்த்து வந்தாலும் ஒன்று கூடி எதிர்த்து நிற்கும் ஆற்றல் மிக்க படையே சிறந்த படை. வீரம், மானம், ஒழுக்கம், நம்பிக்கை ஆகிய நான்கு குணங்களையும் உடையதே சிறந்த படை. எதிர்த்து வரும் பகையைத் தடுத்து நிறுத்தி, பகைவரின் முன்னணிப் படையாகிய தூசிப்படையைத் தாக்கி முன்னேறிச் செல்லும் வலிமை மிக்கதே சிறந்த

படையாகும். போர் செய்யும் வீரமும்,பகைவரைத் தடுக்கும் ஆற்றலம் இல்லையென்றாலும், படையானது தனது அணிவகுப்பின் அழகால் சிறப்புப்பெறும். வீரர்களின் பற்றாக்குறையும், அரசன் மீதுள்ள வெறுப்பும், உடை, உணவு, ஆயுதப் பற்றாக்குறையும் இல்லாதிருக்குமானால் படை நிட்சயம் வெல்லும். நிலையான வீரர்கள் பலர் இருந்தாலும், போர் முறைகளை நன்கு தெரிந்த படைத் தலைவன் இல்லையென்றால் சிறந்த படையும் தோல்வியடையும்"

**அதிகாரம் - 78 படைச் செருக்கு**

என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ
முன்நின்று கல்நின் றவர். 771

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. 772

பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எ்.கு. 773

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 774

விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு. 775

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து. 776

சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. 777

உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர். 778

இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர். 779

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்தகோள் தக்கது உடைத்து. 780

வீரன் ஒருவன் தனது அரசனைப் பற்றிப் புகழ்ந்து கூறிப் பெருமைப்படுகிறான். அதைத் திரும்பவும் வாசித்தார் கதிரேசன்.

“பகைவரே, எனது அரசனை எதிர்த்து நிற்காதீர்கள். அவனை எதிர்த்து நடுகல்லானவர்கள் பலர். காட்டில் ஓடும் முயலை நோக்கிக் குறிதவறாமல் அம்பை எய்வதை விட, வெட்ட வெளியில் நிற்கும் யானை மீது எறிந்து குறி தவறிப் போன வேலினை ஏந்துவதே சிறப்பானது. பகைவரை எதிர்த்து வெல்வது பேராண்மை என்பர். ஒரு துன்பம் வந்த போது பகைவர்களுக்கு உதவி செய்வது ஆண்மைக்குக் கூர்மை என்பர். கையில் ஏந்திய வேலைத் தன்னைத் தாக்க வந்த

யானை மீது எறிந்து துரத்தி விட்டு, வேறு வேலைத் தேடும் போது தன் மார்பில் பாய்ந்த வேலைப் பறித்து மகிழ்ந்து எறிபவன் தான் வீரன். பகைவரைச் சினத்தோடு பார்க்கும் கண்கள் அவர்கள் வேலை வீசும் போது இமைக்குமானால் அது வீரனுக்குத் தோல்வியைக் கொடுக்கும். வீரன் தான் வாழ்ந்த நாட்களைக் கணக்கிட்டு, விழுப்புண்படாத நாட்களெல்லாம் பயனற்ற நாட்கள் என எண்ணுவான். என்றும் நிலைத்து நிற்கும் புகழை விரும்பி அதற்காகத் தனது உயிரை இழக்கச் சித்தமாகும் வீரன் அதற்கு அடையாளமாகத் தனது காலில் வீரக் கழலை அணிவது சிறப்பானது. போர்க்களத்தில் தன்னுயிரைப் பொருட்படுத்தாது வீரத்துடன் போர் செய்யம் வீரன், அரசரின் சினத்திற்கு ஆளானாலும் தன் சிறப்பில் களங்கம்பட விரும்பமாட்டான். தான் செய்த சபதப்படி வீரத்துடன் போர் செய்து உயிர்துறந்த வீரன் இறந்து விட்டானென்று யாரும் கவலைப்பட மாட்டார்கள். தனது அரசன் கவலைப்பட்டுக் கண்ணீர் சொரியுமாறு போரில் சாகப்பெற்றால், அச்சாவு இரந்தாவது பெற்றுக் கொள்ளத்தக்க பெருமை உடையது". அதை வாசிக்கும் போது கதிரேசனது கண்கள் குளமாகி எழுத்துக்களை மறைத்தன.

**அதிகாரம் - 79** **நட்பு**

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. 781

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்

பின்நீர பேதையார் நட்பு 782
நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு 783
நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு. 784
புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். 785
முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு. 786
அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண் அல்லல்
உழப்பதாம் நட்பு 787

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு 788
நட்பிற்கும் வீற்றிருக்கை யாதெனின் கொட்புஇன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. 789
இனையர் இவர்எமக்கு இன்னம் யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு 790

“அன்று திருநாவுக்கரசுவின் பிறந்த நாள். கதிரேசனும் மனைவியும் இனிப்புப் பலகாரங்களும் உடுபிடைவைகளையும் மாலைகளும் கொண்டு திருநாவுக்கரசுவின் வீட்டுக்கு வந்தனர். அவர்களைக் கண்ட பின்பு தான் திருநாவுக்கரசுவின் தகப்பன் ஆறுமுகத்திற்குத் தனது மகனின் பிறந்த நாள் அன்று என்ற

நினைவு வந்தது. திருநாவுக்கரசுவுக்கு அன்று தனது பிறந்ததினம் என்று தெரியாது. அவர் வீட்டில் இருக்கவில்லை.

“ஆறுமுகம் கண்கலங்கியவாறு சொன்னார்; “கதிரேசா, நட்பைப் போலத் தொடர்பு கொள்வதற்குப் பெருமையானது வேறு எதுவும் இல்லை. அது போலத் தொழிலுக்குப் பாதுகாப்பாக இருப்பதும் வேறு எதுவும் இல்லை. அறிவுள்ளவர்களின் நட்பு வளர்பிறை போலத் தினமும் வளர்ந்து கொண்டேயிருக்கும். அறிவற்றவர்களின் நட்புத் தேய்பிறை போலத் தினமும் தேய்ந்து கொண்டேயிருக்கும். நூலின் நற்பொருளைக் கற்கக் கற்க இன்பம் பெருகும். அது போல நல்ல பண்புள்ளவர்களின் நட்பும் பழகப் பழக இன்பம் தரும். நட்பென்பது சிரித்து மகிழ்வதற்காக ஏற்பட்டதன்று. நண்பர் நிலை தவறிப் போக நேரிட்டால் அதைக் கண்டித்துத் திருத்துவதற்குமாக அமைந்தது. நட்புக் கொள்வதற்கு நேரிற் சந்திக்கவும் பழகவும் வேண்டியதில்லை. ஒத்த தன்மை நட்பு உண்டாவதற்கு உரிய பண்பைக் கொடுக்கும். முகம் மலர்ந்து சிரித்துப் பேசுவது நட்பன்று. நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்பு கொண்டு உண்மையுடன் பழகுவதே நட்பு. அழிவைத்தரும் தீமைகளை நீக்கி, நல்ல வழியில் வாழச் செய்து, அழிவு வந்த காலத்திலும் உடனிருந்து துன்பப்படுவதே நட்பு. உடை அவிழும் போது கை உடனே உதவிக்காப்பது போல நண்பனுக்குத் துன்பம் வரும் போது அதை உடன் நீக்கி வைப்பது தான் நட்பு. நட்பு என்பது என்னவென்றால்,

எப்பொழுதும் மனம் மாறுபடாது மகிழ்வுடன் தேவையான உதவிகளைச் செய்து தாங்கிக் கொள்ளும் நிலையாகும். இவர் எனக்கு இத்தன்மையானவர், நான் இவருக்கு இன்ன தன்மை யானவன் என்று பாராட்டினாலும் நட்பு தனது சிறப்பை இழந்து விடும்" என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர்களின் கூற்றுக்கு இலக்கணமாய் இருவரும் வாழ்கிறீர்கள்" என்று மகிழ்ந்தார் ஆறுமுகம்.

**அதிகாரம் 80 நட்புஆராய்தல்**

நாடாது நாட்டலிற் கேடில்லை நட்பின்
வீடில்லை நட்புஆள் பவர்க்கு 791
ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும் 792
குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு 793
குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டும் நட்பு 794
அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல் 795
கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் 796
ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்

கேண்மை ஒரீஇ விடல் 797
உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு 798
கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும். 799
மருவுக மாசற்றார் கேண்மைஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு 800

திருநாவுக்கரசு வீட்டுக்கு வந்ததும் கதிரேசன் தான் கொண்டு வந்த மாலையைப் போட்டார். அப்போது தான் திருநாவுக்கரசுவிற்குத் தனது பிறந்த தினம் அன்று என்ற நினைவு வந்தது.

ஆறுமுகம் மகிழ்ச்சிப் பெருக்குடன் சொன்னார்; "நண்பர்களுக்கிடையில் பிரிவு என்பதே இல்லை. எனவே ஆராய்ந்து பாராது கொள்ளும் நட்பால் கேடுகள் தான் உண்டாகும். ஒருவர் மிக நுணுக்கமாய் ஆராய்ந்து பாராமல் கொள்ளும் நட்புச் சில சமயம் தான் சாவதற்கே காரணமான துன்பத்தை உண்டாக்கி விடும். ஒருவனுடைய குணத்தையும, குடிப்பிறப்பையும், அவனிடம் உள்ள குறைகளையும், அவனைச் சேர்ந்தவர்களின் இயல்பையும் அறிந்த பின்பே நட்புக் கொள்ளல் வேண்டும். உயர்ந்த குடியிற் பிறந்து தனக்கு

வருகின்ற பழிக்கு அஞ்சுபவனைப் பொருள் கொடுத்தாவது நண்பனாக்கிக் கொள்ளல் வேண்டும். நன்மை தராத செயல்களைச் செய்யும் போது வருந்தும்படியாக இடித்துச் சொல்லி, உலக நடையின்படி நடக்க உதவுபவனின் நட்பை ஆராய்ந்து கொள்ளல் வேண்டும். கேடு உண்டாவதிலும் ஒரு நன்மை இருக்கிறது. அக்கேடு தான் நண்பர்களின் குணங்களை அளந்து பார்க்கும் அளவு கோலாகும். அறிவற்றவர்கள் நண்பர்களாய் இருந்தால் அவர்களை நீக்கிவிடுவதே நட்புக் கொண்டவனின் சிறந்த செல்வமாகும். ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணக்கூடாது. அது போலத் துன்பம் வந்தபோது கைவிடுபவரின் நட்பைத் தொடரக்கூடாது. அப்படியாகத் துன்பம் வரும் போது கைவிட்டுச் செல்லும் நண்பர்களின் நட்பை இறக்கும் போது நினைத்தாலும் அது பெருந்துன்பத்தைத் தரும். குற்றமில்லாதவர்களின் நட்பை விரும்பி ஏற்றுக் கொள்ளல் வேண்டும். ஒத்த பண்பில்லாதவரது நட்பைப் பொருள் கொடுத்தாவது நீக்கி விடல் வேண்டும்." என்று பெரியவர்கள் கூறியது உங்கள் இருவரது நட்பில் தெரிகிறது" என்றார் ஆறுமுகம்.

**அதிகாரம் - 81 பழைமை**

பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. 801

நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு

உப்பாதல் சான்றோர் கடன். 802

பழகிய நட்புஎவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை 803

விழைதகையான்வேண்டி இருப்பர் கெழுதகையான்
கேளாது நட்டார் செயின். 804

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின் 805

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்துத்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு 806

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 807

கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின் 808

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. 809

விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார். 810

“தம்பி, திருநாவுக்கரசு மோடன், எதையும் ஆராயாது செய்பவன், திடீரென்று முடிவு எடுப்பவன். எடுத்தெறிந்து கதைப்பவன். இதையெல்லாம் பொறுத்து அவனோடு நீ உறுதியான நட்பு வைத்திருப்பதால் தான் அவனின் வாழ்க்கை

சிறப்பாக உள்ளது. இல்லாவிட்டால் சீரழிந்திருப்பான்” கலங்கினார் ஆறுமுகம்.

“திருநா அப்படியானவன் தான். இருந்தாலும் நான் சொல்வதைக் கேட்பான். பழகிய நண்பர் உரிமையோடு செய்யும் செயலை இழிவானது என்று நினைக்காது ஏற்றுக் கொள்வது பழமையாகும். நட்புக்கு உறுப்பாவது நண்பர் உரிமையோடு செய்யும் செயல்களாகும். அதை மனங்கோணாமல் ஏற்றுக் கொள்வது சான்றோரது கடமையாகும். உரிமையோடு நண்பர் செய்யும் செயலைத் தான் செய்ததாக ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவருடன் பழகிய நட்புப் பயனற்றதாகி விடும். தம்மைக் கேளாது நண்பர் செய்யும் உரிமையான செயலைத் தான் செய்தது போல ஏற்றுக் கொள்வது சான்றோரது பண்பு. வருந்தத் தக்க செயல்களைக் கூட நண்பர்கள் செய்தால் அதற்கு அறியாமை மட்டும் காரணமன்று, தம்மிடம் அவருக்குள்ள உரிமையும் காரணமாகும் என்று எண்ணுதல் வேண்டும். நட்பின் உரிமையை அறிந்தவர் தமக்கு அழிவு வந்தாலும் பழைமையான நண்பரின் தொடர்பை ஒரு போதும் விலக்கிக் கொள்ள மாட்டார். அன்பின் மிகுதியால் நீண்ட நாள் நட்புக் கொண்டவர், நண்பர் தமக்குக் கேடு செய்தாலும் அவரிடம் கொண்ட அன்பினை நீக்கமாட்டார். பழகிய நண்பர் தவறு செய்கிறார் என்று பிறர் சொன்னாலும் அதைக் கேளாத உரிமை உள்ளவருக்கு நண்பர் தவறு செய்வாரானால் அது பயனுள்ள நாளாகும்”.

“உரிமை விட்டுப் போகாமல் தொடர்ந்து நண்பர்களாய் இருப்பவர்களுள் ஒருவர் தவறு செய்த போதும் மற்றவர் நட்பை விட்டு விடாமல் வாழ்ந்தால் அவர்களை உலகம் போற்றும். மிகவும் பழகிய நண்பர் தவறு செய்த போதும் அவரது நட்பைப் பேணித் தொடர்ந்து நட்புப் பூண்டுள்ள வரைப் பகைவரும் போற்றுவர்” என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். திருநா, தவறு செய்யும் போது அதைத் தான் நான் எண்ணுவேன்” என்றார் கதிரேசன்.

## அதிகாரம் - 82 தீ நட்பு

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது 811

உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என். 812

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர். 813

அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா வன்னார்
தமரின் தனிமை தலை 814

செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று 815

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
எதின்மை கோடி உறும். 816

நகைவகைய ராகிய நட்பின் பகைவரான்
பத்தடுத்த கோடி உறும். 817

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 818

கனவினும் இன்னாத மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு 819

எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு 820

"திருநாவுக்கரசு தவறு செய்வதாயிருந்தால் அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கும். ஒன்று அறியாமை, மற்றது உரிமை. இந்த இரண்டைத் தவிர வேறெதுவும் இல்லை என்று எனக்குத் தெரியும். பலர் அன்பின் மிகுதியால் நலம் செய்பவர்கள் போல நடிப்பார்கள். அப்படியான நல்ல பண்புகள் இல்லாதவர்களின் நட்பு வளர்வதை விடத் தேய்வதே நல்லது. தமக்குப் பயனள்ள போது நட்பாக இருப்பதும், பயனில்லாத போது நட்பிலிருந்து நீங்கி விடுவதுமான தகுதியற்றவர்களின் நட்பு இருப்பதை விட இல்லாமற் போவதே நல்லது. நட்பின் உயர்வைக் கருதாமல் அதனால் என்ன கிடைக்குமென்று நினைத்துப் பழகுபவர்கள் விலை மாதருக்கும் திருடர்களுக்கும் சமமானவர்களாவர். போர்க்காலத்தில் வீரனைக் கீழே தள்ளி விட்டு ஓடும் அறிவற்ற குதிரையைப் போன்றவரகளின் நட்பை விலக்கி விட்டுத் தனிமையில் இருப்பது மேலானது. நன்றி

இல்லாதவர்களின் மேலான நட்பைவிட, அறிஞர்களின் பகைமை மேலானது; கோடிக்கணக்கான நன்மைகளைத் தருவது. உள்ளத்தில் அன்பில்லாமல் பழகும் போலியான நண்பர்களின் நட்பை விட பகைவர்களால் வரும் பத்துக் கோடி மடங்காய் இருக்கும். இலகுவாக முடியக்கூடிய செயல்களைக் கூட முடியாதபடி செய்யும் நண்பரின் உறவைச் சொல்லாமலே துண்டித்தல் வேண்டும். செய்யும் செயல் வேறாகவும், சொல்லும் சொல் வேறாகவும் இருக்கின்ற நண்பர்களின் உறவு கனவிலும் துன்பம் தரும். தனித்திருக்கும் போது உறவுடன் பழகி, பலர் கூடியிருக்கும் மன்றத்தில் பழித்துப் பேசுபவரின் நட்பைச் சிறிதளவேனும் விரும்பக் கூடாது" என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். இத்தகைய பண்புகள் எவையும் திருநாவுக்கரசுவிடம் இல்லாததால் தான் நான் அவருடன் உரிமையுடன் நட்பு வைத்துள்ளேன்" என்றார் கதிரேசன்.

## அதிகாரம் - 83 கூடா நட்பு

சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு 821

இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். 822

பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லவர்
ஆகுதல் மாணார்க்கு அரிது. 823

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா

வஞ்சரை அஞ்சப் படும். 824

மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற் றன்று 825

நட்டார் போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். 826

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். 827

தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து 828

மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று. 829

பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகநட்பு ஒரிஇ விடல் 830

திருநாவுக்கரசு பரமசிவத்தின் மைத்துனனான குகநாதனுடன் நட்பு வைத்திருந்தார். குகநாதன் பரமசிவத்துடன் சேர்ந்து தீய செயல்கள் பலவற்றைச் செய்பவன் அன்று பரமசிவமும் குகநாதனும் பாடசாலைக்குச் சென்று கலகத்தில் ஈடுபட்டனர். அதில் திருநாவுக்கரசுவும் பங்குபற்றியிருந்தார். அதனால் கதிரேசனுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது.

“உனக்கு எத்தனை முறை சொன்னாலும் ஏறாது. பரமசிவமும் குகநாதனும் தீயவர்கள். அவர்களோடு நட்பு வைக்காதே என்று பல தடவைகள் கூறியும் கேட்கிறாயில்லை.

மனத்தால் பொருந்தாது, வெளிப்படையில் கூடிப் பழகுபவரின் நட்பு தக்க இடம் கண்ட போது தூக்கி எறிவதற்குரிய பட்டடையாகும். நல்ல நண்பர்கள் போல இருந்து நடிப்பவர்களின் பொய்மையான நட்பு விலைமகளின் மனம் போல உள்ளொன்று புறமொன்றாக வேறுபட்டு நிற்கும். நல்ல பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தாலும் நட்பின் பெருமையை அறியாதவர்கள் நட்பைப் பேண மாட்டார்கள். முகம் மலரப் பேசி, வஞ்சனையுடன் நடப்பவரோடு நட்புக் கொள்ள அஞ்சுதல் வேண்டும். மனம் ஒன்றிப் பழகாதவர் கூறுகின்ற சொல்லை நம்பி, அவர் ஏவும் செயலைச் செய்யக் கூடாது. நண்பர் போல நல்லவற்றைச் சொன்ன போதிலும் பகைவர் கூறும் சொற்களின் உண்மைத் தன்மை விரைவில் உணரப்படும். வில்லின் வணக்கம் வணக்கமாக இருந்தாலும் தீங்கே செய்யும். அது போல பகைவரின் பணிவான சொல்லும் உறுதியாகத் தீமையையே செய்யும். அதனால் பகைவரின் இனிமையான சொற்களை நம்பக்கூடாது. பகைவரானவர் வணங்கித் தொழும் கைக்குள்ளும் கொலைக் கருவி மறைந்திருக்கும். பகைவர் அழுத கண்ணீரும் அத்தகையதே. சிறந்த நண்பரைப் போலப் பழகிக் கொண்டு உள்ளத்தில் இகழ்வாரை, நாமும் அது போலவே வெளியே சிரித்துப் பேசி அவர்களின் தொடர்பு அழியும் வகையில் நடந்து கொள்ளல் வேண்டும். பகைவரை நண்பராக ஏற்றுக் கொள்ளும் காலம் வந்தால் முகத்தளவில் நட்புக் கொண்டு அகத்தில் நட்பு நீங்கி வாய்ப்புக் கிடைக்கும்

போது அதையும் விட்டுவிடல் வேண்டும். இது உனக்குப் புரியாதுள்ளது” என்று கவலைப்பட்டார் கதிரேசன்.

## அதிகாரம் - 84 பேதைமை

பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல் 831

பேதைமையுள்எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல் 832

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில் 833

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல். 834

ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு. 835

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின் 836

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை 837

மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின். 838

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்

பீழை தருவதுஒன்று இல். 839

கழாஅக்கால் பள்ளியள் வைத்தற்றால் சான்றோர்
குழா அத்துப் பேதை புகல் 840

"இவன் பேதை. பேதைமை என்று சொல்லப்படுவது என்னவென்றால், கெட்டதைப் பிடித்து வைத்துக்கொண்டு நல்லவவற்றை விட்டுவிடுவதாகும். ஒழுக்கமில்லாத செயல்களைச் செய்வது அறியாமைகளுள் எல்லாம் பெரும் அறியாமையாகும். தகாத செயல்களையெல்லாம் வெட்கப்படாது செய்வது, தக்கது எது என்று புரியாமல் இருப்பது, அன்பில்லாமல் இருப்பது, காக்க வேண்டியவற்றை யெல்லாம் காக்காமல் இருப்பது ஆகியவை அறிவற்றவர்களின் செயல்கள். உயர்ந்த நூல்கள் பலவற்றைக் கற்று, அவற்றின் பொருளைப் பிறருக்குக் கூறுபவன், அந்த உயர்ந்த கருத்துக்களைத் தன் வாழ்வில் கடைப்பிடிக்கவில்லையென்றால் அவனை விடப் பேதை உலகில் யாரும் இல்லை. ஏழு பிறவிகளிலும் ஒருவன் அனுபவிக்கும் நரகத் துன்பத்தைப் பேதையான ஒருவன் ஒரு பிறப்பில் அனுபவிப்பான். ஒழுக்கநெறி முறைகளை அறியாத பேதை ஒரு செயலை மேற்கொண்டால் அது முடிவடையாது. அத்துடன் செய்யும் பேதை குற்றவாளியாகி அடிமைப்படுவான். பேதையிடம் பெருஞ்செல்வம் சேர்ந்தால், அவனுக்குத் தொடர்பில்லாத அயலவர் தான் நன்மை அடைவார்கள்.

அவனது உறவினர்கள் பசியால் வருந்துவார்கள். அறிவற்றவரின் கைகளில் செல்வம் கிடைப்பது, பித்துப் பிடித்தவன் கள்ளைக் குடித்துத் தடுமாறுவதைப் போன்றதாகும். பேதையிடம் கொள்ளும் நட்பு ஒரு வகையில் இன்பமானது. ஏனென்றால் அவனை விட்டுப் பிரியும் போது சிறிதளவு கூடத் துன்பம் உண்டாக மாட்டாது. அறிஞர் கூடியுள்ள சபையில் அறிவற்றவன் நுழைவது, அசுத்தத்தை மிதித்த காலுடன் பள்ளியறைக்குச் செல்வதைப் போன்றது. அதனால் கதிரேசு நீ வருந்தாதே" என்றார் ஆறுமுகம்.

## அதிகாரம் - 85 புல்லறிவாண்மை

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு. 841

அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம். 842

அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. 843

வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. 844

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும். 845

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி 846

அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு 847

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய் 848

காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு 849

உலகத்தார் உண்டுஎன்பத இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். 850

"தகப்பன் கூறியது திருநாவுக்கரசுவிற்கு உறைத்தது; "இல்லாமைக் கொடுமைகள் பலவற்றுள்ளம் அறிவு இல்லை என்னும் கொடுமையையே மிகப் பெரும் கொடுமையாக உலகம் கருதுகிறது. அறிவில்லாதவன் மனம் மகிழ்ந்து ஒரு பொருளைப் பிறருக்குக் கொடுத்தால், அது பெறுகின்றவனது நல்வினையே தவிர வேறு எதுவும் இல்லை. அறிவில்லாதவர்கள் தமக்குத் தாமே செய்து கொள்ளும் துன்பம் அவர்கள் தம் பகைவர்களுக்குக் கூடச் செய்ய முடியாததாகும். புல்லறிவு என்பது, நான் அறிவுடையவன் என்று ஒருவன் தன்னைத் தானே கூறிப் பெருமைப்படுவது. அறிவற்றோர் தாம் கற்காத நூல்களைக் கூடக் கற்றவர் போல நடித்தால் அது அவர்கள் குற்றமில்லாமல் கற்றறிந்த அறிவையும் சந்தேகப்பட வைக்கும். தன்னிடத்தில் உள்ள குற்றங்களை அறிந்து அவற்றைத் திருத்திக் கொள்ளாதவர், உடம்பில் மறைப்பதற்குரிய

பகுதிகளை மட்டும் மறைக்கும் புல்லறிவாளரை ஒத்தவராவார். அரிதான மறைபொருளை மனதில் வைத்துக் காக்காமல் வெளிப்படுத்தும் அறிவில்லாதவன் தனக்குத் தானே தீங்கு செய்பவனாகிறான். தனக்கு நன்மையானவற்றைப் பிறர் கூறியும் செயற்படாதவன், தானாகவும் உணர்ந்து தெளியமாட்டான். இத்தன்மை அவனது உயிர் போகும் வரை தீராத நோயாய் இருந்து அவனை வாட்டும். எல்லாம் அறிந்தவனாய்த் தன்னை எண்ணிக் கொள்பவனுக்கு அறிவிப்பவன் அறிவிலி. அறிகின்ற தன்மை இல்லாத அவன். தன் அளவில் அறிவுள்ளவனாவான். உலகத்தார் உண்டு என்று சொல்பவற்றை இல்லை என்று சொல்கின்றவன். உலகத்தில் காணப்படும் ஒரு பேயாகவே கருதப்படுவான்" என்று மெய்யுணர்வைத் தரும் நூல்கள் கூறுகின்றன. அதை அறிந்தும் அறிவில்லாதவர்களுடன் பழகும் நான் ஒரு பேதை" என்று கலங்கினார் திருநாவுக்கரசு.

## அதிகாரம் - 86 இகல்

இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்புஇன்மை பாரிக்கும் நோய் 851

பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை. 852

இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும். 853

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். 854

இகல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர். 855
இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து. 856
மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர். 857

இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு. 858
இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு 859
இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்
நன்னயம் என்னும் செருக்கு 860

பாடசாலையில் நடைபெற்ற வாய்த்தர்க்கம் சண்டையாக மாறியதால் கூட்டத்திற்கு வந்த ஒருவன் பரமசிவத்தைக் கடுமையாகத் தாக்கி விட்டான். அதனால் பரமசிவம் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

"திருநா,நல்லவேளை நீ கூட்டத்திற்குப் போகவில்லை. போயிருந்தால் உன்னைப் பற்றியும் குறைவாகக் கதைத்திருப்பார்கள்" என்றார் கதிரேசன்.

“படித்திருந்தும் மற்றவர்களின் எண்ணங்களைப் புரிந்து கொள்ள முடியாதவனாகவே பரமசிவம் வாழ்கிறான். எல்லா உயிர்களும் மற்ற உயிர்களோடு கூடி வாழாமை என்னும் தீய குணத்தை இகல் என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஒருவன் கூடி வாழாமை என்னும் தன்மையைக் கொண்டிருந்தாலும், அவனோடு மாறுபாடு கொள்ளாதிருத்தலே நன்று. ஒருவன் மாறுபாடு என்று சொல்லப்படும் துன்பமான நோயை நீக்கி விட்டால், அது அவனுக்கு அழிவில்லாத புகழைக் கொடுக்கும். துன்பங்கள் எல்லாவற்றிலும் மிகக் கொடிய துன்பமான மாறுபாட்டை நீக்கி விட்டால் அது இன்பங்களில் சிறந்த இன்பத்தைக் கொடுக்கும். மாறுபாடில்லாது நடப்பவர்களின் உயர்வை ஆற்றல் உள்ளவர்களால் கூடத் தடுக்க முடியாது. மாறுபாடு கொள்வதன் மூலம் வெற்றி பெறுவது இனியது என்று எண்ணுபவனின் வாழ்க்கை தவறிப்போதலும் அழிதலும் விரைவில் ஏற்படும். மாறுபாட்டை விரும்புகின்ற தீய அறிவினை உடையவன், வெற்றிக்குக் காரணமான உண்மைப் பொருளை அறியமாட்டான். முரண்படாது எல்லோருடனும் ஒற்றுமையாய் வாழ்வதே ஒருவனுக்குச் சிறப்பைத் தரும். வேற்றுமைப்பட்டால் கேடுகள் தான் அவனைத் தேடி வரும். ஒருவன் தனக்கு உயர்வு வரும் போது மாறுபாடு பற்றி எண்ண மாட்டான். கேடு வரும் போது தான் மாறுபாட்டின் தன்மையை உணர்ந்து அதனை எதிர்த்து வெற்றி பெற நினைப்பான். ஒருவனுக்கு மாறுபாட்டால் துன்பங்கள் பெருகும். மாறுபாட்டிற்கு எதிரான நட்பால் நல்ல நீதியாகிய பெருமிதநிலை உண்டாகும் என்பதை

நான் இப்போது தான் புரிந்து கொண்டேன். இனிப் பரமசிவத்துடனோஅவனது மைத்துனனுடனோ நட்புக்கொள்ள மாட்டேன்” என்றார் திருநாவுக்கரசு.

## அதிகாரம் - 87 பகை மாட்சி

வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. 861

அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு. 862

அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு 863

நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. 864

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது. 865

காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணா மை பேணப் படும். 866

கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. 867

குணன் இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து. 868

செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின் 869

கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்

ஒல்லானை ஒல்லாது ஒளி. 870

"நீ இப்போது சொல்வாய். சிறிது நேரத்தில் மறந்து விடுவாய். உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன..? தம்மை விட வலியவரானால் அவரோடு மாறுபாடு கொண்டு எதிர்ப்பதைக் கைவிடவேண்டும். தன்னை விட மெலியவரானால் பகை கொள்வதை விடாமல் விரும்பி மேற்கொள்ளல் வேண்டும். தன்னைச் சேர்ந்தவர்களிடமும் அன்பு கொள்ளாமல், தனக்குத் தக்க துணையைத் தேடிக்கொள்ளாதவனாகவும், தானும் பலம் இல்லாதவ னாகவும் வாழ்பவர் ஒரு போதும் பகையை ஒழிக்க மாட்டான். ஒருவன் எதற்கும் பயப்படுபவனாகவும், அறிவு இல்லாதவனாகவும். மற்றவர்களுடன் ஒற்றுமையாகச் சேர்ந்து வாழாதவனாகவும், பிறருக்கு ஒன்றும் ஈயாதவனாகவும் இருந்தால் அவனைப் பகைவர்கள் எளிதாக வென்று விடுவார்கள். ஒருவன் சினம் கொள்பவனாகவும். மனவுறுதி இல்லாதவனாகவும், பிறரோடு முரண்படுபவனாகவும் இருந்தால் அவனை யாரும் எப்போதும் எங்கேயும் எளிதாய் வென்று விடுவர். ஒருவன் ஒழுக்கமில்லாதவனாகவும், யாருக்கும் உதவிகள் செய்யாதவனாகவும், பழிக்கு அஞ்சாதவனாகவும், நற்பண்புகள் இல்லாதவனாகவும் வாழ்ந்தால் அவனைப் பகைவர்கள் எளிதாக வென்று விடுவார்கள். ஒருவன் காரணமின்றிச் சினம் கொள்பவனாகவும், பேராசை உடையவனாகவும் இருந்தால் அவனை வெல்வது இலகு என்றுணர்ந்து பகைவர் அவன் மீது பகைகொள்ள விரும்புவர். தன்னுடன் இருந்து கொண்டு பொருந்தாதவற்றைச்

செய்பவனுடைய பகையைப் பொருள் கொடுத்தாவது அடைய வேண்டும். ஒருவன் ஒழுக்கம் இல்லாதவனாகவும் குற்றச் செயல்களைச் செய்பவனாகவும் இருந்தால், அவன் துணையில்லாதவனாவான். இத்தகைய வனைவெல்வது பகைவர்களுக்கு மிகவும் இலகுவானதாகும். அறிவில்லாத அஞ்சும் இயல்புடையவனுடன் பகை கொண்டால் அவனை எதிர்க்கும் போது இன்பங்கள் தொடர்ந்து வரும். கல்வி கற்காதவனைப் பகைத்துக் கொள்ள அஞ்சுபவனுக்கு எக்காலத்திலும் புகழ் வந்து சேராது". என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அதனால் வலியவர்கள் மீது பகைகொள்ளக்கூடாது. அத்துடன் மெலியவர்களை மன்னிக்கவும் கூடாது" என்றார் கதிரேசன்.

## அதிகாரம் - 88 பகைத்திறம் தெரிதல்

பகைஎன்னும் பண்பிலதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. 871

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்வேன் உழவர் பகை. 872

ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். 873

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு. 874

தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று. 875

தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல். 876

நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து. 877

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு 878

இளைதாக முள்மரங் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. 879

உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். 880

“நடராசா கூரிய கத்தியுடன் கதிரேசனின் வீட்டுக்கு வந்தான். அவனின் முகம் அடங்காத சினத்தைக் காட்டியது; “நான் கூலிவேலை செய்தால் அடிமையா..” பரமசிவம் என்னில் உள்ள கோபத்தை எனது மனைவி மீது காட்டியுள்ளான். ஒரு பெண்ணைத் தாக்குவது ஆண்மையுள்ளவனின் செயலா? இன்றைக்குப் பரமசிவத்தைக் கொல்லாமல் விடமாட்டான்” கர்ஜித்தான் நடராசா.

“மகனே, பகை என்று சொல்லப்படுகின்ற பண்பற்ற தீய செயலை ஒருவன் சிரித்துப்பேசும் விளையாட்டாகக் கருதக்கூடாது. வில்லை ஏராகக் கொண்ட வீரர்களுடன் பகை கொள்ளலாம். ஆனால் சொல்லை ஏராகக் கொண்ட அறிஞரோடு பகை கொள்ளக்கூடாது. தான் தனியே இருந்து கொண்டு பலரையும் பகைத்துக் கொள்பவன் பித்துப் பிடித்தவனை விடக்

கீழானவனாவான். பகைவனையும் நண்பனாகக் கொண்டு நடக்கும் பண்புடையவனது பெருந் தன்மையில் தான் உலகம் தங்கியிருக்கிறது. தனக்குத் துணையென்று ஒருவரும் இல்லை. ஆனால் பகைவர் இருவர். இந்நிலையில் அந்தப் பகைவருள் ஒருவரை நண்பராக்கிக் கொள்வது தான் நன்மையைத் தரும். நாம் ஒருவரைப் பற்றி ஆராய்ந்து தெளிந்தாலும், தெளியாவிட்டாலும் அழிவு வரும் போது அவரோடு சேராமலும் நீங்காமலும் பேசாதிருத்தலே நன்று. எமக்கு வரும் துன்பத்தைத் தாமாகவே அறிந்து கொள்ள முடியாத நண்பர்களுக்கு நாமாகச் சொல்லக் கூடாது. பகைவரிடத்தில் மென்மையாக நடக்கக் கூடாது. ஒருவன் செய்யும் பகையை அறிந்து தன்னை வலிமைப்படுத்தித் தற்பாதுகாப்பையும் தேடிக் கொண்டால், பகைவர்களது செருக்கு அடங்கும். முள்மரத்தை முளையிலேயே வெட்டிவிடல் வேண்டும். வளர்ந்த பின் வெட்டினால் அதன் முட்கள் கையைப் புண்படுத்தும். பகைவரை அடக்க முடியாதவர்கள், மூச்சுவிடும் அளவிற்கு உயிரோடு வாழ்பவரேயாவார்" என்ற பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். நீ வலிமையற்றவன், பொருளற்றவன், துணையில்லாதவன். இவற்றைத் தேடிக் கொண்டு பரமசிவத்துடன் மோது" என்றார் கதிரேசன்.

## அதிகாரம் - 89 உட்பகை

நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின் 881

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 882

உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். 883

மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவும் தரும். 884

உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும். 885

ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது. 886

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி 887

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி. 888

எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு. 889

உடம்பொடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று. 890

“நீ கண்டபடி யாருக்கும் எதையும் சொல்லாதே. பரமசிவம் தீயவன். உட்பகையை வளர்ப்பவன். அதனால் கவனமாக இரு, இனிமை தரும் நிழலும் நீரும் நோய்

தருமானால், அவை தீயவையே ஆகும். சுற்றத்தவர்களின் தன்மையும் துன்பம் தருமானால் அவையும் தீயவைதான். வாளைப் போலக் கண்ணுக்குத் தெரிந்த பகைவர்களுக்கு அஞ்சவேண்டியதில்லை. ஆனால் உறவினர்கள் போல உடனிருந்து வெளிப்படையாகத் தெரியாமல் நடிக்கும் பகைவர்களுக்கு அஞ்சியே தீருதல் வேண்டும். உட்பகைக்கு ஆளாகாமல் ஒருவன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். இல்லாவிட்டால் தளர்ச்சி ஏற்படும் போது மட்கலத்தை அறுக்கும் கருவி போல அந்த உட்பகை தவறாமல் அழிவுகளைச் செய்யும். மனம்திருந்தாத உட்பகை ஒருவனுக்கு இருக்குமானால், அது அவனைச் சேர்ந்தவர்கள் கூட அவனுக்கு உதவிகள் செய்ய முடியாத பல குற்றங்களை உருவாக்கும். உறவினர்களிடையே உட்பகை இருக்குமானால், அவன் ஒரு போதும் அழியாமல் இருக்க முடியாது. செப்பின் கலப்பைப் போலப் புறத்தே பொருந்தி இருந்தாலும், உட்பகை உள்ள குடியில் உள்ளவர்கள் மனமொத்து இருக்க மாட்டார்கள். அரத்தினால் தேய்க்கப்பட்ட இரும்பு போல உட்பகைக்கு ஆளான குடியின் வலிமை தேய்ந்து அழிந்து விடும். எள்ளின் பிளவைப் போல மிகச் சிறியதாக உட்பகை இருந்தாலும், அது அக்குடியை அழிக்கவல்ல கேட்டினை உருவாக்கும். மனம் பொருந்திப் பழகாதவருடன் சேர்ந்து வாழ்வது என்பது, ஒரு குடிசையில் பாம்புடன் சேர்ந்து வாழ்வதைப் போன்றது. அதனால் பரமசிவத்துடன் முரண்படாது அவனுடன் ஒத்து வாழப் பழகு” என்றார் கதிரேசன்.

## அதிகாரம் - 90 பெரியாரைப் பிழையாமை

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை. 891

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும். 892

கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு 893

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல் 894

யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர் 895

எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 896

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின். 897

குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. 898

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். 899

இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின் 900

கதிரேசன் சொன்னது நடராசாவிற்குப் பிடிக்கவில்லை. அதனால் அவன் சிவநாதனிடம் சென்றான். சிவநாதன்

சொன்னான்; “இந்த ஊரில் பெரியவர் கதிரேசன். அதனல் அவரைக் குறை கூறுவதை யாரும் ஏற்க மாட்டார்கள்.

“நானும் முன்பு உன்னைப் போலத் தான் பெரியவர்களை மதிக்காமல் பேசியதால் தான் இந்த நிலையை அடைந்தேன் ; “தான் மேற்கொண்ட செயலைச் செய்து முடிக்க வல்லவரின் ஆற்றலை இகழாமல் இருப்பது ஒருவனுக்குச் சிறந்த பாதுகாப்பைக் கொடுக்கும். ஆற்றல் மிக்க பெரியவர்களை மதிக்காமல் நடப்பது பல்வேறு வகையான துன்பங்களைக் கொடுக்கும். எண்ணியபடி செயலைச் செய்து முடிக்க வல்லவருக்குக் கெட்டுப் போக நினைப்பவர்கள் தான் தீங்கு செய்ய நினைப்பார்கள். ஆற்றல் உடையவர்களுக்கு ஆற்றல் இல்லாதவர்கள் தீங்கு செய்ய நினைப்பது எமனைக் கைதட்டி அழைப்பதைப் போன்றது. வலிமை மிக்க அரசனின் சினத்திற்கு ஆளானவர்கள் எங்கே சென்றும் வாழ முடியாது. தீயால் சுடப்பட்டாலும் ஒரு வேளை உயிர் பிழைத்து வாழலாம், ஆனால் ஆற்றல் மிக்க பெரியவரிடத்தில் தவறு செய்வோர் தப்பிப் பிழைக்கவே முடியாது. ஆற்றல் மிக்க பெரியவர்களின் கோபத்திற்கு ஆளானவர், பல பெருமைகளை உடையவராகவும், பெருஞ் செல்வமுடைய வராகவும் இருந்தாலும் கூடப் பெருமை எதுவும் இராது. அவர்கள் அழிவது உறுதி. மலை போல மிகவும் உயர்வான நிலையில் வாழும் பெரியவர்களைக் குறைவாய் மதிப்பவர்கள் எல்லாப் பெருமைகளையும் உடையவராய் இருந்தாலும் அவர்கள் தம் குடும்பத்தோடு அழிவார்கள். உயர்ந்த கொள்கையை உடைய பெரியவர்கள்

சினம் கொண்டால் நாட்டை ஆளும் அரசனே அழிந்து போவான். பல்வேறு வகையான சிறப்புக்களை உடையவரானாலும் உயர்ந்த பண்புகளை உடைய பெரியவரின் சினத்துக்குள்ளானால் அவரால் தப்பிப் பிழைக்க முடியாது. அதை அறியாது செயற்பட்ட நான் சகல சௌபாக்கியங்களையும் இழந்து விட்டேன். அதனால் நீ பெரியவரான கதிரேசனுடன் விரோதம் கொள்ளாதே” என்றார் சிவநாதன்.

## அதிகாரம் - 91 பெண்வழிச் சேறல்

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் விளைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. 901

பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும். 902

இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். 903

மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறுஎய்தல் இன்று. 904

இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். 905

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர். 906

பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்

பெண்ணே பெருமை உடைத்து. 907

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுக பவர். 908

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கண் இல். 909

எண்சேர்ந்த நெஞ்சத்து இடனுடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். 910

பெருந்துன்பத்துடன் சென்ற நடராசா இரண்டு தினங்கள் கழித்து மிகவும் மகிழ்ச்சியுடன் கதிரேசனைச் சந்தித்துச் சொன்னான்; "நான் தான் பிழை விட்டு விட்டேன். பரமசிவத்தைப் பற்றி அவரது மனைவிக்குச் சொன்னால் அவளுக்குப் பயந்து நடப்பார் என்று ஊரில் உள்ளவர்கள் சொன்னார்கள். அதை நம்பி நான் சென்று பரமசிவத்தின் மனைவியிடம் சொன்னேன். இப்போ பரமசிவம் என்னுடன் பிரச்சினைக்கு வாறதில்லை" சிரித்தான் நடராசா.

"அவன் மனைவிக்குப் பயந்தவன். மனைவியைப் பெரிதும் விரும்பி அவளுக்கு அடங்கி நடப்பவர்கள் சிறந்த பயனை அடைய மாட்டார். கடமையையும் செய்ய முடியாதவராகவே இருப்பார். கடமையைப் பெரிதென்று நினைக்காமல் தனது மனைவியின் பெண்மையை விரும்புபவனின் செல்வம் வெட்கத்துக்குரியதாகி பெரும் வேதனையை அடையும். மனைவியிடத்தில் ஆண்மையின்றித் தாழ்ந்து நடக்கும் இழிவான தன்மையுள்ளவன் நல்லவர்களுடன்

பழக நாணப்படுவான். மனைவிக்கு அஞ்சி நடக்கின்ற மறுமைப் பயனில்லாத ஒருவன் செயலாற்றுவதில் வல்லவனாக இருந்தாலும், அதனால் பெருமை அடைய முடியாது. மனைவிக்கு அஞ்சி நடப்பவன் எப்பொழுதும் பெரியவர்களுக்கு நன்மை செய்யவும் அஞ்சுவான். மனைவியின் தோள்கள் தரும் இன்பத்திற்காக அஞ்சி வாழ்கின்றவர்கள் இவ்வுலகத்தில் தேவர்களைப் போலச் சிறப்பாக வாழ்ந்தாலும் பெருமை இல்லாதவர்களேயாவர். மனைவி ஏவிய ஏவல்களைச் செய்து வாழ்கின்றவனுடைய ஆண்மையை விட, இயல்பாக நாணத்தை உடைய பெண்மையே பெருமைக்குரியதாகும். மனைவியின் விருப்பிற்கேற்றபடி நடப்பவர், தனது நண்பர்களின் குறைகளையும் தீர்க்க மாட்டார். தான தருமமும் செய்ய மாட்டார். அறச் செயல்களையும் அதற்குக் காரணமாக அமையும் பொருள் தேடும் முயற்சிகளும் மற்றக் கடமைகளும் மனைவியின் ஏவலைச் செய்வோரிடத்தில் இருக்க மாட்டாது. எதையும் நன்றாக எண்ணி முடிவு காணும் மனவுறுதி உள்ளவர்கள் ஒரு போதும் மனைவியின் ஏவலுக்கு இணங்கி அறியாமையுடன் நடந்து கொள்ள மாட்டார்கள் என்று தெரிந்து தான் நீ நடந்திருக்கிறாய். அது ஊரவர்களுக்குத் தெரியும் அதைப் பயன்படுத்திப் பலர் வாழ்கிறார்கள்" என்றார் கதிரேசன்.

## அதிகாரம் - 92 வரைவில் மகளிர்

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். 911

பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். 912

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று 913

பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். 914

பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர் 915

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். 916

நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சில்
பேணிப் புணர்பவர் தோள். 917

ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. 918

வரைவுஇலா மாணிழையார் மென்தோள்
புரையிலாப் பூரியர்கள் ஆழும் அளறு. 919

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு 920

சிவநாதனுக்கு அன்று மதிய உணவு கிடைக்கவில்லை. கோயில் மண்டபத்தில் அன்று நேரத்துடன் உணவு முடிவடைந்து விட்டது. பசிக்களையுடன் மடத்திற்கு முன்னால் நின்ற வேப்ப மரநிழலில் படுத்திருந்தார். அப்போது ரேவதியும் இன்னும் ஒருவனும் ஆடம்பரமான ஒரு மோட்டார் வண்டியில் சென்றனர். அவளைக் கண்டதும் அவருக்குப் பழைய நினைவுகள் நினைவுக்கு வந்தன. அப்போது சிவநாதன் பெரும்

பணக்காரன். மனைவி பிள்ளைகளை விட்டு விட்டு அவளே தஞ்சமெனக் கிடந்தார். மனைவியின் வேண்டுகோளுக்காக் கதிரேசன் வந்து சொன்ன வார்த்தைகள் காதில் ஒலித்தன; “சிவநாதா, அன்பு காரணமாக விரும்பாமல் பொருள் காரணமாய் விரும்பும், விலைமகளிரின் இனிய சொற்கள் தீமையைத் தான் தரும். கொடுக்கும் பொருளின் அளவிற்கேற்ப இனிய சொற்களைப் பேசுகின்ற நற்குணமில்லாத விலை மகளின் நடத்தையை எண்ணிப் பார்த்து அவளை மனத்தாலும் நினைக்கக் கூடாது. பொருளுக்காகத் தழுவும் விலை மகளின் பொய்யான தழுவல், இருட்டறையில், தொடர்பில்லாத ஒரு பிணத்தைத் தழுவுவது போன்றது. பொருளையே பெரிதென்று எண்ணும் பொது மகளிர் தரும் அற்பமான இன்பத்தை அருளுடைய பெரியவர்கள் விரும்பமாட்டார்கள்”.

“அறிவு என்ற பெரு நலத்தால் பெருமை பெற்றவர்கள், பொருள் கொடுக்கின்ற எல்லோருக்கும் இன்பத்தைக் கொடுக்கின்ற விலை மாதரின் இழிந்த தொடர்பை விரும்ப மாட்டார்கள். தம் அழகால் கர்வங் கொண்டு இழிவான இன்பத்தை விற்பனை செய்யும் விலை மகளிரின் தோள்களை அறிவுடையோர் தழுவமாட்டார்கள். ஒழுக்க நெறியைத் தம் உள்ளத்தில் நிலை நிறுத்த முடியாதவர்கள் தான் தன் உள்ளத்தில் வேறு பொருட்களை விரும்பிக் கூடும் தன்மையுடைய விலைமகளிரின் தோளைத் தழுவுபவர் வஞ்சனை நிறைந்த பொது மகளிரின் இயல்பை அறியாதவர்களே, அவர்கள் கொடுக்கும் இழிந்த இன்பத்தை

மோகினி மயக்கு எனக்கருதுவர். ஒழுக்கமில்லாத விலை மகளிரின் தோள்கள் அறிவற்ற இழிந்தவர்கள் ஆழ்ந்து கிடக்கும் நரகமாகும். இருமனம் கொண்ட விலை மாதர்கள், கள், சூது ஆகிய இம்மூன்றும் திருமகளால் வெறுக்கப்பட்டவர்களின் உறவுகளாகும்." என்று கதிரேசன் கூறிய போது ஏற்றிருந்தால் இன்று இந்த நிலைக்கு ஆட்பட்டிருக்க மாட்டேன்" என்று எண்ணிக் கலங்கினார் சிவநாதன்.

**அதிகாரம் - 93 கள் உண்ணாமை**

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார். 921

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார் 922

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்தக் களி 923

நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. 924

கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். 925

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்உண் பவர். 926

உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர். 927

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சகத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். 928

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 929

கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. 930

இரவு பத்து மணி இருக்கும் நடராசா நன்றாகக் குடித்து விட்டுப் பாட்டொன்ன்றைப் பாடியபடி சென்றான். அந்தப் பாடல் சிவநாதனுக்குத் தனது பழைய வாழ்வை நினைவூட்டியது. அப்போ அவன் நண்பர்களோடு சேர்ந்து குடித்து விட்டு மனைவியோடு சண்டை பிடிப்பான். அவனது மனைவி கதிரேசனது இரத்த உறவினள். அதனால் கதிரேசன் வந்து புத்திமதிகள் கூறுவார்; 'சிவநாதா கள்ளுக் குடிப்பது பாவம். அதை விடக் குடித்து விட்டு மனைவி பிள்ளைகளைத் தாக்குவது பெரும் பாவம். கள் மயக்கத்திற்கு ஆட்பட்டவர்களைக் கண்டு பகைவர்கள் அஞ்ச மாட்டார்கள். அத்தீய பழக்கத்தால் தமக்குள்ள புகழையும் இழப்பார்கள். கள்ளைக் குடிக்கக் கூடாது. மதிப்பைப் பெற விரும்பாதவர்கள் மட்டும் கள்ளைக் குடிக்கலாம். கள் உண்பவர்களைக் கண்டால் பெற்ற தாயின் முகமே வெறுப்படையும். அவ்வாறாயின் குற்றத்தைக் கண்டிக்கும் சான்றோரின் முகம் எவ்வாறு இருக்கும்? நாணம் என்று சொல்லப்படும் நல்லாள் கள் அருந்துபவனுக்குத் தனது முகத்தைக் காட்டாது சென்று விடுவாள். ஒருவன் பொருளைக் கொடுத்து கள்ளைக் குடித்துத்

தன்நிலை மறப்பதற்குக் காரணம், என்ன செய்கிறோம் என்று புரிந்து கொள்ள முடியாத அறியாமையே ஆகும். உறங்கியவர், இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர். அவ்வாறு கள் அருந்தியவரும் அறிவு மயங்கியமையால் நஞ்சுண்டவராகவே கருதப்படுவர். மறைந்திருந்து கள்ளைக் குடித்தாலும் அது மயங்கிச் செயலாற்றும். அதனால் ஊரவர் இழிவாகக் கதைத்துச் சிரிப்பார்கள். கள் அருந்துபவன் நான் கள்ளுண்டறியேன் என்று சொல்லக்கூடாது. ஏனென்றால் கள் உள்ளத்தில் உள்ள குற்றங்களை வெளிப்படுத்தி விடும். கள்ளுண்பவர்களைத் திருத்த மேற்கொள்ளும் முயற்சி தீக்குள் மூழ்கியவனைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது. கள்ளுண்பவன், கள்ளுண்ணாத போது கள்ளுண்டு தன் நிலையறியாது மயங்கி அலங்கோலமாகக் கிடப்பவனைக் கண்டு தானும் கள்ளுண்ட பின் இந்நிலையில் தானே இருப்பேன் என்று எண்ணுகிறான் இல்லையே" கதிரேசனது வார்த்தைகள் இடியாக முழங்கின.

## அதிகாரம் - 94 சூது

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. 931

ஒன்றுஎய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு. 932

உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். 933

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதுஒன்று இல். 934

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார். 935

அகடுஆரார் அல்லல் உழப்பர் சூது என்னும்
முகடியான் மூடப் பட்டார். 936

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். 937

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது 938

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். 939

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர். 940

தான் வாலிப மிடுக்காலும் பணச்செருக்காலும் செய்த தீய செயல்களை நினைத்துப் பார்த்தார் சிவநாதன். மனைவி கதிரேசனின் நெருங்கிய இனத்தவளாய் இருந்ததால் கதிரேசன். அவரின் வாழ்வில் அடிக்கடி குறுக்கிட்டார். அவர் கூறியபடி வாழ்ந்திருந்தால் இன்று இந்த அவலம் நேர்ந்திராது. ஒரு முறை சூதாடும் இடத்திற்கு வந்த கதிரேசன் கூறிய வார்த்தைகள் சிவநாதனின் நினைவுக்கு வந்தன; “சிவநாதா, தொடர்ந்து வெற்றி கிடைத்தாலும் கூடச் சூதாடுதலை விரும்பக் கூடாது. அந்த வெற்றி, தூண்டிலில் உள்ள உணவுப் பொருளை மீன் விழுங்குவதை ஒத்தது. ஒரு பொருளைப் பெறும் போது நூறு

பொருட்களை இழக்கும் சூதாடிகளுக்கு ஒரு போதும் நல்ல வாழ்வு அமையாது. ஒருவன் உருளும் கருவியைப் பயன்படுத்திச் சூதாடினால், அவனுடைய பொருட்கள் யாவும் உருண்டோடிச் சென்று பகைவரை அடைத்து விடும். ஒருவனுக்குத் துன்பங்கள் பலவற்றையும் உண்டாக்கி அவனுடைய புகழைக் கெடுத்து வறுமையைத் தருவது சூதாட்டத்தை தவிர வேறெதுவும் இல்லை. சூதாட்டக் கருவியையும், சூதாடும் இடத்தையும், சூதாட்டத்தையும் கைவிடாதவர்கள் எல்லாச் செல்வங்களை உடையவர்களாக இருந்தாலும் எதுவுமில்லாதவராகி விடுவர். சூது என்று சொல்லப்படும் மூதேவியால் விழுங்கப்பட்டவர், வயிறு நிறைய உண்ணக்கூட வழியற்றவராகிப் பெரும் துன்பப்படுவர். சூதாடும் இடத்தில் காலங்கழிப்பவன் தன் பரம்பரைச் சொத்துக்களையும் நல்ல குணங்களையும் இழந்து விடுவான்.

“சூது உள்ள பொருட்களையும் அழித்துப் பொய் சொல்ல வைத்து அருளையும் அழித்துப் பல்வேறுபட்ட துன்பங்களைக் கொடுக்கும். சூதாடுதலை ஒருவன் மேற்கொண்டால், அது புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தையும் சேராமற் பண்ணும். பொருளை இழக்க இழக்க சூதின் மேற்பற்று உண்டாகும். அதுபோல துன்பத்தின் மேல் துன்பம் வந்தாலும் வாழ்க்கையின் மீதுள்ள பிடிப்பு அதிகரித்துக் கொண்டே இருக்கும்”. “கதிரேசன் சொன்னதைக் கேட்டிருந்தால் இந்நிலை வந்திராது” என்று கவலைப் பட்டார் சிவநாதன்.

## அதிகாரம் - 95 மருந்து

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. 941

மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். 942

அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு. 943

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. 944

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு. 945

இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய். 946

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். 947

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் 948

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல் 949

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து. 950

திருநாவுக்கரசிற்கு நோய் உண்டானதால் அவர் கதிரேசனது வீட்டுக்கு வரவில்லை. அதனால் கதிரேசன் திருநாவுக்கரசுவின் வீட்டுக்குச் சென்றார்; "நேற்றுக் கறி வகைகள் சுவையாக இருந்தன. நெய்யையும் கூடுதலாகச் சாப்பிட்டு விட்டேன்" என்றார் திருநாவுக்கரசு.

"நீ ஒரு சாப்பாட்டுப் பிரியன். கண்டவற்றையெல்லாம் உண்பாய். மருத்துவ நூலோர் வாதம், பித்தம், சிலேத்துமம் என்று கூறியுள்ள மூன்றும் அளவிற்குறைந்தாலும் நோய்களை உண்டாக்கும். முன்னர் உண்ட உணவு சமிபாடு அடைந்து விட்டது என்பதை அறிந்த பின்பு, அடுத்தவேளை உணவை அளவோடு உண்டால் மருந்து அருந்த வேண்டியதில்லை. முன் உண்ட உணவு சமித்த பின் அளவோடு சத்தான உணவை அறிந்து உண்பதே ஆரோக்கியமான வாழ்விற்கு வழியாகும். முன்னர் உண்ட உணவு சமிபாடடைந்த பின், தன் உடம்பிற்கு ஏற்ற உணவுகளை அறிந்து, அளவோடு நல்ல உணவு வகைகளை அறிந்து பசித்த பின்பு உண்பதே ஆரோக்கியமானது. ஒவ்வாத உணவு வகைகளை ஒதுக்கி, அளவுக்கதிகமாக உண்ணாமல் வாழ்கின்றவனுடைய உடம்பில் வாழ்க்கையில் துன்பங்களைத் தரும் நோய்கள் உண்டாக மாட்டா. சத்தான உணவு வகைகளை அளவோடு உண்பவனின் வாழ்வில் இன்பம் நிலைத்திருக்கும். அளவுக்கதிகமாக உண்பவனின் வாழ்க்கையில் துன்பமே நிலைத்திருக்கும். பசித்தீயின் அளவை அறிந்து உண்ணாதவனின் உடலை பல்வேறு வகையான நோய்கள் தாக்கும். நோய் என்னதென்று

ஆராய்ந்தறிந்து, அந்த நோய் ஏற்பட்டதற்கான காரணத்தையும் அறிந்து, அதைத் தீர்க்கும் வழி வகைகளையும் ஆராய்ந்தறிந்து, உடல் நிலைக்கேற்றவாறு செய்யப்படுவதே மருத்துவம். மருத்துவன் நோயாளியின் வயது, உடலின் தன்மை, நோயின் தன்மை, எவ்வளவு காலமாக நோய் உள்ளது என்பவற்றை ஆராய்ந்து மருத்துவம் செய்தல் வேண்டும். நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, அருகில் இருந்து காலம் தவறாது மருந்தினைக் கொடுப்பவன் என மருத்துவமுறை நான்கு பகுதிகளைக் கொண்டது. அதன்படி நீ நடப்பதில்லை. அதனால் தான் துன்பப்படுகிறாய்" என்றார் கதிரேசன் .

## அதிகாரம் - 96 குடிமை

இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. 951

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 952

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. 953

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 954

வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று. 955

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார். 956

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. 957

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும். 958

நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலததிற் பிறந்தார்வாய்ச் சொல். 959

நலம்வேண்டின் நாணுடமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 960

கதிரேசனும் திருநாவுக்கரசுவும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் பரமசிவத்தைப் பார்க்கச் சென்றனர். அவர்களைக் கண்டதும் ஆத்திரமிகுதியால் கத்தினார் பரமசிவம்; “என்னிடம் பணம் இருக்கு. உங்களைக் கொலை செய்விப்பேன்” என்று கூறும் போது வைத்தியர் பார்வையாளரை வெளியே செல்லும்படி கூறினார். இருவரும் வெளியே வந்தனர். அவர்களைக் கண்ட சிவநாதன் சொன்னான்; “நீங்கள் ஏன் வந்தீர்கள்? நடுவுநிலைமையும் நாணமும் உயர்ந்த குடியில் பிறந்தவரிடத்தில் அல்லாமல் மற்றவர்களிடத்தில் இயல்பாக ஒன்று சேர்ந்து அமைவதில்லை. உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கம், உண்மை, நாணம் என்ற மூன்றிலிருந்தும் தவறாமல் இயல்பாகவே நல்ல வழியில் வாழ்வார்கள். முகமலர்ச்சி, கொடுத்துதவும் தன்மை

இனியசொல், பிறரை இழிவாக எண்ணாமல் இருப்பது என்னும் நான்கு வகையான நற்பண்புகளும் நல்ல குடிப்பிறந்தவரிடத்தில் தவறாது இருக்கும். கோடி கோடியாகப் பொருளைக் கொட்டிக் கொடுத்தாலும், உயர்குடியினர் ஒழுக்கக் கேடான செயல்கள் எதையும் செய்யமாட்டார்கள். தாம் பிறருக்குக் கொடுத்துதவும் சான்றாண்மை வறுமையால் சுருங்கிய போதும் பெருமைக்குரிய குடியிற் பிறந்தவர்கள் தமது குணத்தைக் கைவிடமாட்டார்கள்.குடிப் பண்பு கெடாது வாழ்வோம் என்று உறுதி பூண்டவர்கள், வஞ்சனை கொண்டு பெருமை தராத செயல்களை ஒரு போதும் செய்ய மாட்டார்கள். உயர்ந்த குடியில் பிறந்தவரிடத்தில் உண்டாகும் குற்றம், வானத்து நிலவில் காணப்படும் களங்கம் போல எல்லோருக்கும் தெரியும். ஒருவனது நற்பண்புகளுக்கிடையே பண்பற்ற செயல்கள் காணப்பட்டால், அவன் நற்குடியில் பிறந்தவன் தானா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும். நிலம் எத்தன்மையது என்பதை அதில் முளைக்கும் பயிர்காட்டி விடும். அது போல, ஒருவனது வாய்ச்சொல் அவன் எத்தகைய குடியிற் பிறந்தவன் என்பதைக் காட்டி விடும். ஒருவனுக்கு நல்வாழ்வு வேண்டுமானால் அவன் நாணம் உடையவனாக வாழ வேண்டும். பிறந்த குடி உயர்வடைய வேண்டுமானால் பணிவுடையவனாக வாழ வேண்டும்.” என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நற்பண்புகள் எதுவுமில்லாதவனான பரமசிவத்தை மதித்து வந்த நீங்கள் உண்மையில் நற்குடிப் பிறந்தவர்கள்” என்றார் சிவநாதன்.

## அதிகாரம் - 97 மானம்

இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல். 961

சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். 962

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 963

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. 964

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 965

புகழின்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை. 966

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின்
அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று. 967

மருந்தோமற்று ஊனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து. 968

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 969

இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு. 970

“சிவநாதா, நீ பெருந் தனவந்தனாக இருந்தவன். உனது நடத்தைகளால் தான் நீ அழிந்தாய். இப்போ சகலவற்றையும் உணர்ந்து திருந்தி விட்டாய். அதனால் நான் உனக்கு வேண்டியளவு பணம் தருகிறேன். முன்னைய தொழிலைச் செய்; “இன்றியமையாத பல சிறப்புக்கள் வருவதாக இருந்தாலும் குடிப் பெருமையைக் கெடுக்கக் கூடிய செயல்களை ஒருபோதும் செய்யக்கூடாது. புகழையும் ஆண்மையையும் போற்றி வாழ விரும்புவர்கள் புகழ்தேடும் வழியிற் கூடத் தம் குடிப்பெருமைக்கு இழுக்கு நேரும் செயல்களைச் செய்ய மாட்டார்கள். செல்வம் பெருகி வரும் போது பணிவு வேண்டும். வறுமைப்பட்ட காலத்தில் தலை நிமிர்ந்து நடக்கும் தன் மானம் வேண்டும். உயர்ந்த ஒழுக்க நிலையில் இருந்து வழுவியோர் உதிர்ந்த மயிருக்கு ஒப்பானவர்கள். மலை போல உயர்ந்த பெருமையை உடைய ஒருவர், பண்பற்ற செயல்களை ஒரு குன்றிமணி அளவு செய்தாலும் தாழ்ந்து போவார். தன்னை மதியாது இகழ்பவரின் பின் சென்று வாழ்பவருக்குப் புகழும் கிடையாது, வானுலகில் சிறப்பாக வாழும் வாழ்வும் கிடையாது. தன்னை மதிக்காத பகைவரின் பின் சென்று வாழ்வதை விட அவ்வாறு செல்லாது வாழ்ந்து அழிந்தான் என்று சொல்லப்படுவதே நல்லது. உயிருக்கு நிகரான மானம் போன பின், தன் உடம்பை மட்டும் காத்து வாழும் வாழ்க்கை சாவாமைக்கு மருந்தாகுமா? தன் உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர், தனது மானம் அழிய நேர்ந்தால் உடனே உயிரை விட்டு விடுவார்.

மானங்கெட்ட பின் உயிர் வாழாத தன் மானம் உடையவரின் புகழை உலகத்தில் உள்ளவர்கள் தொழுது ஏற்றிப் புகழ்வர்" என்று பெரியவர்கள் சொன்னதை உனக்குச் சொல்லியுள்ளேன். இனியாவது அப்படி நடந்து குடிப்பெருமயைக் காப்பாற்று" என்றார் கதிரேசன்.

## அதிகாரம் - 98 பெருமை

ஒளியொருவற்கு உள்ள வெறுக்கை இளியொருவற்கு
அ.்.திறந்து வாழ்தும் எனல். 971

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 972

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். 973

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. 974

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். 975

சிறியார் உணர்ச்சியுள் இல்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு. 976

இறப்பே புரிந்த தொழிற்றாஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின். 977

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை

அணியுமாம் தன்னை வியந்து. 978

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். 979

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 980

சிவநாதன் விம்மி விம்மி அழுதான். அவனால் பேசமுடியவில்லை; "நீ நல்ல குடியில் பிறந்தவன். ஊக்கத்துடன் உழைத்தவன். பின் தீய செயல்களைச் செய்து கெட்டு விட்டாய். இனியாவது பெருமையுடன் வாழ்ந்து உனது குடும்பத்தை உயர்த்து. ஊக்கம் தான் ஒருவனது ஒளி மயமான வாழ்க்கைக்குக் காரணம் அவனது தாழ்வுக்குக் காரணம் ஊக்கமில்லாமல் வாழ்ந்தும் முன்னேறலாம் என்று நினைப்பது. எல்லா உயிர்களுக்கும் பிறப்பென்பது ஒரே தன்மையானது. ஆனால் வாழ்வில் உயர்வு தாழ்வு என்பது அவர்கள் செய்கின்ற தொழில்களில் உள்ள வேறுபாடுகளைப் பொறுத்தது. மேல் நிலையில் வாழ்ந்தாலும் மேலான பண்புகள் இல்லாதவர் மேலானவராகக் கருதப்பட மாட்டார். கீழான நிலையில் வாழ்ந்தாலும் இழிவான குணங்கள் இல்லாதவர் கீழ் மக்கள் ஆக மாட்டார்கள்".

"கற்பு நெறி தவறாத மகளிரைப் போல ஒழுக்கமாக வாழ்பவன் எப்பொழுதும் புகழுடன் வாழ்வான். பிறர் செய்ய முடியாதென்று கைவிட்ட அரிய செயல்களை முறை அறிந்து

செய்து முடிப்பவனே பெருமைக்குரியவன். பெரியவர்களைப் போற்றி வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம், அவர்களின் பெருமைகளை உணராத இழிந்தவர்களிடம் இருப்பதில்லை. இழிந்தவர்களிடம் செல்வமும் சிறப்புக்களும் சேர்ந்து விட்டால், அவர்கள் வரம்பு மீறிய தீயசெயல்களைச் செய்வார்கள். பெருமையானவர்கள் எக்காலத்திலும் பணிவுடன் வாழ்வார்கள். சிறுமையானவர்கள் தம்மைத்தாமே பெரியவர் என்று நினைத்து தம்மைப் புகழ்ந்து திரிவார்கள். செருக்கில்லாமல் வாழ்வது தான் பெருமை. கர்வம் கொண்டு அழிவது சிறுமை. பிறரின் குறைபாடுகளை மறைப்பது பெருமையானது. பிறருடைய குற்றங்களைப் பெரிதுபடுத்துவது சிறுமையானது. இதைத் தான் நீ இவ்வளவு காலமும் செய்தாய். அதனால் தான் சகலவற்றையும் இழந்தாய். இனியாவது இவற்றை உணர்ந்து வாழ்" என்றார் கதிரேசன்.

## அதிகாரம் - 99 சான்றாண்மை

கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு 981
குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று. 982
அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண். 983
கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை

சொல்லா நலத்தது சால்பு 984

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 985

சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். 986

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 987

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின். 988

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார். 989

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலத்தான்
தாங்காது மன்னோ பொறை. 990

"ஐயா நீங்கள் எனது நெருங்கிய உறவினன். அத்துடன் ஊரார் மதிக்கும் பெரியவர். சான்றாண்மைக்குரிய குணங்கள் அத்தனையும் உள்ளமையால் தான் எனக்கு உதவுகின்றீர்கள். கடமையை உணர்ந்து போற்றும் நல்ல குணமுடையவர்கள் நல்லவை அனைத்தையும் செய்வது தமது கடமை என்று நினைப்பார்கள். சான்றோர்களின் சிறப்பு என்று கூறப்படுவது அவர்களின் குணங்களின் சிறப்பே ஆகும். அது வேறு எவற்றிலும் இல்லை. அன்பு, நாணம், உதவும் பண்பு. இரக்கம், உண்மை ஆகிய ஐந்தும், சால்பு என்ற மண்டபத்தைத்

தாங்கும் தூண்கள் ஆகும். தவம் என்பது கொல்லாமையை அடிப்படையாகக் கொண்டது. சால்பு என்பது பிறர் செய்யும் தீமையை எடுத்துச் சொல்லாத நல்ல பண்பினை அடிப்படையாகக் கொண்டது. ஆற்றல்களில் மிகச் சிறந்த ஆற்றல் அடக்கமாகும். அது பகைவர்களையும் வசப்படுத்தும் ஆயுதமாகும். தம்மைவிடத் தாழ்ந்தவர்களிடமும் தனது தோல்வியை ஒத்துக் கொள்ளும்படி தன்மையை தான் அவரது சால்பினை உரைத்துப் பார்க்கும் உரைகல் ஆகும். தமக்குத் துன்பம் செய்தவர்களுக்கும் தாம் நன்மை செய்யவில்லையென்றால், தன்னுடைய சால்பு என்ன பயன் உடையது? சால்பு என்னும் மனவுறுதி உள்ளவர்களுக்கு, பொருள் இல்லாத வறுமை இழிவானது அல்ல. சால்பு என்னும் தன்மைக்குக் கடல் என்று மதிக்கப்படுபவர், உலகம் அழிந்து போகும் ஊழிக்காலம் வந்தாலும் தன் நிலையில் இருந்து மாறுபாடு அடைய மாட்டார். சான்றோரிடத்துச் சால்பு நிறைந்த பண்பு குறைபடுமானால் பூமியால் கூடத் தன் பாரத்தைத் தாங்க முடியாத நிலை ஏற்படும்" என்று பெரியவர்கள் கூறியதற்கேற்ப வாழ்ந்து வருகிறீர்கள். அதனால் தான் இப்பாவியை மன்னித்து உதவுகிறீர்கள்" என்று அழுதான் சிவநாதன்.

## அதிகாரம் - 100 பண்பு உடைமை

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 991

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 992

உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. 993
நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு. 994
நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. 995
பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன். 996
அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர். 997
நண்புஆற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்புஆற்றா ராதல் கடை. 998
நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள். 999
பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. 1000

கதிரேசன் கொடுத்த பணத்தைக் கொண்டு மீண்டும் தான் முன்பு செய்த வர்த்தகத்தை ஆரம்பித்தார் சிவநாதன். பிரிந்து சென்ற அவரது குடும்பத்தினரையும் சேர்த்து வைத்தார் கதிரேசன். வியாபாரம் நல்ல முறையில் நடைபெற்றது. திருநாவுக்கரசு சிவநாதனது வியாபார நிலையத்திற்கு வந்தார்.

அவரை எழுந்து நின்று வணங்கி வரவேற்ற சிவநாதன் சொன்னார்; “உங்களின் உதவியாலும் கதிரேசனின் கருணையினாலும் நான் மீண்டும் வசதியுள்ளவன் ஆகிவிட்டேன். எல்லோருடனும் எளிமையாகவும் பண்பாகவும் பழகுவது தான் பண்புடைமை. அதுதான் பெரியவரான கதிரேசனின் பண்பு. அன்புடையவராக இருத்தல், நல்ல குடியில் பிறத்தல் ஆகிய இரண்டும் பண்புடன் வாழும் இரு வழிகளாகும். உடம்பால் ஒத்திருக்கும் எல்லோரும் மக்களால் மதிக்கப்படமாட்டார்கள். நல்ல பண்புகள் பலவும் இருப்போரே மக்களால் மதிக்கப்படுபவராவர். அறத்துடனும் பிறருக்கு நலம் செய்யும் பண்புடனும், விரும்பிப் பிறருக்கு பயன்படும் படி வாழும் பெரியவர்களை உலகத்தார் போற்றிக் கௌரவிப்பர். விளையாட்டாகக் கூட ஒருவனை இகழ்ந்தால், அது அவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும். பிறரின் இயல்பை அறிந்து நடப்பவர்கள் பகைவரோடும் பண்பாகவே நடந்து கொள்வர். பண்புள்ளவர்கள் உலகத்தவரோடு சேர்ந்து வாழ்வதால் தான் உலகம் அழியாமல் இருக்கிறது. இல்லாவிட்டால் உலகம் மண்ணோடு மண்ணாகி அழிந்திருக்கும். ஒருவர் அரத்தைப் போன்ற கூர்மையான அறிவுடையவராக இருந்தாலும், அவரிடம் மனிதப் பண்புகள் இல்லாதிருந்தால் அவர் மரத்தைப் போன்றவராவார். நட்புக் கொள்ள முடியாத தீய பண்புகள் இல்லாதவராக இருந்தாலும் பண்புடையவராக நடக்காதவர் இழிந்தவராகவே கருதப்படுவார். பிறரோடு அன்புடன் கலந்து பழகி மகிழ முடியாதவருக்குப்

பகல்வேளையும் இரவாகவே இருக்கும். நல்ல பண்புகள் இல்லாதவனிடத்தில் இருக்கும் செல்வம், அசுத்தமான பாத்திரத்தில் பாதுகாக்கப்பட்ட தூய்மையான பாலைப் போன்றதாகும்" என்று பெரியவர்கள் கூறியுள்ளதற்கேற்ப வாழும் கதிரேசன் என்னைப் பொறுத்தவரை கடவுள்" என்றார் சிவநாதன்.

## அதிகாரம் - 101 நன்றியில் செல்வம்

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அ.ஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல். 1001

பொருளானாம் எல்லாமென்று ஈயாது இவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு 1002

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. 1003

எச்சம்என்று என்எண்ணும் கொல்லோ ஒருவரான்
நச்சப் படாஅ தவன். 1004

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். 1005

ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்று
ஈதல் இயல்பிலா தான். 1006

அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று. 1007

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று 1008

அன்பொரீஇத் தற்செற்று அறம்நோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர். 1009

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து. 1010

தான் பெற்ற பணத்தின் சிறுதொகையைக் கொடுப்ப - தற்காகச் சிவநாதன் கதிரேசனின் வீட்டுக்கு வந்தார்;